**முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தம்:**
காலத்தின் தேவையா?
13










# மீள்பார்வை

මීල්පාර්වෙ

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/63/NEWS/2016 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
www.meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 355 • 04 நவம்பர் 2016 வெள்ளிக்கிழமை • ஸபர் 1438 • விலை 40.00







- காதிகளாக பெண்கள்
- 18 வயதுக்கு முன்னர் பெண்கள் திருமணம் முடிக்க முடியாது
- திருமணத்தில் பெண்ணின் சம்மதம் எழுத்து மூலம் பெறப்பட வேண்டும்
- பலதார மணத்துக்கு முதல் மனைவியின் அனுமதி வேண்டும்

# முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தம் விரைவில்

65 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாதிருந்த முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவருவதற்கான மற்றுமொரு குழுவை அரசாங்கம் நியமித்ததில் இருந்து இந்த விவகாரம் மீளவும் சூடு பிடித்து வருகிறது. 2009 ஆம் ஆண்டில் அப்போதைய நீதியமைச்சர் மிலிந்த மொரகொடவினால் நியமிக்கப்பட்ட நீதியரசர் ஸலீம் மர்சூப் தலைமையிலான குழுவினர் தமது அறிக்கையை 07 வருட காலத்திலும் சமர்ப்பிக்காத நிலையிலேயே இந்தக் குழு தற்போது நியமிக்கப்பட்டுள்ளது.

(பக்.14)

**20 வருட இலட்சியப் பயணம்**

மீள்பார்வை வார ஆரம்ப விழாவும்
கௌரவிப்பு நிகழ்வும்

பிரதம அதிதி
**இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்**
தலைவர் – தேசிய தகவல் நிலையம்

**2016-11-16 புதன் மாலை 6.30**
கொழும்பு
தபால் தலைமையகக் கேட்போர் கூடம்

Contact:
Mifrah Mustafa
077 2435146

உங்கள் வருகையையும் எதிர்பார்க்கிறோம்

## மத நம்பிக்கை சார்ந்த விடயங்களை நிபந்தனைகளாக முன்வைக்கக் கூடாது



ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக் கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள முஸ்லிம் திருமணச் சட்டம் தொடர்பான நிபந்தனைகள் நீக்கப்பட வேண்டுமென கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றக் குழுவினரிடம் வலியுறுத்தியுள்ளார்.

தனிப்பட்ட சமூகத்தின் மத நம்பிக்கை சார்ந்த விடயங்களை நிபந்தனைகளாக முன்வைப்பதை தவிர்த்து, இலங்கையில் தற்போது விரவிக் காணப்படும் இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கான பொறிமுறைகளை (பக்.14)

## அரசியல் யாப்பு தொடர்பாக ஒரு வசனம் கூட இதுவரை வகுக்கப்படவில்லை

**- கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன**



சிறுபான்மைச் சமூகங்களது நலன்களையும் உள்வாங்கி நவீன அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அரசியல் யாப்பு தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆறு குழுக்களும் அவற்றின் அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளன.

அடுத்த வாரத்திற்குள் இவை மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்படும். வழி காட்டல்குழு பிரதமர் தலைமையில் செயற்பட்டு வருகின்றது. சகல கட்சிகளதும் பிரதிநிதிகள் இதில் இடம் பெற்றுள்ளார்கள். தேர்தல் முறை பற்றிய ஆலோசனைகளும் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன. (பக்.14)

## வடக்கின் ஆவா கோத்தபாயவின் உருவாக்கமே



யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வரும் 'ஆவா' குழுவுக்கு இராணுவத்தினரின் உதவி இருக்கின்றதா? என்ற சந்தேகம் எழுப்பியுள்ள வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஷ்வரன், யாழில் தற்பொழுது நிலவும் நிலவரங்களைக் கருத்தில் கொண்டு புத்திசாதுரியமாக செயற்படுமாறு தமிழ் மக்களை கேட்டுள்ளார்.

ஆவா குழு, பிரபாகரன் படையணி, சன்னா குழு போன்ற பெயர்களில் வெளிப்படும் குழுக்கள் வெளியிட்டதாக கூறப்படும் அறிவித்தல்களில், தமிழ் மக்களைச் சூழ சில மோசமான செயல்கள் இடம்பெறுவது தெளிவாகின்றது எனவும் முதலமைச்சர் கூறியுள்ளார். (பக்.14)



வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது இனச் சுத்திகரிப்பாகும். வடக்கு முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு முன்னுரிமை கொடுத்து அவர்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட வேண்டும்.

சுமந்திரன் எம்.பி.

## சிங்கள முஸ்லிம் பிளவுகளை ஏற்படுத்த மீண்டும் முயற்சி



முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் முறுகல் நிலைகளைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகள் நாட்டில் மீளவும் தலையெடுத்து வருகின்றன. மும்மானையில் முஸ்லிம் பாடசாலை மைதானம் விஸ்தரிப்பு, வெளிமடை பாடசாலைக்கான புதிய கட்டடம் அமைப்பதைத் தடுப்பது என்ற தொடரில் தற்போது மத்திய கிழக்கிலுள்ள நாடுகள் இலங்கையில் செய்யும் முதலீடுகளுக்கும் முட்டுக்கட்டைகள் போடப்பட்டு வருகின்றன.

சிவனொளிபாத புனித மலைக்கருகே ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார், அபுதாபி உட்பட்ட மத்திய கிழக்கு நாடுகள் காணி களை கொள்வனவு செய்து ஹோட்டல்களை நிறுவி முஸ்லிம் குடியேற்றங்களையும் பள்ளிவாசல்களையும் நிறுவுவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக பொது பல சேன எச்சரித்துள்ளது.

பொதுபல சேனாவின் ஞானசார தேரரின் கூற்றை பொய்யென மறுக்கும் ஊடகத்துறை பிரதியமைச்சர் கருபரணவிதாரண, (பக்.14)

## முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலரின் கருத்தை முஸ்லிம் சமூகத்தின் கருத்தாகக் கொள்ளக் கூடாது



இலங்கையின் இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாக தமிழர்களினால் முன்வைக்கப்படுகின்ற இணைந்த வடக்கு கிழக்கு தொடர்பாக அண்மையில் இரா. சம்பந்தன் அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி உரையாடல்களை ஆரம்பித்துள்ளது.

அண்மைக் காலமாக வடக்கு கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் ஆதரவு தர வேண்டும் என்ற கோஷம் தமிழர் தரப்பிலிருந்து விடுக்கப்பட்டு வந்த போதும், முஸ்லிம் தரப்பிலிருந்து அறிக்கைகள் வெளியிடப்பட்டனவே தவிர நேரடிக் கலந்துரையாடல்கள் நடைபெறாத நிலையிலேயே ந.தே.முன்னணியின் தலைவர் பொறியியலாளர் அப்துர் ரஹ்மான், எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஆகியோருக்கிடையிலான உரையாடல் நடைபெற்றிருக்கிறது.

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட 26 ஆவது வருட நினைவு கூறல் நிகழ்வில் கலந்து கொண்டு பேசியபோது சம்பந்தன் அவர்கள் பேசிய கருத்துக்கள் தொடர்பில் பொறியியலாளர் அப்துர் ரஹ்மான் (பக்.14)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்மாதிரிமிக்க குழந்தை வளர்ப்பு

'இவ்வளவு தான் இவ்வுலக வாழ்க்கை. எனதிறைவன் இதுவரை காலமும் எனக்கருள்களை மாத்திரமே பொழிந்த வண்ணமிருந்தான். அதே போல் இன்று முதன்முறையாக பேரிழப்பையும், மிகப்பெரும் சோதனையையும் வழங்கியுள்ளான். ஈமானின் சுவையை முழுமையாக சுவைக்க இறைவன் எனக்கொரு சந்தர்ப்பமளித்துள்ளான்' என உஸ்தாத் அகார் அவர்களின் பாரியாரின் ஜனாஸா அன்று அன்னாரின் மகள்களில் ஒருவர் கூறியுள்ளார். இதைக் கேட்டதும் எனதுடல் சிலிர்த்துக் கொண்டு சென்றது.

தனது அன்புக்குரிய தாயை தன்னருகே மரணித்தவராக வைத்துக் கொண்டு பேசிய இந்த திடகாத்திரமான வார்த்தை என்னை ஒரு கனம் உலுக்கி விட்டது.

அச்சகோதரியின் தைரியமான வார்த்தையும், இறைவனுடனான ஆழ்ந்த நம்பிக்கையும் உருவாகக் காரணம் உடலளவில் மறைந்து, உள்ளத்தளவில் எம்முடன் நீங்காத நினைவை விதைத்து நாளாந்த வேலைகளில் கவனம் செலுத்த முடியாதளவு சோகத்தில் ஆழ்த்திச் சென்ற அச்செம்மலின் குழந்தை வளர்ப்பே சான்று பகர்கின்றது. அல்ஹம்து லில்லாஹ்!

**- சியாப் முஹம்மத்**

### விபத்தில் மரணிப்பதும் ஷஹீதின் அந்தஸ்த்தை வழங்கும் என்பது பல சட்ட அறிஞர்களின் பத்வாவாகும்.

ஜனாஸா தொழுகையில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஜனாஸாவின் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என்பது பல ஸஹீஹான ஹதீஸ்கள் காட்டும் கருத்தாகும்.

மக்களால் நல்லவர் என புகழப்பட்டவர்களுக்கு ''சுவர்க்கம் வாஜிபாகி விட்டது'' என நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தித்தார்கள்.

ஷஹீதின் அந்தஸ்த்து, பாவமன்னிப்பு, சுவனம் வாஜிப் ஆகிய நன்மாராயங்களின் சொந்தக்காரராக அல்லாஹ் உஸ்தாத் அகார் அவர்களின் மனைவியை ஆக்கிவைப்பானாக!

**- எம். எம். நயீம்**



### என்னை சிந்திக்க வைத்த ஓர் ஜனாஸா...

என்னையும் கலந்துகொள்ளச்
செய்த ஜனாஸா.....
இதுவரையிலும் அவர்
துணைவியை
கண்டிராத விழிகளிலும்
கண்ணீர் மழை.......

அல்லாஹ்விடம் அன்னாருக்காக
இறைஞ்சுகின்ற கோடி இதழ்கள்.......
பல தலைமுறைகள் தலைதூக்க தலைமை
தாங்குகின்ற ஓர் ஆளுமையின்
பக்கபலம்

விமர்சனங்கள் எழுந்த போதிலும்
விட்டுக்கொடுக்காது
ஆறுதலாய் இருந்த அன்னை
இம்மைக்கு பிரியாவிடை
கொடுத்திருப்பதும்
இதழ் மலர்ந்து புன்னகைத்து....

இப்பிரிவு நம் உம்மத்தின் ஈடு செய்ய
முடியா இழப்பு...
அகார் எனும் ஆளுமை சோகத்தால்
கலங்கிப்போய் இருப்பதை
முதன்முறையாக கண்டேன்

பிரார்த்திக்கிறேன்
அவ் ஈமானிய குடும்பத்திற்கு
அதிகமான பொறுமையையும்
தைரியத்தையும் கொடுப்பாயாக....
அன்னாரின் குறைகளை
ஏற்று மேலான
சுவனத்தில் நுழைவிப்பாயாக....

**பின்த் அக்ரம்**
**முதலாம் வருடம்,**
**பேராதனை வளாகம்.**

### தூய பணிக்கான மனைவியின் பங்களிப்பு

திருமணத்தின் போது உஸ்தாத் அகார் அவர்களின் கரங்களை உறுதியாகப் பற்றிய அன்பு மனைவி மர்ஹூமா சுரையா அவர்கள், அன்றிலிருந்து இன்று வரை, உஸ்தாத் எதிர் கொள்ளும் எல்லா விமர்சனங்களிலும், அவரது உடல் நிலை சரியில்லாமல் போகும் தருணங்களிலும், உஸ்தாதை தாங்கிப்பிடித்து அவரை நிலைகுழையாமலும் தொடர்ந்து அவர் சோர்வுராமலும் அழைப்புப் பணியில் ஈடுபட வைத்ததில் அவரது பாரியாரின் பங்கு விசாலமானது. உஸ்தாத் அகார் செய்யும் பணிகளின் விசாலத்தை போலவே, அவரது மனைவி செய்த பணிக்காக அல்லாஹ் அவரது மனைவிக்கு விசாலமான கூலியை வழங்குவானாக!

**- அக்ரம் முனீர்**

# தாரமாகி; தாயாகி; அகார் உஸ்தாதிற்கு தாதியுமானவரின் தூய பயணம்!

## ஆரவாரமில்லாத சமூகப் பங்களிப்பு

சமூகத் தளத்தில் இடையறாது இயங்குவதற்காக தன் கணவனுக்குப் பக்கபலமாக, தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளாமல் மறைகரமாகத் தொழிற்படும் ஒரு பெண், அல்லது நாளை சமூகத்தின் தளங்களில் அதிர்வுகளை உண்டு பண்ணக்கூடிய வகையில் தன் பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் தனது நேரத்தை முதலீடு செய்யும் ஒரு பெண், இக்கடமைகளையெல்லாம் புறக்கணித்து விட்டு ஊருக்கும் உலகத்துக்கும் தன் பங்களிப்பை(?) வழங்குவதாகச் சொல்லிக்கொள்ளும் ஒரு பெண்ணை விட எவ்வளவோ சிறந்தவள்.

இறையடி சேர்ந்த மதிப்புக்கும் கண்ணியத்துக்குமுரிய உஸ்தாத் அகார் அவர்களின் அன்பு மனைவி, அன்புக் கணவர் உஸ்தாத் அகார் அவர்களுடன் இறுதியாக மேற்கொண்ட பயணம் கூட இறைமார்க்கத்துக்கான இன்பப் பயணமொன்றாக அமைந்திருந்ததானது, இவ்வளவு காலமும் இடையறாது சமூகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த மிகப் பெரியதொரு பணியின் பின்னால் ஆரவாரமில்லாமல் அமைதியாக தொழிற்பட்டுக் கொண்டிருந்த அந்த அளப்பரிய பங்களிப்பை உலகத்துக்கு எடுத்தியம்புவதற்கு அல்லாஹுத் தஆலா கையாண்ட ஒரு வழிமுறையாகவே உள்ளத்துக்குப் படுகின்றது.

தாஇக்களின் வாழ்க்கைத் துணையென்பவர்கள் மூஸாக்களுக்கான ஹாரூன்களே. சமூகத்தில் ஃபிர்அவ்னிய எதிர்ப்புகளால் தாக்கப்பட்டு வீடு வரும் தாஇகளுக்கான மன ஆறுதலாகவும், ஒத்தடமாகவும் தொழிற்படுபவர்களே அவர்கள்.

சமூகத்துக்கான பங்களிப்பு பற்றிய அத்தகைய பாடத்தை தன் வாழ்வுக்கூடாகவும் மரணத்துக்கூடாகவும் விட்டுச் சென்ற அந்தத் தாயின் மீஸானைப் பாரமாக்கக்கூடிய ஸதகா ஜாரியாவாக அதனையா அல்லாஹ் ஏற்றுக் கொள்வாயாக!.

**- அப்பான் அப்துல் ஹலீம்**






OMSED Sri Lanka நிறுவனத்தின் அனுசரணையுடன் நீர்கொழும்பு, பெரியமுல்லை அஹதிய்யா பாடசாலையின் ஆசிரியர்களுக்கான விஷேட வழிகாட்டல் கருத்தரங்கொன்று கடந்த ஒக்டோபர் 15ஆம் திகதியன்று நீர்கொழும்பு பெரடைஸ் கடற்கரை ஹோட்டலில் நடைபெற்றது. மனிதவள அபிவிருத்தி தொடர்பான ஆலோசகர் சுஹைர் அ.காதர் மற்றும் தேஷபந்து அஷ்ஷேக் முனீர் முளாபர் (நளீமி) ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்ட இச்செயலமர்வில் 33 அஹதிய்யா ஆசிரியைகள் பயன்பெற்றனர்.

இச்செயலமர்வை அல்ஹாஜ் இம்தியாஸ், அல்ஹாஜ் இலாம் காஸிம், மற்றும் அஷ்ஷேக் சிராஜ் (நளீமி) ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# மீண்டும் வேண்டும் துடிப்புள்ள அகார் சேர்



ஜாமிஆ நளீமிய்யாவின் பிரதிப் பணிப்பாளரும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பிரதித் தலைவருமான அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முகம்மத் (நளீமி) அவர்களின் அன்பு மனைவி சுரையா மரிக்கார் அவர்கள் கம்பளை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தொன்றில் அகால மரணமடைந்தது நீங்கள் அறிந்ததே. விபத்து குறித்த சமூகத்தின் புலனாய்வுத் துலங்கல்கள் முடிவதற்குள்ளேயே அன்னாரின் ஜனாஸா மாவனெல்லை, தெல்கஹகொட ஜும்ஆப்பள்ளிவாயல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

எந்த ஒரு மனிதரையும் நெருங்கிய உறவுகளின் இழப்பு கடுமையாக ஆட்டங்காணவே செய்துவிடும். கண்முன் நடந்த விபத்து எனும் போது அதன் தாக்கம் ஆழமானது.

சுரையா அகார் முஹம்மத் மூன்று பிள்ளைகளின் தாயார் என்பதுடன்

**இந்த சமூகம் பயணிக்க வேண்டிய தூரம் குறுகினாலும், சவால்கள் குறுகிடாதே! அகார் சேர், மீண்டும் உங்களின் துடிப்புமிக்க உரைகள் எம் உள்ளங்களை பதப்படுத்த வேண்டும், உங்களின் சேவை தொடர்வதே எம் கட்டாயத்தேவை!**

அகார் சேரின் அளப்பரிய சேவை செயற்பாடுகளில் மறைகரமாக இருந்து பங்களிப்பு செய்தவர். அண்மையில் மறைந்த ஆதில் பாக்கிர் மாக்காரின் மரணச் சேதி ஒரு முன்மாதிரிமிக்க இளைஞன் எப்படி வாழ வேண்டும் என்பது தொடர்பில் சமூகத்தை உலுக்கி விட்டது. அப்துல்லாஹ் ஹஸரத்தின் மறைவு ஆன்மீக தலைவர் ஒருவர், மூத்த மரியாதைக்குரிய ஒருவரின் சமூகப் பங்களிப்பு சமூகத்தை எந்தளவு பாதித்தது என்பதை எடுத்துக் காட்டியது. தற்போது மர்ஹூமா சுரையா மரிக்கார் அவர்களின் மரணம் ஒரு முன்மாதிரிமிக்க மனைவியினதும், தாயினதும் பங்களிப்பை தெளிவாகக் காட்டுகின்றது. மரணங்கள் மூன்றும் வெவ்வேறு தளங்களில், வயதில் என வேறுபட்டாலும் ஈடற்ற பங்களிப்பு என்ற ஒற்றுமை இங்கு நாம் கவனிக்க வேண்டியதொன்றே!

இலங்கை சமூகத்தில் பாரிய ஆன்மீக மற்றும் சேவை பங்களிப்பை செய்துவந்த அகார் சேரின் நிலை குறித்து ஜனாஸா நல்லடக்கத்தின்போது பலரும் மிகுந்த கவலையை வெளியிட்டிருந்தனர். சிறுபான்மை சமூகம் எதிர்கொண்ட சோதனைகளின்போதும், பிரச்சினைகளின்போதும் சமூகத்துக்கு ஆறுதல் கூறிய ஒருவருக்கு யார் இன்று ஆறுதல் கூற முடியும்? உங்களதும், குடும்பத்தினாதும் உறுதியான பொறுமைக்கு இறைவன் சிறந்த கூலியை தருவான் இன்ஷா அல்லாஹ்!

இந்த சமூகம் பயணிக்க வேண்டிய தூரம் குறுகினாலும், சவால்கள் குறுகிடாதே! அகார் சேர், மீண்டும் உங்களின் துடிப்புமிக்க உரைகள் எம் உள்ளங்களை பதப்படுத்த வேண்டும், உங்களின் சேவை தொடர்வதே எம் கட்டாயத்தேவை!

**- அனஸ் அப்பாஸ் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுகளைத் தேடி வடக்கில் அநாதரவாய் ஒரு சமூகம்

• பி.எம். முஜீபுர் ரஹ்மான்

வட மாகாணத்தில் நிரந்தரமாக வாழ்ந்த முஸ்லிம்கள் 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் இறுதி வாரத்தில் வலுக்கட்டாயமாக புலிகளின் ஆயுத முனையில் வெளியேற்றப்பட்டார்கள். இவ்வருடத்துடன் 26 வருடங்களையும் தாண்டி பெரும்பாலானவர்கள் இன்னும் அகதி முகாம்களிலும், ஏனைய இடங்களிலும் வாழ்ந்து வருகிறார்கள்.

இவ்வெளியேற்றம், வரலாற்று ரீதியாக காணப்பட்ட முஸ்லிம் மற்றும் தமிழர்களுக்கிடையே இருந்த ஒற்றுமையை பலமாகச் சீர்குலைத்தது. இரு சமூகங் களுக்கிடையிலான புரிந்துணர்வில் பாரிய விரிசலை இது ஏற்படுத்தியது. தற்போது, இச்சமூக வேறுபாடுகள் இவர்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த 26 வருடமாக வாழ்வியலை இழந்து, ஏக்கங்களுடனும், எதிர்பார்ப்புக்களுடனும் வாழும் இம்மக்களின் மீள்குடியேற்றம் இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. இவர்களில் 25 வீதமானவர்கள் தங்களது சொந்த இடங்களில் குடியேறியுள்ளார்கள். ஏதோ விதத்தில் தங்களது வாழ்வியலை முடியுமான வழிகளில் வடிவமைத்துள்ளார்கள். இன்னும் 25 வீதமானவர்கள் வெளியேற்றத்தின் பின்னர் வடிவமைத்துள்ள இடங்களில் தங்களது வாழ்வியலை வடிவமைத்துக் கொண்டார்கள்.

மிகவும் பரிதாபமான நிலையில், 50 வீதமான ஏழைகள், நடுத்தர குடும்பத்தவர்கள் இன்னும் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள். அவர்கள் புத்தளம் போன்ற வெளியேற்றத்தின் பின்னர் வாழ்கின்ற இடங்களிலும் வாழ முடியாமல், தங்களது சொந்த இடத்திலும் வாழ முடியாமல் நாடோடிகளாக அங்கும் இங்குமாக ஒட்டத்திலேயே திரிகிறார்கள். இவர்களின் இச்செயற்பாட்டினால் இவர்களின் பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகிறது. சுமார் 50 வீதமான பிள்ளைகளின் எதிர்காலம் மிகவும் பரி தாபமாகக் கழிகிறது.

26 வருடங்கள் முடிந்துவிட்டன. 27 ஆவது வருடம், 28 ஆவது வருட நினைவு என்று செல்வதற்கு அப்பால், இந்த மக்களை நிரந்தரமாகக் குடியமர்த்துவதற்கு முயற்சிப்பது சமூகத்தின் முதன்மையான பிரச்சினையாகும்.

**வெளியேற்றமும் தற்போதைய வாழ்வும் குறித்து மக்கள் கருத்து**

''1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தின் இறுதி வாரத்தில் 24 மணித்தியால குறுகிய கால அவகாச அடிப்படையில் வடமாகாணத்தின் 5 மாவட்டங்களில் வாழ்ந்த முஸ்லிம்களை விடுதலைப் புலிகள் ஆயுதமுனையில் பலவந்தமாக வெளியேற்றியமை ஓர் இனச் சுத்திகரிப்பு, யுத்தக் குற்றமாகும் என்பதை அரசாங்கம் பாராளுமன்றத்தில் அறிவிப்பதோடு, அதனை வர்த்தமானியிலும் அறிவிக்க வேண்டும். இப்பலவந்த வெளியேற்றத்தை சர்வதேச சமூகமும் அங்கீகரிக்க வேண்டும். இப்பலவந்த வெளியேற்றம் குறித்து விஷேட நீதிமன்ற விசாரணை ஒன்றும் மேற்கொள்ளப்பட வேண்டும்.''

''1990 ஆம் ஆண்டுக்கு முன்னரும் பின்னரும் இம்மக்கள் புல பாதிப்புக்களைச் சந்தித்துள்ளார்கள். அவர்களில் பலர் காணாமல் போயுள்ளார்கள். இன்னும் சிலர் புலிகளால் பலவந்தமாக கடத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்கள். இவர்கள் தொழுகையில் இருந்தவர்களையும் சுட்டுக்கொன்றார்கள். (மன்னார் றஸூல் புதுவெளியில்) மன்னார் மாவட்டத்தில் காணப்பட்ட முஸ்லிம் செல்வந்தர்களை பலவந்தமாக கடத்திச் சென்று பெருந்தொகைப் பணத்தைப் பறித்துள்ளார்கள். முக்கியமான முஸ்லிம் கல்வியாளர்களையும், செயற்பாட்டாளர்களையும், கடத்திச் சென்று சிலரை சுட்டுக்கொன்றுள்ளார்கள்.

இவை மனிதாபிமான சட்டத்திற்கும், சர்வதேச மனித உரிமை சட்டத்திற்கும், எதிரான யுத்தக் குற்றமாகும். இக்குற்றங்கள் விசாரிக்கப்பட்டு, உண்மைகள் கண்டயறியப்படுவதோடு, 26 வருடங்களுக்கும் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கும் இவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். சர்வதேச நிபந்தனைகளுக்கு அமைவான நஷ்டஈடுகளும் வழங்கப்பட வேண்டும்.''

''நான் ஒரு வியாபாரியாக இருந்தேன். 1990 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை பலவந்தமாக வெளியேற்றுவதற்கு சுமார் 15 நாட்களுக்கு முன்னர் கூட்டம் ஒன்றிற்கு வருமாறு என்னை கூட்டிச் சென்றார்கள். அங்கு சென்ற என்னை பலவந்தமாக சிறையில் பிடித்து அடைத்தார்கள். சில நாட்கள் என்னை காட்டிற்குள் அடைத்து வைத்திருந்தார்கள். பின்னர் 1500 ரூபா மாத்திரம் தந்து என்னை அனுப்பி விட்டார்கள்.''

''நான் விடுதலைப் புலிகளின் சிறையில் அடைபட்டு இருந்தபோது எங்களது மக்கள் (முஸ்லிம்கள்) சொந்த ஊரை விட்டு விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டுள்ளார்கள் என்ற செய்தியை அங்கு அறிந்து கொண்டேன். வெளியேற்றத்தினால் எனது கோடிக்கணக்கான சொத்துக்கள் முழுமையாக அழிக்கப்பட்டு விட்டன. எல்லா வகையிலும் இழப்புக்களையே சந்தித்தோம். வெளியேற்றம், சொத்தழிப்பு என்ற காரணத்தினால் எனது மகன் ஒருவர் மனநிலை பாதிக்கப்பட்டு மனநோயாளியாகவுள்ளார். அவருக்கு தொடர்ந்து சிகிச்சைகள் செய்து வருகிறேன். ஆனால் இன்றுவரை குணமாகவில்லை.''

''சொந்த இடத்தை விட்டு வெளியேற்றப்பட்டு பல தொழில்கள் செய்து பார்த்தேன். ஒன்றுமே சரிவரவில்லை. இப்போது வயதாகிய நிலையில் கஷ்டத்தோடு வாழ்கிறேன். இறைவனின் உதவியால் எனது ஒரு சில பிள்ளைகள் அவர்களது முயற்சியால் படித்து உத்தியோகத்திலும் இருக்கிறார்கள். அவர்களின் சிறு உதவியினாலேயே நான் வாழ்க்கை நடத்துகின்றேன்.''

''இப்போதுதான் எங்களது சொந்த இடங்களுக்கு வந்துள்ளோம். எங்கள் சொந்த காணிகள் எல்லாம் காடுகளாக மாறியுள்ளன. எங்களது காணிகள் மிகவும் பெரிய வனாந்தரமாகவுள்ளது. அத்துடன் வீடுகள் எல்லாம் உடைக்கப்பட்டுள்ளன. எனது காணியும், கடையும், கடற்படையினரின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. அதற்குள் முகாம் அமைத்துள்ளார்கள். அதற்குள் போகவோ, பார்க்கவோ முடியாத நிலையில் மிக மன வேதனையில் இருக்கின்றேன். அக் காணிக்கான உறுதிப் பத்திரம் உள்ளது.

கடந்த அரசாங்கத்தின்போது பொருளாதார அமைச்சராக இருந்த பசில் ராஜபக்ஷ அவர்கள் வந்தபோது, எங்களது சொந்தக் காணிகளை ஒப்படைக்குமாறும், கடற்படை முகாமை வேறு இடத்திற்கு மாற்றுமாறும் கோரி அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்றைச் செய்தோம். உடனே அமைச்சரின் உத்தரவின் பேரில் அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைவரும் கைதுசெய்யப்பட்டு இரண்டு நாட்களாக பொலிஸ் சிறையில் தடுத்துவைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். எங்களது காணிகளை அமைதியான முறையில் கேட்டது குற்றமா? அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்குமா? அவர்கள் ஏன் கைதுசெய்யப்பட்டார்கள் என்ற உண்மை தெரிய வேண்டும்.

அத்துடன் எனது இன்னொரு கடை 2007 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் உடைத்து தரைமட்டமாக்கப்பட்டது. எங்களுக்கு நியாயமான நீதி கிடைக்க வேண்டும். நாங்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறோம். இந்நிலை தொடர்ந்தால் எவ்வாறு நல்லிணக்கம் ஏற்படும்.''




வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளைக் கையாள்வதற்கென தனியான அலுவலகம் ஒன்று உருவாக்கப்படாமை இம்மீள்குடியேற்றத்திற்கான பிரதான தடையாக உள்ளது. மேலும், அவ்வலுவலகத்தினூடாக இவர்களின் மீள்குடியேற்றத்தை படிப்படியாக மேற்கொள்ள வேண்டும் என அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

வடமாகாண மக்களுடன் கலந்துரையாடியபோது பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் விடயங்களைக் கூறலாம்.

**01. மீள்குடியேற்றம் - மீள்குடியேற்றத்தைப் பாதிப்பதில் செல்வாக்கு செலுத் தும் காரணிகள்**

**புத்தளம் - மன்னார் வீதி:** நீண்ட வரலாற்றைக் கொண்ட இவ்வீதி பாவனைக்காக திறந்து வைக்கவில்லை. இப்பாதை உயர் நீதிமன்றத்தில் வழக்கிலுள்ளதால் இவ்வழக்கு முடிவுறும் வரை மக்கள் காத்திருக்கிறார்கள். இவ்வீதி இம்மக்களின் மீள்குடியேற்றத்தில் பாரிய செல்வாக்குச் செலுத்துகிறது.

**சுகாதாரம்:** போதிய ஆஸ்பத்திரி வசதிகள் இல்லை. அத்தோடு, ஏனைய அத்தியாவசிய பொருட்கள் இன்மை. விஷேடமாக வைத்தியர்கள் இல்லை. இவை படிப்படியாக தீர்க்கப்பட வேண்டும்.

**கல்வி:** மீள்குடியேறியுள்ள பிரதேசங்கள் கல்வியில் பாரிய பிரச்சினையை எதிர்நோக்குகின்றன. சிலர் புத்தளம் மற்றும் வெளியேற்றப்பட்டு வாழ்ந்த பிரதேசங்களிலேயே வாழ்கிறார்கள். [illegible] யர்கள் இருக்கிறார்கள். அவர்களின் இடமாற்றத்தை வடமாகாண சபை ஏற்றுக் கொள்வதில் பாரிய தாமதம் ஏற்படுகிறது.

அத்தோடு, மீள்குடியேறுவதற்காக தங்களது காணிகளில் வளர்ந்துள்ள காடுகளை அழிப்பதற்காகப் பெற்றோர்கள் பிள்ளைகளை புத்தளம் மற்றும் தற்காலிகமாக வாழ்கின்ற இடங்களில் விட்டு விட்டு வரவேண்டிய நிலை ஏற்படுகின்றது. எனவே, அப்பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுகின்றது.

**அரச நிருவாகம்** (அரசியல் மற்றும் ஏனைய தலையீடு): அரசியல் தலையீட்டினால் இம்மக்களுக்கு நியாயமான முறையில் வீட்டுத் திட்டமோ, ஏனைய சலுகைகளோ கிடைப்பதில்லை.

**காணி விவகாரம்:** காணிப் பங்கீட்டில் பாரபட்சமாக நடந்து கொள்ளப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். அத்தோடு, 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர், அதிகரித்துள்ள சனத்தொகைக்கு ஏற்ப காணிகள் வழங்க வேண்டிய நிலையில், காணிகள் வழங்குவதில் முஸ்லிம்களுக்கு பாகுபாடு காட்டப்படுகின்றது.

அத்தோடு, இராணுவ, கடற்படை, பொலிஸ் மற்றும் காடுகளுக்காக, விவசாய மற்றும் குடியிருப்புக் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

**தொழில் பிரச்சினை:** இந்திய மீனவர்களின் வருகையினால், இலங்கை மீனவர்கள் பல பிரச்சினைகளை சந்திக்கின்றார்கள். அத்தோடு, இன்னும் பாஸ் நடைமுறையில் உள்ளமையால், வடமாகாணத்தில் மீன்பிடியில் ஈடுபடும் முஸ்லிம் மீனவர்கள் பல சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். இப்பிரச்சினையை உரிய அரச அதிகாரிகளிடமும் முறையிட முடியாத பரிதாபமான நிலையில் முஸ்லிம் மீனவர்கள் வாழ்கிறார்கள்.

மேலும், வடக்கின் பெரும்பாலான மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். இவ்விவசாயிகள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள். அதாவது, நீர்ப்பாசனம் இன்னும் சீராக வடிவமைக்கப்படவில்லை. அத்தோடு, அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற மானியங்களில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

முஸ்லிம்கள் மண் அகழ்தல், காட்டுத் தொழிலை செய்வதில் பாரிய கட்டுப்பாடுகள். ஆனால், ஏனையவர்கள் மண் அகழ்தல் மற்றும் காட்டுத் தொழிலை தாம் விரும்பியவாறு மேற்கொள்கிறார்கள்.

இவ்வாறான விடயங்கள் இம்மக்களின் மீள்குடியேற்றத்தை தடுத்துக் கொண்டிருக்கிறது. 1990 ஆம் ஆண்டு முதல் அகதி முகாம்களில் வாழ்ந்த இவர்கள், 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதன் பின்னர் தங்களது தாயக பூமிக்கு மீள்குடியேறுவதற்காகச் சென்றால் அங்கு பல பிரச்சினைகளை அவர்கள் எதிர்நோக்கினர்.

26 வருட அகதி வாழ்வு நினைவு கூரப்படுகின்ற இந்நேரத்திலாவது இவர்களுக்கு நிரந்தர தீர்வு கிடைக்குமா? சுதந்திரமாக தொழில்களை மேற்கொள்ள முடியுமா? என அம்மக்கள் அங்கலாய்க்கிறார்கள். இந்த நினைப்பிலேயே அங்கும் இங்குமாக ஓட்டத்திலும், தடுமாற்றத்திலும் வாழ்கிறார்கள்.

மீள்குடியேறியுள்ள முஸ்லிம்களின் அபிவிருத்தித் திட்டங்களிலும் பாரிய சிக்கல்கள் காணப்படுகின்றன. அவர்களுக்கான வீட்டுத் திட்டம் எந்த சீருமில்லாமல் வழங்கப்படுகிறது. அவ்வீடுகள் யார் யாருக்கு வழங்கப்படுகின்றன, என்ன வழிமுறையில் வழங்கப்படுகின்றன என்பது குறித்து அம்மக்களுக்கே தெரியாது.

**பரிந்துரைகள்**

1. வடமாகாண முஸ்லிம் மக்கள் ஏன் வெளியேற்றப்பட்டார்கள் என்ற உண்மை கண்டறியப்பட வேண்டும். அவர்களுக்கான நீதி சர்வதேச மயப்படுத்தப்பட வேண்டும்.
2. பலவந்த வெளியேற்றம் ஓர் இனச் சுத்திகரிப்பு, யுத்தக் குற்றம் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரானது என்பதை அரசாங்கமும் சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
3. வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றம் குறித்து விசேட நீதிமன்ற விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும்.
4. காணாமற் போனோர் அலுவலகத்தில் முஸ்லிம்களுக்கு தனியான பகுதி வேண்டும்.
5. நஷ்டஈடு அலுவலகத்திலும், முஸ்லிம்களுக்கு தனியான பகுதி வேண்டும்.
6. சர்வதேச விதிமுறைகளுக்கு அமைய நஷ்டஈடுகள் வழங்கப்பட வேண்டும்.
7. அலுவலகங்கள் அமைக்கப்படும் போது முஸ்லிம் மக்களுடைய பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். மக்கள் செறிந்து வாழ்கின்ற இடங்களில், பாதிக்கப்பட்டுள்ள மக்களின் இடங்களில் அலுவலகங்கள் அமைக்கப்படல் வேண்டும்.
8. வடமாகாண சபையினால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் யாவும் இன, மத வேறுபாடின்றி சமமான முறையில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். சிறப்பான குடியேற்றத் திட்டங்கள் செய்து தரப்படல் வேண்டும். அத்துடன் மீளக்குடியமர்வதற்கான போதுமான கால அவகாசம் கொடுக்கப்படல் வேண்டும்.
9. மீளக்குடியமர வரும்போது, அவர்கள் ஏற்கனவே இங்கு இருந்தவர்கள் மாதிரியே பாடசாலை மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கு கணிக்கப்படல் வேண்டும்.
10. முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் வைத்தியசாலைகள், நிரந்தர வைத்தியர்கள், Ward வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
11. முஸ்லிம்களுக்கான நஷ்டஈடு என்பது சர்வதேச ரீதியாக வழங்கப்படல் வேண்டும். 1990 ஆம் ஆண்டு இழப்புகளுடன் இடம்பெயராமல் இருந்தால் எவ்வளவோ உழைத்திருக்க முடியும். இவற்றையெல்லாம் கணக்கிட்டு நஷ்டஈடுகளைத் தர வேண்டும்.
12. மக்கள் செறிந்து வாழும் இடங்களிலிருந்து இராணுவங்களை வெளியேற்ற வேண்டும்.
13. பத்து வருடங்கள் இருந்தால், அவ்விடத்தில் இருப்பவர்களுக்கே

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## அரச செலவீனங்களின் குறைவு வாழ்க்கைச் செலவைக் குறைக்கப் போவதில்லை

வறுமை ஒழிப்பு ஆண்டாக 2017 ஆம் ஆண்டை ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ள நிலையில், 2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் அடுத்த வாரம் பாராளுமன்றத்திலே சமர்ப்பிக்கப்படவுள்ளது. முன்வைக்கப்பட்ட உத்தேச வரவு-செலவுத்திட்டத்தில், மக்களின் வறுமை நிவாரணத்துக்கென எதுவும் குறிப்பாக எடுத்துரைக்கப்படாத போதும், அரச செலவீனங்களில் குறைவுகள் ஏற்படுத்தப்படப் போகிறது என்பதனையே மக்களுக்கான சுகாயமாக அரச தரப்பினால் எடுத்துக் கூறப்பட்டு வருகிறது.

முன்வைக்கப்பட்டுள்ளதன்படி அரச செலவீனங்கள் உண்மையிலேயே குறைக்கப்படுகிறதா? ஜனாதிபதியின் செலவுகள் 168 வீதத்தினால் அதிகரிக்கவிருக்கின்றன. பிரதமருக்கான செலவுகள் 147 வீதத்தினால் அதிகரிக்கப்படவிருக்கின்றன. பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் எதிர்காலத்தில் 240 ஆக அதிகரிக்கப்படுமானால் அவர்களது செலவும் அதிகரிக்கப்படப் போகிறது.

இந்த நிலையில் கல்விக்கானதும் சுகாதாரத்துக்குமான அரச செலவினங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள குறைவே அரச செலவினங்களின் குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் கல்வியும் சுகாதாரமுமே மக்களுக்கு இலவசமாகக் கிடைப்பவை. இவற்றுக்கென அரசாங்கம் செலவழிக்கும் தொகையிலேயே அடுத்த வருட வரவு செலவுத் திட்டத்தில் வெட்டு விழுந்திருக்கிறது. இதனால் கல்விக்கும் சுகாதாரத்துக்குமான செலவுகள் படிப்படியாக மக்களது தலையில் கொட்டப்படவிருக்கின்றன.

இதற்கான தீர்மானங்கள் அரச மட்டத்தில் எடுக்கப்பட்டவைகளாக இல்லாவிட்டாலும் செலவீனங்களை ஈடு செய்வதற்காக கடன் பெறுதல், கடன்மீளச் செலுத்துதல், கடனுக்கான வட்டி வழங்குதல் என்று வரும் பொழுது சர்வதேச அழுத்தங்களுக்கு உட்பட்டே அரசாங்கம் இத்தகைய முடிவுகளுக்கு வந்திருக்கிறது.

சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்கும்போது விதிக்கின்ற ஐந்து நிபந்தனைகளில் மக்களுக்கான மானியங்களைக் குறைத்தல் என்ற நிபந்தனைக்கேற்பவே மக்களுக்கான இந்த இலவசச் சேவைகளில் வெட்டு விழுந்திருக்கிறது.

நாட்டுக்கான அரசியலமைப்பை வரைதலில் இருந்து நாட்டு மக்களின் கல்வி, சுகாதாரம் என அனைத்துமே தற்பொழுது சர்வதேச அழுத்தங்களின் அடிப்படையிலேயே வடிவமைக்கப்பட்டு வருகின்றன. இது சுதந்திர நாடா அல்லது மீண்டும் ஆக்கிரமிப்புக்கு உள்ளான நாடா என்று கருதும் அளவுக்கு நாட்டின் சுயாதீனம் பறிபோயிருக்கிறது. சர்வதேச சக்திகளுக்கு வேண்டாதவர்களையெல்லாம் நாட்டுக்கு வேண்டாதவர்களாகப் பார்க்க வேண்டிய அளவுக்கு நாடு அடிமைப்பட்டிருக்கிறது.

இதற்கு நாட்டின் பொருளாதார வங்குரோத்து நிலையே காரணம் எனவும், இந்த வங்குரோத்து நிலைக்கு மஹிந்த ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஊழல்களும் வீண்விரயங்களுமே காரணம் எனவும் அரசாங்கம் கூறிவருகிறது. ராஜபக்ஷ அரசாங்கத்தின் எல்லை மீறிய செலவுகளுக்காக பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்தவே மக்கள் மீது வரி திணிக்கப்படுவதாகக் கூறி, இந்த வரிகளுக்கு பிரதமர் ராஜபக்ஷ வரி என்று கூட நாமமிட்டிருந்தார்.

இலங்கையில் கட்சிகள் மாறி மாறி ஆட்சிக்கு வரும் போதெல்லாம் இதே பல்லவிதான் பாடப்படுகிறது. ஆட்சியாளர்களின் ஊழல், வீண்விரயங்களைத் தட்டிக் கேட்டு தடுக்காமல், அவர்கள் போக்கில் விட்டு விட்டு, தாம் ஆட்சிக்கு வந்த பின்னர் முன்னைய ஆட்சியின்மீது பழியைப் போடுவது முதிர்ச்சியான ஒரு எதிர்க்கட்சிக்கு அழகல்ல. அதை விடுத்து இவற்றைத் தடுப்பதற்கான முயற்சிகளில் எதிர்க்கட்சி ஈடுபட்டிருக்க வேண்டும்.

ஊழலும் வீண்விரயமும் கட்டுக்கடங்காமல் ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்தில் இலங்கையின் பிரதான எதிர்க்கட்சி, தனது கட்சிக்குள்ளே ஜனநாயகத்தை நிலைநிறுத்தப் போராடிக் கொண்டிருந்தது. இந்த ஊழல் விடயங்களைத் தட்டிக் கேட்பதற்கான தலைமைகள் உருவாகாமல் கவனமாகக் காய்நகர்த்தப்பட்டு வந்தது. கட்சிக்குள் பல போராட்டங்கள் வெடித்த போதும் ஜனநாயகத்துக்கு முரணாக தனது தலைமைப் பதவியை தக்க வைத்துக் கொள்வதற்கான போட்டிகளே இலங்கையின் பிரதான எதிர்க்கட்சிக்குள் நடந்துகொண்டிருந்தன.

ஊழலும் வீண்விரயமும் தலைக்கு மேல் போய் மக்கள் கிளர்ந்தெழுந்ததன் பின்னரே, இதற்கெதிரான சக்திகளுடன் அப்போதைய எதிர்க்கட்சி கூட்டுச் சேர்ந்தது. இன்று அது ஆளும் கட்சியில் அமர்ந்து கொண்டு, தான் விட்ட தவறுக்காக மக்களை பலிக்கடாவாக்கி நாட்டையே அடமானம் வைக்கிறது.

ஆட்சியில் இருக்கின்ற போதும் எதிரணியில் இருக்கின்ற போதும் நாட்டு மக்களின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கின்ற தலைமைகள் உருவாகும் பொழுது தான் நாட்டில் நிலையான முன்னேற்றம் பிறக்கும். இவ்வாறான தலைவர்களை மக்களே தெரிவு செய்யாவிட்டால் நாட்டை அடகுவைப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# வரவு செலவு திட்டம் 2017: மக்கள் எதிர்பார்ப்பது என்ன?

• ஹெட்டி ரம்ஸி

2017 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் நவம்பர் 10 ஆம் திகதி நிதி அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளது. அண்மையில் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஊடகவியலாளர் மாநாடொன்றில் தங்களது முன்மொழிவுகளும் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும், அது இடம்பெறா விட்டால் அதற்கு நாம் ஆதரவு தெரிவிக்க மாட்டோம் எனக் கூறியிருந்தார்கள்.

நிதியமைச்சர் ஐ.தே.க.வைச் சேர்ந்த ஒருவர் என்பதனால் முழுமையாக ஐ.தே.க. கொள்கையை அடிப்படியாகக் கொண்ட வரவு-செலவுத் திட்டமாக அமையும் என அவர்கள் ஊகித்திருப்பதனால், இது போன்ற கருத்துக்களை அவர்கள் ஊடகங்களின் முன்னிலையில் தெரிவித்திருக்கக் கூடும். ஆனாலும் இறுதியில் இவர்கள் பாராளுமன்றில் ஒன்றிணைந்து கையை உயர்த்துவார்கள் என்பது மட்டும் உறுதியானது.

சுதந்திரத்தின் பின் உருவான சகல அரசாங்கங்களுக்கும் ஒரு கொள்கைத் திட்டம், ஒரு அரசியல் பார்வை, ஒரு தலைமைத்துவம் காணப்பட்டது. ஆனால், தற்போதைய அரசாங்கத்தில் நாட்டின் தலைமைத்துவம் ஒரு கட்சியிலும், நிதியமைச்சர் மற்றும் அவரது தலைமைத்துவம் மற்றுமொரு அரசியல் கட்சியிலும் உள்ளது.

இவ்விரு கட்சிகளும் சமூக பொருளாதார கொள்கைகள் அடிப்படையில் சில வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. இவ்வேறுபாடுகளுக்கு மத்தியில் ஒரு வருடத்திற்குரிய பொருளாதாரத் திட்ட வரைவொன்றை முன்வைப்பது அவ்வளவு இலகுவான விடயமொன்றாக அமைந்து விடாது.

மறுபுறத்தில் நாட்டின் ஜனாதிபதி பொது மேடைகளில் ஒன்றையும் மற்றைய இடங்களில் மற்றொன்றையும் செய்து வருகிறார். இதனால் மக்கள் நிலைகுலைந்து போயுள்ளார்கள். இவ்வாறான சவால்களுக்கு மத்தியில் இம்முறை வரவு-செலவு திட்டம் முன்வைக்கப்படவுள்ளது.

எவ்வாறிருப்பினும், எதிர்வரும் வருடத்திற்குரிய வரவு-செலவு திட்டம் பொதுமக்களுக்கு அவ்வளவு சிறப்பானதொரு வரவு செலவுத் திட்டமாக அமையாது என்பது நிரூபணமாகிறது. இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தினை ஆராயும் பொழுது இதனை அறிந்துகொள்ள முடிகிறது.

ஜனாதிபதிக்குரிய நிதி ஒதுக்கீடு இவ்வருடத்தை விடவும் பல மடங்கு அதிகரித்துள்ளது. விவசாயம், கல்வி போன்ற துறைகளுக்கு வழங்கப்பட்டிருந்த நிவாரணங்கள் மற்றும் நலன்புரி ஒதுக்கீடுகள் அதிகளவில் துண்டிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் சில நாட்களில் வெட் வரி வீதம் அதிகரிக்கப்படுவதற்கான சாத்தியங்களும் உள்ளன.

மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணங்கள் குறைக்கப்பட்டுள்ளன. அவர்களைச் சுரண்டிப் பிழிவது இன்னும் குறைந்தபாடில்லை. மக்கள் மீதும் அதிக வரி சுமத்துவதும் நிவாரணங்கள் துண்டிக்கப்படுவதற்குமுரிய காரணம், 'ராஜபக்ஷாக்கள் செய்த சில சித்து விளையாட்டுக்கள், திருட்டுச் செயல்களை நிவர்த்திப்பதற்காகவே என அரசாங்கமும் நிதியமைச்சரும் கூறி வருகிறார்கள்'.

ராஜபக்ஷாக்கள் மீது எல்லாவற்றையும் சாட்டி விடுவது தீர்வுகளாக அமைந்து விடாது. இவர்கள் குறிப்பிடுவது போன்று ராஜபக்ஷாக்கள் திருடினார்கள் என்றாலும் அவர்கள் மக்களுக்கு வழங்கிய நிவாரணங்களை அதிகரித்தார்களே ஒழிய துண்டிக்கவில்லை. ஒருவர் அடுத்தவரை குற்றம் சுமத்தி அரசியல் செய்வது சாத்தியமான விடயமல்ல என்பது பல விடயங்களில் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளும் இதுவல்ல.

ராஜபக்ஷவின் காலம் முடிவடைந்துள்ளது. ஆனால் இவர்கள் ராஜபக்ஷாக்கள் இழைத்ததாகக் கூறிய பாரிய குற்றங்கள் [illegible]



ஊ0 வருடங்களாக எதிர்க்கட்சியில் வீற்றிருந்து வரண்டுபோயிருந்தவர்களுக்கு பசுமை நிலம் கிடைத்தாற்போல் அரசியலில் சகல மட்டங்களிலும் செழிப்படைந்து வருகிறார்கள். இது ஆட்சியாளர்கள் பலம் பெறும் காலம். அதனைத் தொடர்ந்தே மக்களைக் கவனிக்கும் காலம் உருப்பெறும் என களனி பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் கூறிய கருத்து இங்கு நினைவுகூறத்தக்கது.

வில்லை. இதிலிருந்து புலப்படுவது என்னவெனில், ஒன்றில் அவர்கள் அவ்வாறான நிதி மோசடிகளை செய்யவில்லை என்பது. அல்லது 2 வருடங்களாகியும் அவற்றை கண்டுபிடிப்பதற்கு இவர்களுக்கு முடியாமல் போயுள்ளது என்பதாகும்.

இலவசக் கல்வியையும் சுகாதாரத்தையும் பாதுகாத்து உட்கட்டமைப்பு வசதிகளை துரிதமாக அபிவிருத்தி செய்து, மக்கள் நலத்திட்டங்களை அதிகரித்து, விவசாயத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணங்களைத் தொடர்ந்தும் பெறுகின்ற வகையில் நல்லதொரு பொருளாதாரம் உருப்பெற வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

ஆனாலும் நடப்பு அரசாங்கம் இன்று அதிகூடிய வரிச்சுமையை மக்கள் மீது சுமத்திக் கொண்டுள்ளது. ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்கும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அரசியல்வாதிகளை தண்டிப்பதற்கும் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தனது இயலாமையை ஒப்பிவித்துக் கொண்டுள்ளது.

மத்திய வங்கி பிணைமுறி மோசடிகள் தொடர்பான விவகாரம் தற்பொழுது கொந்தளிப்பான நிலையில் உள்ளது. ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட ஐ.தே.க.வில் உள்ள ஒரு சிலர் அர்ஜூன் மஹேந்திரனுக்கும் அவரது மைத்துனனுக்குமுள்ள குற்றச்சாட்டுக்களை மூடிமறைப்பதற்கு முயற்சித்து வருகிறார்கள். அண்மையில் வெளியிடப்பட்ட கோப் குழு அறிக்கையும் மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தினை அம்பலப்படுத்தியிருந்தது.

இது இவ்வாறிருக்கும் பொழுது நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஆரம்ப கட்டத்தில் ராஜபக்ஷாக்கள் முன்னெடுத்திருந்த பல வேலைத்திட்டங்களை நிறுத்தியிருந்த போதிலும் பிற்பட்ட காலங்களில் அத்திட்டங்கள் மெல்லக் கவனமாக மீளவும் முன்னெடுப்பதற்குரிய முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தன.

கொழும்பு துறைமுக நகரத் திட்டம், மற்றும் கொழும்பு கோட்டையை அண்டிய பகுதிகளில் சீனாவின் உதவியில் நிர்மாணிக்கப்படுகின்ற பல கட்டிட உருவாக்கப் பணிகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பிரதமர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் பாராளுமன்றத்தில் ஹம்பாந்தோட்டையில் மாத்திரம் 15,000 ஏக்கர் நிலப்பகுதியை சீன முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

நாட்டிலுள்ள பெரும்பாலான பகுதிகள் வெளிநாடுகளின் கையில் உள்ளன. குறிப்பாக தலைநகரில் உள்ள பெரும்பாலான பகுதிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கமும் பழைய கொள்கை வழியிலேயே பயணித்துக் கொண்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்களுக்கு உள்நாட்டு நிலப்பகுதிகள் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகிறதே ஒழிய அம்முயற்சிகள் குறைந்தபாடில்லை.

உள்நாட்டு முதலீடுகளுக்கான களம் உரிய முறையில் அமைத்துக் கொடுக்கப்படுவதில்லை. இதனை அவர்களது அரசியல் வழிமுறையாகப் பேணி வருகிறார்கள். ஆட்சிக்கு வருபவர்கள் இது போன்ற திட்டங்களால் தங்களது பொக்கட்டை நிரப்பிக்கொண்டிருக்கிறார்களே ஒழிய மக்கள் பிரச்சினைகளை கருத்திற்கொள்கிறார்களில்லை.

20 வருடங்களாக எதிர்க்கட்சியில் வீற்றிருந்து வரண்டுபோயிருந்தவர்களுக்கு பசுமை நிலம் கிடைத்தாற்போல் அரசியலில் சகல மட்டங்களிலும் செழிப்படைந்து வருகிறார்கள். இது ஆட்சியாளர்கள் பலம் பெறும் காலம். அதனைத் தொடர்ந்தே மக்களைக் கவனிக்கும் காலம் உருப்பெறும் என களனி பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் கூறிய கருத்து இங்கு நினைவுகூறத்தக்கது.

உண்மையில் நாட்டு மக்களுக்கு தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வர வேண்டும் என்ற தேவை இருந்திருக்கவில்லை. ஆனால் ஒரு மாற்றம் தேவை, அதற்கானதொரு சூழலையே உருவாக்கினார்கள். அந்தச் சூழலை இவ்வாட்சியாளர்கள் தங்களுக்குச் சாதகமாக வடிவமைத்துக் கொண்டார்கள். மக்களது எதிர்பார்ப்புகள் இதுவல்ல.

நாட்டு மக்களின் உண்மையான பிரச்சினைகளை புரிந்து கொள்வதில் இவ்வாட்சியாளர்கள் தோற்றுப் போயுள்ளனர். மக்களின் கவனத்தை திசை திருப்பும் விடயங்களைக் கவனமாக, சூசகமான முறையில் முன்னெடுத்து வருகிறார்கள். இதனால் மஹிந்த ராஜபக்ஷ கூட்டணிக்கு அதிஷ்டம் உருவாகிக் கொண்டுள்ளது.

எனவே இப்பின்னணியை சரியாகப் புரிந்து மக்களின் நிஜத் தேவைகளை அறிந்து, அவர்களது பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தும் வகையில் வரவு-செலவுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டியுள்ளது. அவ்வாறு இடம்பெறாவிட்டால் அரசாங்கம் பற்றிய மக்களின் நல்லெண்ணத்தை தொடர்ந்தும் பேணிச் செல்ல முடியாமல் போகும். இறுதியில் இது தீய சக்திகளுக்கு சாதகமாக அமைந்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்




## புதிய மொந்தையில் பழைய கள்




மூன்று தசாப்தங்களாக அமுலில் இருந்து வரும் பயங்கரவாத தடைச் சட்டத்திற்குப் (PTA - Prohibition of Terrorist Act) பகரமாக அரசாங்கம் இப்போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்துவுள்ளது. புதிய சட்ட வரைவு குறித்து சிவில் சமூக நிபுணர்கள் பல்வேறு விமர்சனங்களையும் மாற்று ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளனர். சட்ட மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க, அவ்வமைச்சின் செயலாளர், மேலதிக சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், முப்படைகளின் தளபதிகள், பாதுகாப்புச் செயலாளர், சட்டத் தரணிகள், வெளிநாட்டு ராஜதந்திரிகள் உள்ளடங்கிய குழுவினர் இப்புதிய சட்ட வரைபை ஒழுங்கமைத்துள்ளனர்.

இலங்கையில் போர் நிறைவடைந்து ஏழரை ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில், ஏற்கனவே அமுலில் இருந்து வரும் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுவாக முன் வைக்கப்பட்ட நிலையிலேயே புதிய சட்ட வரைபு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. எனினும், அமுலில் உள்ள சட்டத்தை விட மோசமான உள்ளடக்கத்தைக் கொண்டுள்ள இச்சட்டம் சிறுபான்மை மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படப் போவதாகவும், அதன் மூலம் மனித உரிமைகள் பெருமளவு மீறப்பட வாய்ப்புள்ளதாகவும் சட்ட நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் 1979 ஜூலை 20 இல் தற்காலிக ஏற்பாடுகள் என்ற பெயரில் மூன்று ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும் வகையில் கொண்டு வரப்பட்டது. 1982 இல் பத்தாவது திருத்தச் சட்டத்தின் கீழ் தற்காலிகமானது என்ற குறிப்புடன் அதே பெயரில் நிரந்தர சட்டமாக்கப்பட்டு 30 ஆண்டுகள் கழிந்துள்ளன. எதையும் எதிர்த்துக் கேட்க முடியாத நிலையில் வகைதொகையற்ற அதிகாரத்தை பொலிஸாரிடம் குவிக்கும் இச்சட்டம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதே சிறுபான்மையினரின் எதிர்பார்ப்பாகும்.

கடந்த காலங்களில் இச்சட்டம் சிறுபான்மையினரையே குறிப்பாக, தமிழர்களை இலக்கு வைத்தது. புதிய சட்ட வரைபு தமிழர்களை மட்டுமன்றி, முஸ்லிம்களையும் குறிவைக்கக் கூடிய ஆபத்து நேர்ந்துள்ளது.

அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விதிக்கு முரணான வகையிலான அம்சங்களைக் கொண்டிருக்கின்ற ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர் அதற்குரிய சட்ட வலு, சட்ட ரீதியான நிலைப்பாடு என்பன குறித்து கருத்தறிவதற்காக உச்ச நீதிமன்றத்தை நாட வேண்டும். இந்த நியதி நடைமுறையில் இருந்தபோதிலும், பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய பயங்கரவாதத் தடைச் சட்டம் 1982 இல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஒருவர் ஒரு குற்றத்தை செய்திருக்கிறார். அல்லது அந்தக் குற்றச் செயலை செய்யப் போகின்றார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் எவரையும் கைதுசெய்வதற்கு இச்சட்டத்தின்படி பொலிஸாருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. கைதுசெய்யப்பட்டவரை 72 மணித்தியாலங்களுக்குள் நீதிபதிக்கு முன்னால் ஆஜர்படுத்த வேண்டும். அவ்வாறு ஆஜர் செய்யப்படும்வரை தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கான உத்தரவை பொலிஸாரின் வேண்டுகோளுக்கு அமைவாக நீதிபதி வழங்க வேண்டும் என்பது பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிணையின்றித் தடுத்து வைத்திருப்பதற்கும் இச்சட்டம் அனுமதியளிக்கின்றது.

இச்சட்டத்தில் பயங்கரவாதம் என்றால் என்ன? பயங்கரவாதி என்றால் யார் என்பதற்கான வரைவிலக்கணங்கள் வழங்கப்படவில்லை. அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் எதிரான கிளர்ச்சிகளில் அல்லது குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களைக் கைதுசெய்வதற்குரிய அதிகாரத்தை இச்சட்டம் பொலிஸாருக்கு வரையறையற்ற வகையில் வழங்கியுள்ளது.

அரசியலமைப்பின் 84 ஆவது உறுப்புரைக்கு அமைவாக, மனித உரிமைகளையும் அரசியலமைப்பில் உறுதிசெய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளையும் மீறும் வகையிலான இச்சட்டத்தை ஜயவர்தன அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது.

கடந்த காலங்களில் இச்சட்டம் பேச்சுரிமை, எழுத்துரிமை உள்ளிட்ட ஜனநாயக உரிமைகளை மீறும் வகையில் மோசமான வடிவங்களில் பிரயோகிக்கப்பட்டன. அரசை விமர்சிக்கின்ற ஊடகவியலாளர்கள் விசாரிக்கப்பட்டனர். சிலர் கைதுசெய்யப்பட்டு, பல்லாண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சிலர் நாட்டை விட்டு தப்பியோடவும் காரணமாகியது. குறிப்பிட்ட அரசாங்கத்தின் மீது மக்களின் அதிருப்தி அலைகளை உருவாக்கும் அல்லது விமர்சிக்கும் எவரும் பயங்கரவாதிகளாகவே முத்திரை குத்தப்பட்டனர். இலங்கை முழுவதற்குமான சட்டமாக இது கேட்பாட்டளவில் கருதப்பட்டபோதும், சிறுபான்மை மக்களையே அது குறிவைத்தது.

இன்று விடுவிக்கப்பட வேண்டும் என்று கோரப்படும் தமிழ் அரசியல் கைதிகளில் அநேகர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்ளே. சாதாரண சிவில் உரிமைகளைப் பாதிக்கும் அதிகாரத்தை பொலிஸாரின் கையில் ஒப்படைக்கும் இச்சட்டம், போருக்குப் பின்னர் அவசியமற்றது என தமிழ் அரசியல்வாதிகள் கூறி வந்தனர். இச்சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பது அவர்களின் தீர்க்கமான கோரிக்கைகளில் ஒன்றாகும்.

சில மனித உரிமை அமைப்புகளும், ஐ.நா. மனித உரிமைப் பேரவையும் இச்சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என சமீபகாலமாக வலியுறுத்தி வந்தன. இந்த அழுத்தங்களுக்குப் பதில் இறுக்கும் வகையில் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்தத் திட்டமிடுகின்றது.

பொதுமக்களுக்கு இச்சட்டத்தின் உள்ளடக்கம் குறித்து இதுவரை பகிரங்கப்படுத்தப்படாத நிலையில், சட்டத் துறை நிபுணர்கள் இதன் உள்ளடக்கம் குறித்து தமது கடும் ஆட்சேபனைகளை வெளியிட்டு வருகின்றனர்.

நடைமுறையிலுள்ள சட்டத்திற்குப் பதிலாக, சர்வதேச நடைமுறைகளுக்கு ஏற்றவாறு இச்சட்டம் கொண்டுவரப்படவுள்ளது என அரசாங்கம் தெரிவித்துள்ளபோதும், முன்பை விட மிகக் கடுமையான பிரமாணங்கள் புதிய சட்டத்தில் உள்ளடங்கியிருப்பதாக அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட குறித்த சட்டத்தின் கொள்கை மற்றும்சட்ட வரைபு குறித்து சூடான விவாதங்கள் மேற்கிளம்பியுள்ளன. இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டையும் இறையாண்மையையும் தேசிய பாதுகாப்பையும் உறுதி செய்வதே இச்சட்டத்தின் பிரதான நோக்கம் என அரசாங்கத் தரப்பில் கூறப்படுகின்றது.

58 பக்கங்களைக் கொண்ட இச்சட்ட வரைபின்படி இலங்கை தொடர்பான, அல்லது இறையாண்மை மிக்க ஏதாவது நாடு சம்பந்தமான தேசிய பாதுகாப்பு, ஆட்சிப் பரப்பு, ஒருமைப்பாடு, இறையாண்மை தொடர்பாக கொள்கை முடிவொன்றை முழுமையாக மாற்ற, வேறுபடுத்த அல்லது மாற்றுவதற்கோ அல்லது மேற்படி விடயங்கள் சம்பந்தமான நடவடிக்கைகளிலிருந்து விலகியிருப்பதோ இலங்கையையோ அல்லது இறையாண்மை மிக்க ஏதாவது ஒரு நாட்டையோ சட்டவிரோதமாகவோ அல்லது சட்டத்திற்கு முரணாகவோ நிர்பந்தித்தல் பயங்கரவாதக் குற்றம் எனப்படுகின்றது.

அதேபோன்று இறையாண்மை மிக்க இலங்கை அரசாங்கத்தையோ வேறு ஏதாவது தேசத்தினது அசாங்கத்தையோ சட்டத்திற்கு முரணான வகையில் மாற்றுதல் அல்லது கொள்கை சார் ஆதிக்கத்தை அடையும் நோக்கில் வன்முறைான அடிப்படைவாதத்தைப் பின்பற்றும் எந்த நடவடிக்கையும் பயங்கரவாதம் எனக் குறிப்பிடுகின்றது.

வேவு பார்த்தலும் பயங்கரவாதம் என்ற வரையறைக்குள் அடங்குகின்றது. பயங்கரவாதம் தொடர்பான குற்றம் அல்லது இச்சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு குற்றம் ஒன்றைப் புரிய, சூழ்ச்சி செய்ய, தயாராகின்ற, உடந்தையாக விரும்புகின்ற, ரகசியமான தகவலை வழங்குகின்ற, சட்ட ரீதியற்ற, சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் எந்தவொரு தனிநபர் மீதும் இச்சட்டம் பொருந்துவதாக அமையும்.

மேற்குறிப்பிட்ட குற்றங்களுக்கு 10 ஆண்டுகள் சிறையும் அபராதமும் விதிக்கப்படும். குற்றம் ஒன்றைப் புரிவதற்கு நபர் ஒருவருக்குக் கைகூலி வழங்குதல், தூண்டுதல், அச்சுறுத்தல், பலப் பிரயோகம் செய்தல் அல்லது வேறு விதமாகத் தூண்டுதல் அளித்தல் என்பனவும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

சுருக்கமாக, இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடு, தேசிய பாதுகாப்பு என்பவற்றை முன்னிறுத்தியே புதிய சட்டம் அறிமுகமாகவுள்ளதாக ஒரு முலாம் பூசப்படுகின்றது. இதில் உள்ளடங்கியுள்ள ஆபத்தான கூறுகள் தமிழர்களை விட முஸ்லிம்களையே திட்டமிட்டு இலக்கு வைப்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

தேசியக் கொள்கையைப் பின்நோக்கச் செய்ய அல்லது மாற்றியமைக்க இறையாண்மையுள்ள ஓர் அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதும், தடை செய்யப்பட்ட நடவடிக்கையாகக் குறிப்பிட்டிருப்பது மிகுந்த சந்தேகத்தைக் கிளறுகிறது. அரச கொள்கைகளிலுள்ள கோளாறுகளை விமர்சிப்பவர்களும் மறுசீரமைப்புக்காகக் குரல் கொடுப்பவர்களும் குற்றவாளிகளாக ஆக்கப்படும் ஆபத்து இச்சட்டத்திலுள்ளது. இப்பிரமாணம் குழப்பகரமாக உள்ளது என்று சட்டத் துறை நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றான்.

அரசியல் கொள்கை ரீதியில் அரசாங்கத்தில் மாற்றம் என்ற சொற்றொடர் பயன்படுத்தப் பட்டிருப்பதற்கு அரசியல் உள்நோக்கம் இருக்க வேண்டும். இது ஜனநாயக உரிமைகளை மீறிவிடுமோ என்று சட்டத்துறை நிபுணர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். இதேபோன்று இரகசியத் தகவல்களைத் திரட்டுவதும் வழங்கு வதும் குற்றச் செயலாகக் குறிப்பிடப்பட்டி ருப்பது குழப்பமான சொற்றொடராகும். இரகசியத் தகவல்கள் என்பது பரந்துபட்ட பொருள் போடலைத் தருகின்றது. இது பல்வேறு மட்டங்களிலும் பிரச்சினைகளைக் கொண்டு வரலாம் என அவதானிகள் நம்புகின்றனர்.

தகவல் அறிமுகம் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள சூழலில் புதிய சட்டத்தில் இடம் பெற்றுள்ள இப்பிரமானம் பெருத்த அச்சத்தை உருவாக்குகின்றது. உத்தேச சட்டத்தில் 37 A பிரிவு குற்றவியல் நடைமுறைக் கோவை, சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்படும் ஒருவரிடமிருந்து ஒப்புதல் வாக்கு மூலம் பெரும் அதிகாரத்தை பொலிஸாருக்கு வழங்குகின்றது. சந்தேக நபரிடமிருந்து முதல் வாக்கு மூலத்தை பொலிஸார் பதிவுசெய்யும் வரை அவர் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட மாட்டார். இச்சட் டம் மறைமுகமாக சந்தேக நபரிடமிருந்து வாக்கு மூலத்தைப் பெறுவதற்கு சித்திரவதையை ஊக்கு விக்கலாம் என சட்ட நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இலங்கைச் சூழலில் ஏற்கனவே சித்திரவதை நடைமுறையிலுள்ளதையும் அவர்கள் சுட்டி காட்டுகின்றனர்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச மனித உரிமைப் பிரடகனத்தை (International Convention on Civil and Political Rights) இலங்கை அரசாங்கம் ஏற்று ஒப்பமிட்டுள்ளது. அதன்படி ஒரு தனிநபருக்கு தன்னை குற்றமற்றவர் என நிரூபிப்பதற்கான உரிமை உள்ளது. உத்தேச சட்டமூலத்தில் இவ்வுரிமை மறுக்கப்படுவதாக சட்டத்துறை நிபுணர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். இச்சட்டமூலம் குறித்து சந்தேகங்களும் அச்சங்களும் தெளிவின்மைகளும் நிலவுவதாக அவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

புதிய சட்ட வரைபில் குற்றச் செயல்கள் தொடர்பில் தேடுதல் நடாத்துவது, சோதனைகள் நடாத்துவது உள்ளிட்ட செயற்பாடுகளும் குற்றச் செயல்களுக்கான தண்டனைகளான ஆயுள் சிறைத் தண்டனை, சிறைத் தண்டனை, சொத்துக்கள் பறிமுதல் செய்தல் உள்ளிட்ட தண்டனைகள் முன்னைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் உள்ளது போன்றே அமைந்துள்ளது. 30 ஆண்டுகளாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் சிங்களத்தை சரளமாகப் பேசத் தெரியாத ஒவ்வொரு தமிழனும் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த ஒவ்வொரு முஸ்லிமும் பெரும் அச்சத்தோடும், ஐயத்தோடுமே தென்னிலங்கையில் நடமாட முடிந்தது. இப்போது புதிய மொந்தையில் பழைய கள் அடைக்கப்பட்டு சந்தைக்கு வருகின்றது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை விட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கருத்துச் சுதந்திரத்தின் மீதும் சிந்தனைச் சுதந்திரத்தின் மீதும் கடும் பாய்ச்சலாக இருக்கும் என்ற அச்சம் நியாயமானது. இலங்கை தேசத்தை மட்டுமன்றி, இறையாண்மையுள்ள எந்தவொரு தேசத்தையும் என்ற சொற்றொடர் கருத்துச் சுதந்திரத்திற்கு விதிக்கப்படும் தூக்குக் கயிறாகும். இலங்கைக்கு விசுவாசமான எந்தவொரு நாட்டையும் விமர்சிப்பது கூட இச்சட்டத்தின் பிரகாரம் குற்றமாகலாம். முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் அரசியல்வாதிகளும் தீவிரமாக மீள்பரிசீலனை செய்ய வேண்டிய, பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க வேண்டிய ஒரு சட்டமாகவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பார்க்கப்படுகின்றது.


இதை நடைமுறைக்கு வராமல் முறியடிப்பதில் சிறுபான்மைச் சமூகங்கள் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும். இது இன்றைய கொதிப்பான அரசியல் சூழலின் உடனடித் தேவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பரத்தன் படிபஜ்ஜத"

## அடுத்தவர்களின் வளர்ச்சிக்கு எம்மாலான உதவிகளை செய்ய வேண்டும்

**இலங்கையில் சகவாழ்வு, நல்லிணக்கம் தொடர்பாக மீள்பார்வைக்குத் தெரிவித்த கருத்துக்களில் இருந்து...**



**கலாநிதி பன்னில ஆனந்த தேரர்**
விகாராதிபதி அத்தனகல்ல ரஜமகா விகாரை

உலகிற்கு அனுப்பப்பட்ட மதப் போதகர்களுள் புத்த பெருமானே சகவாழ்வை வலியுறுத்திப் பேசியுள்ளார். மனிதனாக பிறந்த புத்தர் பௌத்தத்துவத்தின் உன்னத நிலைக்கு தனது மனதை கொண்டு சென்றார். அவ்வுன்னதமான உள்ளத்தில் சகலரும் சமமானவர்கள் என்ற கருத்தை வலியுறுத்தினார்.

இப்பிறவியில் நல்ல மனிதராக இருந்தால் மறுபிறவியில் மனிதனாகவும் கடவுளாகவும் பிறப்பார். தீய செயல்களுக்கமைய அவன் மிருகமாகவோ அல்லது இழிவான ஒருவனாகவோ பிறவியெடுப்பான்.

நாம் எல்லோரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளை போல் அடுத்தவர்களது உரிமையையும் கௌரவத்தையும் மதித்து, புத்த பெருமானின் சகவாழ்வுக் கொள்கையை பின்பற்றி, ஓரினம் என்ற அடிப்படையில் வாழ வேண்டும். புத்த பெருமான் எப்பொழுதும் 'சப்ப சத்தேது மித்த விகாரா' என்பார்கள். அதாவது எல்லோருடனும் அன்போடு நடந்து கொள்ளுமாறு கூறுகிறார்.

சூரியன் உலகில் உயர்வு-தாழ்வு, கறுப்பினம்-வெள்ளையினம், ஏழை-பணக்காரர் என்பதாக பாகுபாடு பார்த்து வெளிச்சம் கொடுப்பதில்லை. அது போன்றுதான் புத்த பெருமானும். சகல உயிரினங்களுக்கும் கருணை காட்டுமாறு போதித்துள்ளார். புத்தர் போதித்த கருணையில் இனப்பாகுபாடுகள் கிடையாது. சகல உயிர்களுக்கும் நல்லதே நடக்க வேண்டும் என நாம் காலை மாலையில் 'சுவபத்வேவா' என்று பிரார்த்திக்கிறோம்.

இவ்வாறான நடைமுறைப் பழக்கங்களுக்கு முற்றிலும் விரோதமான முறையில் ஏனைய இனத்தவர்களை எமக்கு பாகுபடுத்திப் பார்க்க முடியாது. நான் ஒரு பௌத்தன் என்ற வகையில் பௌத்த மதத்தை பின்பற்றுகிறேன். அது போன்று ஏனைய மதங்களையும் புரிந்து வைத்துள்ளேன். அதை அவர்களுக்குப் பின்பற்றும் உரிமையும் உள்ளது. அது போன்று அதை போதிக்கும் உரிமையும் உள்ளது. எல்லோரையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது.

நான் சில காலம் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் பௌத்த மதத்தை போதித்து வந்தேன். என்னிடம் பல மதத்தவர்கள் வந்து பௌத்தத்தை கற்கிறார்கள். அவர்களுக்கு நான் போதிக்கிறேன். ஆனால் அவர்கள் இதில் இணைய வேண்டும் என்ற வற்புறுத்தலில்லை.

நாம் அமெரிக்காவில் விகாரையொன்றை ஆரம்பித்தோம். வெசாக் பண்டிகைக்கு, வெசாக் கூடொன்றை உருவாக்க வேண்டியிருந்தது. அப்போது ஒருவரும் இருக்கவில்லை. பைஸல் என்ற முஸ்லிம் சகோதரர் எமக்கு அதை செய்து தந்தார். அக்காலத்தில் கணினி வசதிகள் எதுவும் காணப்படவில்லை. எனக்கு ஒரு தட்டச்சு உபகரணம் தேவைப்பட்டது. ஒரு முஸ்லிம் வாலிபர் அதை எனக்குத் தந்துதவினார்.

இன்றும் கூட அங்கு முஸ்லிம்கள் எம்மோடு அன்னியோன்ய உறவுகளை பேணி வருகிறார்கள். அமெரிக்காவில் மாத்திரமல்ல, நான் தாய்வானில் இருக்கும் பொழுதும் ஜப்பானில் இருக்கும் பொழுதும் முஸ்லிம்கள் எமக்குக் கூடுதலாக உதவி புரிந்தார்கள். ஏனைய மதத்தவர்களும் அப்படித்தான்.

எமது பண்பாடுகள் பழக்க வழக்கங்கள் எல்லோருக்கும் நியாய்மானதாக இருந்தால், எனக்கொரு தீங்கும் அடுத்தவர்களுக்கு ஒரு தீங்கும் ஏற்படுவதில்லை என்றால், அதைப் பின்பற்றுவதில் தவறுவதில்லை.

எல்லா மதத்திலும் தீவிரவாதப் போக்குடையவர்கள் உள்ளார்கள். அவர்களே சமூகத்தில் சீர்கேடுகளை ஏற்படுத்துகிறார்கள். பள்ளிகளை அழிக்கிறார்கள். விகாரைகளை உடைக்கிறார்கள். இனவாத்தை தூண்டுகிறார்கள். மனது உள்ளவர்களுக்கே மனிதர் என்கிறோம். எனவே மனதால் சிந்தித்து கெட்டதை பிரித்தறிந்து நல்லவற்றை எப்போதும் மனதில் புகுத்த வேண்டும்.

இது கறுப்பு அது வெள்ளை என்பதை விளங்க வேண்டும். கறுப்பு இருப்பதனால் தான் வெள்ளையை எமக்குப் புரிந்துகொள்ள முடிகிறது. எல்லா மதத்திலும் பொய் தவறு எனப்படுகிறது. ஒரு பொய்யால் குடும்பமொன்று அழியலாம். சமூகமும் அழியலாம்.

எமது சிறிய நாட்டில் சகல மதத்தவர்களும் உள்ளார்கள். எல்லோரை யும் மதிக்க வேண்டும் 'காலாம' சூத்திரத்தில் புத்த பொருமான் எல்லா மதப் போதனைகளையும் மதிக்குமாறும், நல்லவற்றை எடுக்குமாறும் கூறியுள்ளார். இளம் தலைமுறைக்கு நாம் நல்லதொரு முன்மாதிரியை வழங்க வேண்டும். புத்தர் பௌத்தத்தை அடைய முன்னர் ஏனையவர்களுக்கே உபதேசம் செய்தார்கள். நாம் வலுக்கட்டாயமான முறையில் மதத்தை போதிக்கக் கூடாது.

குழந்தைகளின் படிப்புக்கு நான் உதவுகிறேன். நான் சகல இன மாணவர்களுக்கும் புலமை பரிசில் கொடுக்கிறேன். என்னிடம் புலமைப் பரிசில் பெற்று களனி பல்கலையில் மருத்துவர்களான நிறைய முஸ்லிம்கள் உள்ளார்கள். அவர்கள் என்னை மதிக்கிறார்கள். அது போதும் எனக்கு. சமூகத்திற்கு நல்லவற்றை செய்ய மருத்துவர் தேவை. அதை உருவாக்குவதில் இனப் பாகுபாடு பார்க்கத் தேவையில்லை.

திஹாரி அல் அஸ்ஹர் கல்லூரிக்கு தேவையான கட்டிடமொன்றை எனது சொந்த செலவில் கட்டிக் கொடுக்க தீர்மானித்தேன். அன்றிலிருந்து எனது பேஸ்புக் பக்கத்திக்கு நிறைய எதிர்ப்புக்கள் வந்தன. நான் தொலைபேசியை செயலிழக்கச் செய்தேன். எமது இலக்கு நல்லதொரு மாணவர் சந்ததியை உருவாக்குவது. அதன் படி ஒரு சமூகம் உருவானால் அவர்களும் எதிர்காலத்தில் இது போன்ற விடயங்களை செய்வார்கள். முஸ்லிம்கள் அழைக்கும் பொது நிகழ்வுகளில் நான் கலந்து கொள்கிறேன். இந்துக் குழந்தைகளுக்காகவும் ஒரு கல்விக் கூடத்தை யாழ்ப்பாணத்திலோ அல்லது வேறு எங்காவதோ கட்டிக் கொடுக்கும் எதிர்பார்ப்பில் உள்ளேன்.

அன்று முஸ்லிம்கள் எமக்கு அதிகளவில் உதவினார்கள். அன்று அடிக்கல் நாட்டு விழாவில் மௌலவி அவர்கள், நீங்கள் பாடசாலைக்கு அடிக்கல் நாட்டவில்லை. நல்லிணக்கத்திற்கு அடிக்கல் நாட்டினீர்கள் என்றார். எவ்வளவு இனிமையான கருத்து இது. இவற்றையல்லவா ஊடகங்கள் வாயிலாக மக்களுக்குச் சொல்ல வேண்டும். திஹாரி, கஹடோவிட போன்ற கிராமங்களில் உள்ள மக்கள் மனதில் எம்மை பற்றி நல்லதொரு மனப்பதிவு உள்ளது.

எம்மிடம் ஐந்து விரல்கள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். இந்த சமூகத்தில் தீவிரவாதப் போக்குடையவர்கள் உள்ளார்கள். பண்டார நாயக்கவினை கொலை செய்த புத்த ரக்கித தேரரை அன்று எல்லோரும் கடுமையாகச் சாடினார்கள். எனவே கடும்போக்கு சிந்தனை படைத்தவர்கள் சகல மதங்களிலும் உள்ளார்கள். எம்மிடம் எல்லா பிரிவுகளிலும் குறைபாடுகள் உள்ளன.

உண்மையை சொல்லி மக்களை தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கு உள்ளது. அதன் மூலம் நல்லிணக்கம் ஏற்படும். நாம் எல்லோரும் ஒன்றுபட்டு புரிந்துணர்வுடன் வாழ வேணடும் என்ற கொள்கையை முதலில் மக்கள் மயப்படுத்த வேண்டும்.

மார்க்க தலைவர்களாக இருந்தாலும் சமூக செயற்பாடுகளில் முன் நிற்கிறார்களில்லை. நான் குறித்த பாடசாலை கட்டிடத்தை நிர்மாணிக்கவுள்ளேன் என கேள்விப்பட்டு பிரதேசத்தை சேர்ந்த ஒரு தேரர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வினவினார். அவரது குரல் சற்று வித்தியாசமாக இருந்தது. தேவையற்ற முறையில் கதைத்தார். அது போன்ற பணிகளை எதற்குச் செய்கிறீர்கள் என்ற வகையிலான கருத்துக்களை கூறினார்.

நான் அவருக்கு நல்ல விடயங்களைக் கூறினேன். தெளிவுபடுத்தினேன். குரோதம் கொள்வதில் அர்த்தமில்லை. சகலரையும் மதிக்க வேண்டும் என்ற கருத்தை கூறினேன். மறுநாள் அவர் என்னை அழைத்து அவர் நண்பர்களிடம் கதைத்ததாகவும் இது போன்ற நல்ல விடயங்கள் தேவை என்றும் கூறினார். எனவே இதுபோன்ற நல்ல விடயங்களை செய்வதன் மூலம் தீய கொள்கை படைத்த ஒருவருக்கு நல்ல பார்வையை ஏற்படுத்துவதே எமக்கு தேவை. இதன் மூலமே நல்லிணக்கம் வலுப்பெறும்.

எல்லா மதத்திலும் உள்ள ஒரு சில தீவிரப்போக்குடையவர்களை நல் வழிக்கு கொண்டு வரும் கடப்பாடு மதகுருமார்களுக்குள்ளது. நான் இந்து, நான் முஸ்லிம், பௌத்தன் என்று லேபல் குத்துவதை விட நல்ல மனிதப் பண்புகளை பிள்ளைகளிடம் சொல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டும்.

எல்லோரும் ஒன்றிணையும்போது நல்லவற்றை இலகுவாகச் செய்யலாம். சமவுடைமையோடு அடுத்த மதத்தவர்களோடு நல்ல முறையில் உரையாடல்களை அதிகரிக்க வேண்டும். முஸ்லிம் மதப்போதகர்கள், பெரியோர், வளர்ந்தவர்கள், பெற்றோர் பிள்ளைகளை வளர்க்கும் போது நல்லதை சொல்லி கொடுக்க வேண்டும் அடுத்த மதத்தவர்களை பற்றி நல்ல அபிப்பிராயங்களை சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்போது நல்லிணக்கம் மிக்க சூழலை இலகுவாக வடிவமைத்துக்கொள்ளலாம்.

புத்த பெருமானின் ஒரு போதனை இங்கு நினைவுகூறத்தக்கது. 'பரத்தன் படிபஜ்ஜத்' அடுத்தவர்களின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் நலவுகளுக்கும் எம்மால் முடியுமான வகையில் உதவி புரிய வேண்டும். இவ்வகையிலேயே நான் என்னாலான நற்பணிகளை செய்து வருகிறேன்.

ஏழை மக்களுக்கு நான் வீடுகளை கட்டிக்கொடுத்துள்ளேன். 336 சுனாமி வீடுகளை ஒரு வருடத்திற்குள் கட்டிக் கொடுத்தேன். அதில் ஒருபோதும் இன வேறுபாடு பார்க்கவில்லை. கல்முனையில் சிறுவர் பாடசாலையொன்றை கட்டிக் கொடுத்தேன். வைத்தியசாலைகளுக்கு கட்டில்களை வழங்கினேன். அடுத்தவர்களின் நலனுக்காக வேண்டி என்னாலான சகல பணிகளையும் புத்த பெருமானின் போதனைகளுக்கமைய செய்து வருகிறேன்.

சமுதாயத்தை நாம் வேறுபட்ட கண்ணாடிகளால் பார்க்கக் கூடாது. அதை நீக்கி விட்டு நிஜத்தை பார்க்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மனது தான் காரணம். மனதை திடப்படுத்த வேண்டும். அப்போது எல்லாப் பகுதிகளும் சீராக அமையும்.

---

• பாரதி

# வாய்ச் சொல் வீரர்கள்

ஜெருசலம் நகரில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசலுக்குள்ளும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும், இஸ்ரேல் மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானமொன்றினை, ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பான யுனெஸ்கோ கடந்த மாதம் நிறைவேற்றியிருந்தது.

மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசலில் முஸ்லிம்கள் சுதந்திரமாகத் தமது வணக்க வழிபாடுகளில் ஈடுபடுகின்றமையை, தனது ஆக்கிரமிப்பு மற்றும் சட்ட விரோத செயற்பாடுகள் மூலம் இஸ்ரேல் எதிர்ப்பதனை, அந்தத் தீர்மானத்தில் யுனெஸ்கோ விமர்சித்திருந்தது.

குறித்த தீர்மானத்தில், மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளி உட்பட அங்குள்ள இடங்களைக் குறிப்பதற்காக இஸ்ரேலியர்கள் உபயோகிக்கும் சொற்கள் தவிர்க்கப்பட்டு, முஸ்லிம்கள் பயன்படுத்தும் சொற்களே இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதனால், அந்தத் தீர்மானத்தினை 'அபத்தமானது' என்று இஸ்ரேல் சாடியுள்ளது. அதேவேளை - குறித்த தீர்மானம் 'ஒருதலைப்பட்சமானது' என்று, அமெரிக்கா விமர்சித்துள்ளது.

மேற்படி தீர்மானத்துக்கு ஆதரவாக 24 நாடுகள் வாக்களித்திருந்தன. அல்ஜீரியா, பிரேசில், சீனா, ஈரான், ரஷ்யா மற்றும் தென் ஆபிரிக்கா போன்றவை, தீர்மானத்தை ஆதரித்த நாடுகளில் சிலவாகும். அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, நெதர்லாந்து, லிதுவேனியா மற்றும் எஸ்டோனியா ஆகிய ஆறு நாடுகள் யுனெஸ்கோ தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன.

இந்த நிலையில் அல்பீனியா, ஆஜன்டீனா, பிரான்ஸ், கிரீஸ், ஜப்பான், தென்கொரியா மற்றும் சுவீடன் உள்ளிட்ட 26 நாடுகள், இந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் தவிர்த்திருந்தன. சேர்பியா மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளும் வாக்கெடுப்புக்கு வருகை தரவில்லை.

இங்கு குறிப்பிட வேண்டிய விடயம் என்னவென்றால், இஸ்ரேலின் ஆக்கிரமிப்பினை எதிர்த்து வாக்களிக்காமல் ஒதுங்கியிருந்த 26 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இலங்கையின் இந்த நிலைப்பாடானது, இங்குள்ள முஸ்லிம்களிடையே கடுமையான ஆத்திரத்தினை ஏற்படுத்தியுள்ளது.

யுனெஸ்கோ தீர்மானத்துக்கு வாக்களிக்காமல் தவிர்த்துக் கொண்டதன் மூலம், இஸ்ரேலுக்கு ஆதரவான நிலைப்பாடொன்றினை இலங்கை எடுத்துள்ளது. இதனூடாக அமெரிக்காவை சந்தோசப்படுத்துவதற்கு இலங்கை முயற்சித்துள்ளது. இஸ்ரேல் என்பது 'அமெரிக்காவின் கள்ளக் குழந்தை' என்கிற விமர்சனம் உலகளவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

யுனெஸ்கோவின் மேற்படி தீர்மானத்தில் கலந்து கொண்டு, இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு எதிராக வாக்களிக்காமல் - இலங்கை ஒதுங்கிக் கொண்டமை குறித்து, இலங்கையிலுள்ள சில முஸ்லிம் அரசியல்வாதிகள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர்.

குறிப்பாக, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் [illegible] இந்த நிலைப்பாடு குறித்து நாடாளுமன்றில் கதை[illegible] அதிருப்தியினை வெளிப்படுத்தியதோடு, பலஸ்தீனத்துடன் இலங்கைக்கு இருந்து வரும் நீண்டகால உறவு குறித்தும் நினைவுபடுத்தியுள்ளார். மேலும், இது குறித்து வெளிவிவகார அமைச்சு உரிய விளக்கமொன்றினை வழங்க வேண்டுமெனவும் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், யுனெஸ்கோ தீர்மானத்துக்கு வாக்களிக்காமல், இலங்கை விலகி நின்றமைக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆரிப் சம்சுதீன், தனிநபர் பிரேரணை கொண்டுவரும் முயற்சியொன்றினை மேற்கொண்டார். இதற்கிணங்க, கடந்த 27 ஆம் திகதி நடைபெற்ற மாகாணசபை அமர்வுக்கான நிகழ்ச்சி நிரலில், தனது பிரேரணையினை இணைத்துக் கொள்ளுமாறு, பல நாட்களுக்கு முன்னரே எழுத்து மூலம் அறிவித்திருந்தார். ஆயினும், கடந்த சபை அமர்வுக்கான நிகழ்ச்சி நிரலில், அந்தப் பிரேரணை சேர்க்கப்படாமல் தடுக்கப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் அவமானத்துக்குரிய விடயம் என்னவென்றால், குறித்த பிரேரணையினை நிகழ்ச்சி நிரலில் சேர்க்காமல் தடுத்தவர், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் என்று கூறப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டினை மாற்றுக் கட்சிக்காரர்கள் எவரும் கூறவில்லை. முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும், அந்தக் கட்சியினுடைய அரசியல் மற்றும் மத விவகாரங்களுக்கான செயலாளருமான சட்டத்தரணி எம்.ஏ.அன்சில்தான் இந்தக் குற்றச்சாட்டினை முன் [illegible]

இது இப்படியிருக்க, கிழக்கு மாகாணசபையில் உறுப்பினர் ஆரிப் சம்சுதீன் கொண்டுவர முயற்சித்த மேற்படி தனிநபர் பிரேரணை தடுத்து நிறுத்தப்பட்டமை குறித்தும், இதன் பின்னணியில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் இருந்தார் எனும் குற்றச்சாட்டு தொடர்பாகவும் மு.கா தலைவர் ரவூப் ஹக்கீமிடம் கேட்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த மு.கா தலைவர், ''ஊடகவியலாளர் கேட்கும் வரையில், இது குறித்துத் தான் அறிந்திருக்கவில்லை'' என்று கூறினார். மேலும், இவ்விடயம் தொடர்பில் தான் விசாரிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மு.கா தலைவரின் கூற்றுப்படி பார்த்தால், கிழக்கு மாகாண சபையில் அரசாங்கத்தைக் கண்டித்து பிரேரணையொன்றினைத் தான் கொண்டுவரப் போவது குறித்து, கட்சித் தலைவரிடம் ஆரிப் சம்சுதீன் தெரியப்படுத்தவில்லை எனப் புரிந்துகொள்ள முடிகிறது. அதன்பின்னர், குறித்த பிரேரணை, சபை அமர்வு நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படாததன் பின்னணியில் முதலமைச்சர் இருந்தார் என்கிற குற்றச்சாட்டுக் குறித்தும், மு.கா தலைவரிடம் கூறப்படவில்லை என்பதையும் விளங்கிக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

மேற்படி விடயங்கள் மு.கா தலைவருக்கு ஏற்கெனவே தெரியப்படுத்தப்பட்டிருந்தால், ''இவை குறித்து எனக்கு எதுவும் தெரியாது'' என்று, மு.கா தலைவர் கூறியிருக்க மாட்டார் என்று ஒருபக்கம் யோசிக்கத் தோன்றினாலும், இந்த விவகாரம் தொடர்பில் ஊடகங்களிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டி விடக் கூடாது என்பதற்காக, ''இது பற்றி எனக்கு எதுவும் தெரியாது''

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருட்டுக் குடும்பத்திற்குப் பதிலாக இன்று திருட்டுக் கூட்டணியொன்று உருவாகியுள்ளது

**வஸந்த சமரசிங்க**
வடமத்திய மாகாண சபை உறுப்பினர்

மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினரும் வட மத்திய மாகாண சபை உறுப்பினருமான வஸந்த சமரசிங்க அவர்கள் ஊழல் எதிர்ப்பு குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளராக உள்ளார். சமகால அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகள் தொடர்பில் அவருடன் மீள்பார்வை மேற்கொண்ட பிரத்தியேக நேர்காணல் இங்கு தரப்படுகிறது..

**நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி**

- *நீங்கள் ஊழல் எதிர்ப்பு குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளராக செயற்படுகிறீர்கள். அதன் முன்னேற்றங்கள் குறித்து சற்று குறிப்பிட முடியுமா?*

நான் 2011 ஆம் ஆண்டு முதல் இவ்வமைப்புக்குப் பங்களித்து வருகிறேன். கடந்த ராஜபக்ஷ குடும்ப ஆட்சிக் காலப்பகுதியில் இடம்பெற்ற ஊழல், மோசடி தொடர்பில் சமூகத்தில் நிலவி வந்த உரையாடலுக்கு வலுச் சேர்க்கும் முகமாகவே ஊழல் எதிர்ப்புக் குரல் அமைப்பை உருவாக்கினோம். தொழிலாளர்கள், அரச சேவையில் ஓய்வு பெற்றவர்கள், பொறியியலாளர்கள், கணக்காய்வாளர்கள் உள்ளிட்ட ஊழல் எதிர்ப்பு செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து இவ்வமைப்பைக் கட்டியெழுப்பினோம்.

2011 ஆம் ஆண்டு முதல் கடந்த அரசாங்கத்திலும் நடப்பு அரசாங்கத்திலும் உள்ள பெரும்பாலானவர்களுக்கு எதிராக முறைப்பாடுகளை முன்வைத்துள்ளோம். 2015 ஜனவரி 8 ஆம் திகதிக்கு முன்னர் நாம் ஒப்படைத்த எவ்வித முறைப்பாடுகளும் விசாரணைக்கு எடுக்கப்படவில்லை. அதன் பின்னர் பல முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு நீதிமன்றில் வழக்குகளும் தொடுக்கப்பட்டுள்ளன. இவ்வரசாங்கத்தில் உள்ளவர்களுக்கு எதிராக முன்வைத்த முறைப்பாடுகள் தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

- *தற்போதைய அரசாங்கத்தில் உள்ளவர்களுக்கு எதிராகவும் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளனவா?*

கடந்த அரசாங்கத்திலும் இருந்து விட்டு தற்போதைய அரசாங்கத்திலும் உள்ள அமைச்சர்கள் உள்ளிட்ட பலருக்கு எதிராக முறைப்பாடுகளை முன்வைத்துள்ளோம். நிதி அமைச்சர் வாகனங்களை இறக்குமதி செய்து மோசடியான முறையில் சுங்கத்திலிருந்து விடுவித்துள்ளார். இது தொடர்பிலும் நாம் முறைப்பாடு செய்தோம். மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்திலிருந்த 574 வாகனங்களின் புத்தகங்கள் காணாமல் போயுள்ளன. அமைச்சர் ராஜித சேனாரத்ன மோதர மீன்பிடி துறைமுகத்தை குத்தகைக்கு வழங்கியமை தொடர்பிலும் முறைப்பாடு செய்தோம்.

அமைச்சர் துமிந்த திஸாநாயக்க மதிப்பீட்டு விலையிலும் கூடிய தொகைக்கு கட்டிடமொன்றை கொள்வனவு செய்தமை தொடர்பிலும் முறைப்பாடு செய்தோம். அதுபோன்று லக்ஷ்மன் கிரியெல்ல, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, பீ. ஹெரிஸன் மற்றும் சஜித் பிரேமதாஸ போன்றவர்களுக்கு எதிராகவும் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம். ஆனால் அவை தொடர்பில் இன்னும் விசாரணைகள் இடம்பெறவில்லை. ராஜபக்ஷ ஆட்சிக் காலப் பகுதியில் களவு, ஊழல் மோசடிகளில் தொடர்புற்றிருந்தவர்களும் இவ்வரசாங்கத்துடன் கை கோர்த்துள்ளார்கள்.

- *அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் ஊழல் மோசடிகளுக்குத் தூண்டப்படுவது ஏன்?*

களவு செய்தவர்களுக்கு தண்டணை வழங்கப்படவில்லை என மஹிந்த ராஜபக்ஷவும் கூறியிருந்தார். தோல்வியடைந்தால் மாத்திரம் தான் அவர்களுக்கு இவ்விடயங்கள் ஞாபகம் வரும். தண்டனை வழங்கும் தேவையொன்று அவர்களுக்கு இருந்திருக்கவில்லை. திருட்டுச் செயல்களுக்கு உதவி புரிந்தார்கள். இல்லாவிட்டால் நாமல் ராஜபக்ஷவுக்கு சிறைக்குச் செல்ல வேண்டியிருக்காது.

மெதமுலன பெரிய வீட்டின் வருவாய்களையல்ல அவர்கள் செலவழித்தது. ...... இச்சந்தை பொருளாதாரத்திற்குள் அரசியல் என்பது வரப்பிரசாதங்களை பெற்றுக்கொள்ளும் முறைகேடான வழிமுறையொன்றாக மாறியுள்ளது. இதனாலேயே மோசடி பற்றிய போராட்டக் கோஷம் ஜனவரி 8 வெற்றியை பெற்றுத் தந்தது.

2010 இல் ஆட்சிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ 25 வருடங்களாவது அரச சிம்மாசனத்தில் அமரலாம் என்னும் இறுமாப்புச் சிந்தனையில் அரசவாளையும் அரச கதிரையையும் தேடிக்கொள்வதற்கு பாதுகாப்பு பிரிவினரை ஈடுபடுத்தி புதையல் தோண்டினார். திருடுவதற்குரிய முறையிலேயே இவ்வரசியல் முறை உருவாக்கப்பட்டுள்ளது. என்னிடம் கேட்காமல் கைதுசெய்ய வேண்டாம் என்று கூறுபவர்கள் உள்ளார்கள். இம்மோசடி மிக்க முறைக்கு இதுவொரு சான்று.

- *சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு அரசியல் தாக்கம் உள்ளதென ஜனாதிபதி அவர்கள் கூறிய கருத்து சரியென நீங்கள் கருதுகிறீர்களா?*

நிச்சயமாக உள்ளது. ஆனாலும் துயில் களைந்து எழும்பியது போன்று ஜனாதிபதிக்கு அவ்வாறு கூற முடியாது. அவருக்கு தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை. சுயாதீன ஆணைக்குழுக்கள் எப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டதோ அன்று முதல் அக்குழுக்களுக்கு அச்சுறுத்தல்கள் இருந்து வருகின்றன.

மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் அந்நிலை மிகவும் கொடூரமாக இருந்தது. ஜனநாயகம், நல்லாட்சி, அடிப்படை உரிமைகள் பற்றிக் கதைத்த இவ்வாட்சியாளர்கள் ஆணைக் குழுக்களுக்கூடாக கைது செய்கின்ற பொழுது அதை தங்களிடம் தெரிவிக்க வேண்டும் என்கிறார்கள்.

17 ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை நீக்கிவிட்டு 18 ஆவது சீர்திருத்தத்தை கொண்டு வந்ததன் மூலம் மஹிந்த ராஜபக்ஷ ஜனநாயகத்தை இல்லாமல் செய்தார். இவ்வரசாங்கமும் தற்பொழுது அதையே செய்கின்றது. ஆணைக் குழுக்கள் அமைக்கப்பட்டாலும் அதன் பெறுபேறுகள் சமூகமயப்படுவதில்லை. அதற்கு ஆட்சியாளர்கள் இடமளிப்பதில்லை.

- *உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்ட சீர்திருத்தத்தின் மூலம் மக்கள் விடுதலை முன்னணியின் பிரதிநிதித்துவம் குறைவடையும் என்பதாக ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறதே...*

நாம் வாக்குகள் இன்றியும் அரசியலில் ஈடுபட்டு வரும் கட்சி. 1980 இல் அபிவிருத்தி சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடும் வரையில் தேர்தல்கள் இல்லாமலேயே அரசியல் செய்தவர்கள் நாங்கள். தேர்தல் அரசியல் செய்வதா இல்லையா என்கின்ற விடயம் ஒரு பிரச்சினையல்ல. தேர்தல் முறை ஒரு பிரச்சினையல்ல. விகிதாசார முறையா அல்லது தொகுதிவாரி முறையா என்பதும் எமக்குப் பிரச்சினையல்ல. நாம் எதற்கும் தயார். நடைமுறையிலுள்ள அரசியல் முறை தொடர்பிலேயே எமக்குப் பிரச்சினை உள்ளது.

- *மக்கள் விடுதலை முன்னணி தற்பொழுது சோசலிஸக் கொள்கையை விட்டும் தூர விலகிச் செல்வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இது குறித்து...*

முதலாளித்துவம் மோசடி மிக்கது. சமவுடமை வாதக் கொள்கையை கட்டியெழுப்புவதற்காகவே நாம் எப்பொழுதும் முன்நிற்கிறோம். மக்களது நிஜப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதில் முதலாளித்துவம் தோல்வி கண்டுள்ளது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றிருந்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்நாட்டை மாற்றியமைக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் இருந்தன. அதற்குப் பதிலாக அவர் குடும்பத்தை பலப்படுத்தினார். அவரை சுற்றியிருந்தவர்களை பலம் பெறச் செய்தார். அதை நாம் தோல்வியடையச் செய்ய வேண்டும் என்று கூறினோம். தோற்கடித்தோம்.

அன்றைய திருட்டுக் குடும்பத்திற்குப் பதிலாக இன்று திருட்டுக் கூட்டணியொன்று உருவாகியுள்ளது. 1952 இல் பிரிந்தவர்கள் இன்று ஒன்றிணைந்துள்ளார்கள். போலி வாக்குறுதிகளை வழங்குகிறார்கள். அவரவர் சுயதேவைகளைப் பார்க்கிறார்களே ஒழிய, மக்களின் பிரச்சினைகளை தீர்க்கிறார்களில்லை. குழந்தைகளுக்கு பாடசாலைகளை இல்லாமல் ஆக்கினார்கள். குழந்தைகளுக்கு திரிபோஷாவை இல்லாமல் செய்தார்கள். மருத்துமனைகளில் மருந்துகளை இல்லாமல் செய்தார்கள். மக்களின் வாழ்வாதாரங்களை இல்லாமல் செய்கிறார்கள். விளைச்சல்களை விற்பதற்கு முறையொன்றை இல்லாமல் செய்த இம்முறைமை 68 வருடங்களாக செயற்பட்டு வருகிறது. இன்னும் இம்முறைமையை ஊதிக்கொண்டிருப்பதா அல்லது மாற்றுவதா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும்.

- *மக்கள் விடுதலை முன்னணி முதலாளித்துவ கட்சிகளுடன் இரகசிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருப்பதாக குற்றம் சுமத்தப்படுகின்றதே...*

மன உளைச்சலில் உள்ளவர்கள் அப்படித்தான் கதைப்பார்கள். 2002 இல் ரணில் விக்ரமசிங்க திருட்டு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்ட பொழுது நாம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினை உருவாக்கி அதை தோற்கடித்தோம். நாம் மஹிந்தவின் ஏகாதிபத்திய ஆட்சியையும் கவிழ்த்தோம்.

அவ்வகையிலான கால அவசியமிக்க விடயங்களை நிறைவேற்றுவது இரகசிய உடன்படிக்கைகளுக்கமைய செயற்படுவதென்பது பொருளல்ல. நாம் திரை மறைவில் ஒருவருடனும் ஒப்பந்தம் செய்தது கிடையாது. எமக்கு மக்களுடனேயே ஒப்பந்தம் ஒன்றுள்ளது. அதன் காரணமாகவே நாம் இவ்வரசாங்கத்தின் திருட்டுச் செயல்களை நாட்டிற்கு அம்பலப்படுத்துகிறோம்.

இவ்வாட்சியாளர்களிடம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடையாது. நாம் மறைந்து கொண்டு கண்ணாம்பூச்சி விளையாடும் கட்சியொன்றல்ல. நாம் அரசியல் முடிவுகளை எடுப்பது இரகசிய உடன்படிக்கைகளுக்கமைவாக இல்லை. அந்தந்த சந்தர்ப்பங்களில் சமூகம் வேண்டும் விடயங்களின் பிரகாரமே நாம் அரசியல் முடிவுகளை எடுக்கிறோம்.

- *மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பம் தொட்டே மேற்குலக ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராக முன்நின்றது. ஆனால், மேற்குலக சக்திகளின் வலுக் கட்டாயத்தினால் ஏற்படுத்தப்பட்ட காணாமல் போனோர் தொடர்பிலான அலுவலகத்திற்கு ஆதரவு வழங்கியது. இதற்கான காரணம் என்ன?*

எமது நாட்டில் காணாமல் போனோரின் உறவினர்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்று கூட தெரியாது. வீடு வரும் வரையில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இது மிகவும் சிக்கலுக்குரிய விவகாரம். காணாமல் போவதென்பது மரணத்தை விட கொடுமையானது.

காணாமல் போனோர் தொடர்பில் தேடிப் பார்த்து தகவல்களை கூறுவதற்கென நாட்டில் ஓரிடம் இருக்கவில்லை. ஆழமாக சிந்தித்ததன் பின்னரே மக்கள் விடுதலை முன்னணி அம்முடிவை எடுத்தது. இது மேற்கத்தேய சக்திகளுக்கு சார்பாக செல்லும் விடயமொன்றல்ல.

- *அரசாங்கம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணிக்கு பல விமர்சனங்கள் உள்ளன. எதிர்வரும் காலங்களில் அதற்கெதிராக எவ்வகையிலான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு திட்டமிட்டுள்ளீர்கள்?*

ராஜபக்ஷவும் ரணிலும் திரைமறைவு ஒப்பந்தப் பிரகாரம் செயற்படுகிறார்கள். இவ்வொப்பந்தத்தின் பிரகாரம் ரணில் விக்ரமசிங்க செயற்படும்போது மைத்ரிபாலவுக்கு (பக்.14)




புத்தளம் மாவட்டத்தில் பள்ளிவாசல் நிர்வாகமொன்று ஒரு பெண்மணிக்கு ஹத்து அடித்ததன் காரணமாக வந்த விளைவுகள் கடந்த நாட்களின் பேசு பொருளாகியிருந்தன. பள்ளிவாசல்கள் சமூகத்தினை ஆள்கின்ற காலங்களில் சமூகத் தீமைகளை ஒழிப்பதற்கென இதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தொழுகைக்கு மட்டும்தான் பள்ளிவாசல் என்று மாறிய பின்னர்தான் சமூகக் கட்டமைப்பில் பள்ளிவாசல்களுக்குரிய சமூகப் பங்களிப்பு அற்றுப் போகத் தொடங்கியது.

ஒரு சில பள்ளிவாசல்கள் சமூகக் கட்டுக்கோப்பைப் பேணும் வகையில் இன்னும் தமது பணியைச் செய்து வந்தாலும், முஸ்லிம் சமூகத்துக்கே உரித்தான இற்றைப்படுத்தல்கள் பள்ளிவாசல் நிர்வாகிகளிடமும் இல்லாமையால் இது போன்ற பணிகள் சிக்கலாகியிருக்கின்றன என்பதனைத்தான் புத்தளம் சம்பவம் உணர்த்துகிறது.

தற்போது பள்ளிவாசல்களின் சமூகக் கட்டமைப்புப் பணி தொடர்பில் எங்குமே பேசப்படுவதில்லை. நமக்கேன் வீண்வம்பு என்று ஒதுங்கி விடுகின்ற அப்பாவி நிர்வாகிகளின் கைகளுக்குள் பள்ளிவாசல்கள் சிக்கி விட்டதால் வந்த விளைவு இது. இதனால் ஊர்களிலே கண்டுகொள்ளாமல் விடப்பட்ட தீமைகள் விஸ்வரூபமெடுத்து தாண்டவமாடுகின்றன.

இந்தத் தீமைகளில் இன்பம் கண்டு, அதிலே மூழ்கிப் போனவர்களால் நிரம்பி இருக்கும் ஊர்களும் இந்த நிர்வாகங்களில் சுகம் கண்டு வருவதேயன்றி இவர்களை மாற்றுவதற்கு முன்வருவதில்லை. தமதிஷ்டப்படி ஆடுவதற்கு பள்ளிவாசல்கள் தடையாக வந்துவிடக் கூடாது என்பது இவர்களது கங்கணம். இதனால் சமூகத்திலே தீமைகள் சுதந்திரமாக வளர்கின்றன. இந்தக் குட்டையிலே ஊறியவர்கள்தான் சுற்றிச் சுழன்று அடுத்த நிர்வாகியாகத் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

இறுதியில் காமக் கிறுக்கர்களும், பெண் பித்தர்களும், ஊழல் பெருச்சாளிகளும், வட்டி வியாபாரிகளும், குடிகாரர்களும், ஏமாற்றிப் பணம் பறித்து சிறைவாசம் சென்ற குற்றவாளிகளும் பதுங்கும் இடமாக பள்ளிவாசல் நிர்வாக சபை மாறி வருகிறது. இந்தக் கும்பல்களால் ஊரிலே பரவியிருக்கின்ற தீமைகளை அடக்க முடிவதில்லை. அடக்குவதற்கு முன்வந்தாலும் இவர்களுக்கு யாருமே செவிசாய்க்கப் போவதில்லை. சமூகத்தின் அழிவு இந்த நச்சு வட்டத்துக்குள்ளால்தான் சுழலுகிறது.

கணவனால் கைவிடப்பட்ட ஒரு அபலைப் பெண்ணின் வீட்டுக்கு அடிக்கடி ஆண்கள் வந்து செல்வதை விசாரிக்கவென ஒரு பள்ளிவாசல் தயாரானபோது, அப்படி வருபவர்களில் பள்ளிவாசல் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள் என அந்தப் பெண் தெரிவித்ததைத் தொடர்ந்து விசாரணை முயற்சியை பள்ளிவாசல் கைவிட்ட சம்பவங்களும் நமது சமூகத்துக்குள்ளால் நடந்திருக்கின்றன. இந்த இலட்சணத்தில் சமூகத் தீமைகளை யார் களைவது, யார் யாருக்குத் தண்டனை விதிப்பது?

விபச்சாரத்தில் ஈடுபட்டதாக ஒரு பெண்ணை இயேசு நாதரிடம் அழைத்து வந்த சிலர், இவளை கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்று முறையிட்டனர். உங்களில் விபச்சாரத்தில் ஈடுபடாதவர்கள் இருந்தால் அவர்கள் முதலில் கல்லெறியலாம் என்று அவர் சொன்னபோது அவளுக்குக் கல் எறிய அங்கு யாருமே எஞ்சியிருக்கவில்லை என அவரது வரலாற்றில் சொல்லப்படுகிறது. இதுதான் எமது சமூகத்தினதும் நிலையா?

சமூகத்திலே தீமை மலிந்து போயிருக்கிறது. அதிலிருந்து சமூகத்தை மீட்க வேண்டியவர்களும் அதே தீமைகளில் உழன்று கொண்டிருக்கிறார்கள் என்றால் சமூகத்தை பாதுகாப்பது, நிர்வகிப்பது, வழிநடத்துவது யார்? தீமைகளில் திளைத்திருப்பவர்களை ஆளுகை மையங்கள் பாதுகாப்பதும், தீமையில் ஊறியிருப்பவர்கள் ஆளுகை மையங்களைப் பாதுகாப்பதுமான இந்த நச்சு வளையம் தொடருமாக இருந்தால், இந்தச் சமூகத்தை அல்லாஹுதஆலாவும் காப்பாற்றப் போவதில்லை.

இறைபணியை விளங்கி, இறை திருப்திக்காக மட்டும் உழைப்பவர்களைத் தேடியெடுத்து அவர்களின் கைகளில் சமூகத்தை ஒப்படைக்க வேண்டிய தேவை இப்போது சமூகத்துக்கு வந்திருக்கிறது. தீமைகளால் ஆட்கொள்ளப்பட்ட சமூகத் தலைமைகளிடமிருந்து சமூகத்தைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை முடுக்கிவிட வேண்டியிருக்கிறது.

கோவிலிலே குழப்பம் விளைவித்தேன், கோவில் கூடாது என்பதற்காகவல்ல. கோவில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது என்பதற்காக. பூசாரியைத் தாக்கினேன். அவன் பக்தன் என்பதற்காகவல்ல. பக்தி பகல் வேசமாக ஆகிவிட்டதைக் கண்டிப்பதற்காக என்று பராசக்தியில் வீர வசனம் முழங்கிய வீர சிவாஜிகளின் தேவை எமது சமூகத்துக்குள்ளாலும் தேவைப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் காக்கும் நீதிமன்றம்

## "உஸாவிய நிஹண்டய்"

அண்மையில் வெளியிடப்பட்ட பிரபல சிங்கள திரைப்படத் தயாரிப்பாளர் பிரசன்ன விதானகேயின் ''மௌனம் காக்கும் நீதிமன்றம்'', (உஸாவிய நிஹண்டய்) என்ற திரைப்படம் சுயாதீன நீதித்துறை ஒன்றை அவாவுகின்றவர்களுக்கு மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒரு நாட்டின் நீதித்துறை எந்தளவு சுயாதீனமாக இயங்குமோ அந்தளவு அந்நாட்டு மக்களது உடைமைகளும் பாதுகாக்கப்படும். நீதித்துறை சுயாதீனமாக இயங்காத சந்தர்ப்பங்களில் பொது மக்களது உடைமைகள் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகம்.

''உஸாவிய நிஹண்டய்'' திரைப்படம் 1997ம் ஆண்டு மஹவ மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் அப்போது நீதவானாகக் கடமையாற்றிய லெனின் ரத்நாயக்கா என்பவரால் இரு பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட விடயத்தை மையமாக வைத்துத் தயாரிக்கப்பட்டுள்ளது.

முதன் முதலாக இவ்விடயத்தை பகிரங்கப்படுத்தியவர் ராவய வார இதழின் பிரதம ஆசிரியராக கடமையாற்றிய விக்டர் ஐவன். 1997 ஆகஸ்ட் 17ம் திகதி வெளிவந்த பத்திரிகையில் இவ்விடயம் தலைப்புச் செய்தியாக பிரசுக்கப்பட்டது.

குறித்த நீதிபதி தனக்கு முன்னால் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பிணை வழங்குவதை வேண்டுமென்றே தாமதப்படுத்தி, பிணை வழங்கல் தொடர்பாக அவரது மனைவியை தனிப்பட்ட முறையில் விசாரிக்க வேண்டும் என அவரை ஒரு விடுதிக்கு அழைத்துச் சென்று அவரை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாக குறித்த பத்திரிகைச் செய்தியில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பாக குறித்த பெண் அவரது குற்றஞ்சாட்டப்பட்ட தனது கணவனிடம் குறித்த விடயம் தொடர்பாக கூறியதன் பின்னர் அவர் அடுத்து வந்த நீதிமன்ற அமர்வில் நடைபெற்ற சம்பவம் தொடர்பான ஆத்திரத்தினால் நீதிபதியை தாக்கும் நோக்கில் மலத்தை ஒழித்து வைத்து அதனை நீதிபதியை நோக்கி வீசினார். இதனால் கோபமுற்ற நீதிபதியும் அங்கிருந்த அவருக்கு சார்பான சிலரும் குறித்த நபரை அந்த இடத்திலேயே கடுமையாக தாக்கியதால் அவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட வேண்டிய நிலைக்கு உள்ளானார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்த சம்பவம் தொடர்பான விடயம் வெளியில் கசிந்தது. இதன் பின்னர் குறித்த அப்பெண்ணும் தனக்கு ஏற்பட்ட அநீதி தொடர்பாக ஒரு சத்தியக் கடதாசி மூலம் விடயத்தைத் தெரியப்படுத்தினார்.

தன்னால் மேற்கொள்ளப்பட்ட குற்றம் பகிரங்கமாகியதைத் தொடர்ந்து பத்திரிகை தொடர்ந்தும் தகவல்களை பிரசுரித்து வந்தமையால் பொலிஸார் குறித்த குற்றச்சாட்டு தொடர்பாக விசாரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

விசாரணையில் பொலிஸார் குறித்த நீதவானுக்கு எதிரான இரண்டு குற்றஞ்சாட்டுகளும் உண்மை என்பதை உறுதிப்படுத்தி அதனை சட்டமா அதிபருக்கு ஒரு அறிக்கையாக வழங்கினர். தனது நண்பரை காப்பாற்றும் நோக்கில் செயற்பட்ட சரத் என்.சில்வா குறித்த அறிக்கையை மறைத்து தனது நண்பரை காப்பாற்றும் முயற்சிகளை மேற்கொண்டார்.

இவ்வாறு தொடர்ந்தும் சட்டமா அதிபர் தனது அதிகாரத்தை பயன்படுத்தி மாறத் தொடங்கியது.

இவ்வாறு சுயாதீன நீதிமன்றம் ஒன்றிற்காக ராவய பத்திரிகையின் ஆசிரியர் தொடர்ந்தும் சட்ட ரீதியான முறையில் போராடினார். குறித்த சட்டமா அதிபர் அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களின் நெருங்கிய ஆதரவாளராக இருந்தமை காரணமாக ஜனாதிபதி அவர்கள் சட்டமா அதிபருக்கு உதவி செய்யும் நிலைப்பாட்டை எடுத்து குறித்த சட்டமா அதிபரை பிரதம நீதியரசராக நியமனமித்தார். இந்த நியமனம் மூலம் போராட்டம் திசை திரும்ப ஆரம்பித்தாலும் ராவய பத்திரிகை தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றது. நியமனத்தை எதிர்த்து தனது முதற்பக்கத்தை கருநிறமாக மாற்றி குறித்த நியமனம் வழங்கும் புகைப்படத்தை தலைகீழாக பிரசுரித்தது.

நீதிமன்றத்தை அவமதித்ததாக இலகுவாக குற்றஞ்சாட்டப்பட்டு தண்டிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் நிறையவே இருந்தாலும் ராவய பத்திரிகை தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுத்தமை இங்கு பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். இந்தப் போராட்டத்தை மையப்படுத்தி **''நொனிமி அரகலய''** முடிவுறாத போராட்டம் என்ற பெயரில் ஒரு புத்தகத்தையும் விக் டர் ஐவன் வெளியிட்டார்.

மேலே நாம் கூறிய சம்பவத்தின் பின்னணியில்தான் **''மௌனம் காக்கும் நீதிமன்றம்'** என்ற இத் திரைப்படம் பிரசன்ன விதான கேயினால் தயாரித்து வெளியிடப் பட்டது.

இப்படம் வெளிவருவதால் தனது கௌரவத்திற்கு அவமானம் எனக்கூறி குறித்த நீதவான் இத் திரைப்படத்திற்கு எதிராக தடை உத்தரவு ஒன்றை நீதிமன்றில் வேண்டினார். நீதிமன்றமும் தற்காலிக தடை உத்தரவு ஒன்றை வழங்கியது. இதன் காரணமாக குறித்த இத் திரைப்படம் தொடர்பான விவாதம் சமூக வலைத்தளம் உட்பட அனைத்து மட்டங்களிலும் சூடு பிடிக்க ஆரம்பித்தது.

இத் திரைப்படத்தின் தடையுத் தரவுக்கு எதிராக சுயாதீன நீதித்துறை ஒன்றை விரும்பும் பலரும் ஒன்று திரண்டு போரட்டத்தை மேற்கொண்டனர். பின்னர் திரைப்படத்திற்கான தடை உத்தரவு நீக்கப்பட்டு தற்போது குறித்த இத் திரைப்படம் திரையரங்குகளில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நாட்டில் சுயாதீன நீதித்துறையொன்றை விரும்பும் அனைவரும் பார்க்கப்பட வேண்டிய திரைப் படம்தான்

**''உஸாவிய நிஹண்டய்'' என்ற இத் திரைப்படம்.**

தனக்கு பிரச்சினை ஏற்படும் என எதிர்பார்த்த குறித்த நீதிபதி குறித்த பிரச்சினையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கு பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டார். இதற்காக அவர் அப்போது சட்டமா அதிபராக கடமையாற்றிய சரத் என். சில்வாவை அணுகி தான் எதிர்கொண்டிருக்கும் இப்பிரச்சினையிலிருந்து வெளியேறுவதற்கான ஆலோசனையை நாடினார்.

சரத் என். சில்வா அவர்கள் ராவய பத்திரிகை ஆசிரியருக்கு எதிராக தனக்கு அவமானம் ஏற்படுத்தும் முறையில் நடந்து கொண்டார் என்ற முறைப்பாட்டினை பொலிஸ் குற்றப்பிரிவில் மேற்கொள்ளுமாறு குறித்த நீதவானுக்கு ஆலோசனை வழங்கினார்.

தொடர்ந்தும் இப்பிரச்சினையை ராவய பத்திரிகை ஒரு போராட்டமாக முன்னெடுத்தது. இவ்விடயம் தொடர் பாக ஒரு குற்றஞ்சாட்டப்பட்ட நீதவானை பாதுகாத்து வந்தமையால் ராவய பத்திரிகை சட்டமா அதிபரின் பின்னணியை ஆராயத் தொடங்கியது. அப்போது அவர்களுக்குக் கிடைத்த முக்கியமான ஆதாரம்தான் சட்டமா அதிபர் கூட இவ்வாறு முறைகேடாக நடந்து கொண்டார் என்பது.

சரத் என்.சில்வா அவர்கள் தனது நெருங்கிய நண்பரான இராசாயன பொறியியலாளர் ஒருவரின் மனைவியுடன் சட்டாநீதியற்ற வகையில் குடும்ப வாழ்க்கை நடாத்தியமைக்காக குறித்த இரசாயன பொறியியலாளர் இவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்த ஒரு விடயம் ஏற்கனவே நடைபெற்றுள்ளது. இந்த விடயத்தையும் ராவய பத்திரிகை தனது பிரதான தலைப்புச் செய்தியாக வெளியிட்டது. இதன் பின்னர் இவ் விடயம் பூதாகரமான பிரச்சினையாக




---

# அரும்பு சஞ்சிகை மீண்டும் துளிர்க்கிறது

## தொடர்ச்சியான வருகைக்கு கைகொடுப்போம்

இன்ஸாப் ஸலாஹுதீன்.

சுமார் எட்டு வருட இடைவெளியின் பின்னர் மீண்டும் வெளிவந்திருக்கிறது ஹாபிஸ் இஸ்ஸதீனின் ''அரும்பு'' சஞ்சிகை.
இச் செய்தியறிந்ததும் தொலைபேசியில் அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தேன்.காரணம் அரும்பு சஞ்சிகை நின்றுவிட்ட கவலை மனதில் இருந்து கொண்டே இருந்தது.என்னைப் போலவே பலரும், அவரிடம் மீண்டும் அரும்பை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டே இருந்தனர்.இன்று அது நிஜமாகியிருப்பது மட்டில்லா மகிழ்ச்சியைத் தருகிறது.

இலங்கையில் தமிழ் பேசும் வாசகர்களை குறிப்பாக மாணவர்களை மையப்படுத்தி வெளிவரும் சஞ்சிகைகளின் தரம் குறித்து பல கேள்விகள் இருக்கின்றன.அவை பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆக்கபூர்வமான விடயதானங்களைச் சுமந்து வருவதில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

ஆனால் அரும்பு சஞ்சிகை மாணவர்களால் மட்டுமல்லாது ஏனையோராலும் விரும்பிப் படிக்கப்படும் ஒரு சஞ்சிகையாக இருக்கின்றது. அதற்குக் காரணம் அது தாங்கி வரும் கட்டுரைகளும் தகவல்களும் துணுக்குகளும் நகைச்சுவையுமாகும். அரும்பு சஞ்சிகையை அதில்வரும் நகைச் சுவையைப் படிப்பதற்காகவே பலர் வாங்குவதுண்டு.

நாம் பெரும்பாலும் காணும் சஞ்சிகைகளில் வரும் நகைச்சுவைத் துணுக்குகள் இணையத்திலிருந்து சுட்டவையாகத்தான் இருக்கும்.ஆனால் அரும்பின் நகைச்சுவைகளை ஹாபிஸ் அவர்கள் தான் வேறு மொழியில் படித்தவற்றை தமிழுக்கு மாற்றி தனது பிள்ளைகளிடம் படிக்கக் கொடுத்து தேவையான இடங்களில் அவர்கள் சிரிக்கிறார்களா என்று பரீட்சித்து அதனை பிரசுரம் செய்வதாக ஒருமுறை சொன்னார்.

இந்த உழைப்பும் முயற்சியும் அரும்பிலுள்ள எல்லாக் கட்டுரைகளுக்குப் பின்னாலும் இருக்கிறது.அதுதான் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் அரும்பு மீண்டும் துளிர்க்காதா? என்ற ஏக்கத்திற்குக் காரணம்.அத்தோடு இச் சஞ்சிகை குறிப்பிட்ட ஒரு சாராரை மாத்திரம் கவனத்தில் கொண்டு வெளியிடப்படுவதில்லை. தமிழ் பேசும் அனைவருக்குமான ஒரு சஞ்சிகையாக இருப்பதும் இதன் வெற்றிக்குரிய ஒரு காரணமாகும்.

ஒரு தனியாளாக இருந்து கட்டுரைகளை எழுதி தட்டச்சு செய்து வடிவமைத்து அச்சிட்டு வாசகர்களுக்கு கொண்டு சேர்க்கும் பணி வரை அவர் தனியாளாகவே மேற்கொள்கிறார்.என்னைப் பொறுத்தவரையில் அரும்பின் பலமும் இதுதான் பலவீனமும் இதுதான்.ஆனால் வெளியீட்டு நிறுவனங்களே தமது வெளியீடுகளை முறையாகச் செய்வதில் சிரமங்களை எதிர்நோக்கும் போது பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் 42 இதழ்களை வெளியிட்டமையும் ஒரு சாதனை எனத்தான் சொல்ல வேண்டும்.

அரும்பு நின்றிருந்த காலத்தில் பலரும் இதனை வெளியிட முன்வந்திருக்கிறார்கள்.ஆனால் ஹாபிஸ் அவர்கள் அதனை பெரிதாக விரும்பவில்லை. காரணம் அதன் தரத்தை இழக்க அவர் ஒரு போதும் விரும்பவில்லை என்றே நினைக்கிறேன்.

மாணவர்களுக்கான சஞ்சிகை வெளியிடுபவர்களுக்கு அரும்பு ஒரு முன்மாதிரியான சஞ்சிகை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.ஒரு பொது அறிவுச் சஞ்சிகை என்ற வகையில் அது மாணவர்களாலும் படிக்கப்படுகிறது.மாணவர் அல்லாதவர்களாலும் படிக்கப்படுகிறது.இலங்கையின் போர்ச் சூழலில் கூட அரும்புக்குரிய கிராக்கி இருக்கவே செய்தது.யுத்தப் பிரதேசங்களில் இச் சஞ்சிகையை விற்பதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.நான் அறிந்த வகையில் சுமார் 5000 பிரதிகள் வரை விற்பனையாகிக் கொண்டிருந்தன.

வாசிப்புக் கலாச்சாரம் குறைந்து வரும் இன்றைய சூழலில் அரும்பு போன்ற ஒரு சஞ்சிகையை ஊக்குவிப்பதும் பிறருக்கு அறிமுகம் செய்வதும் அறிவுச் சமூகத்தின் கடமையாகும்.மாணவர்களுக்கான வெளியீடுகள் எமது சமூகத்தில் மிக மிகக் குறைவாகவே இருக்கின்றது.மாணவர்களுக்கானது என்ற பெயரில் வெளிவரும் அத்தனையும் தரம் வாய்ந்தவை என்று சொல்லிவிடவும் முடியாது.இது போன்ற ஒரு சூழலில் எட்டு ஆண்டுகள் கழித்து மீண்டும் வெளிவரும் இச் சஞ்சிகையை சமூக




நிறுவனங்களும் பாடசாலை சமூகமும் நிச்சயம் தாங்கிப் பிடிக்க வேண்டும். அதனது தொடர்ச்சியான வரவிற்குப் பங்களிக்க வேண்டும்.

''இப்பணியை எவ்வளவு காலத்திற்கு தொடர எமக்கு வாய்ப்புக் கிடைக்குமோ தெரியாது'' என இவ்விதழில் ஆசிரியர் எழுதியிருக்கிறார். இது தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என்பதே வாசகர்களின் விருப்பமும் எதிர்பார்ப்புமாக இருக்கிறது. இப் பயணம் தொடர வேண்டும்.இதன் பிரதிகளை வாங்கியும் புதிய வாசகர்களைத் திரட்டியும் அரும்பின் தொடர்ச்சியான வருகைக்கு நாம் அனைவரும் கைகொடுப்போம். பங்களிப்போம்.

**அரும்பு இதழின் பிரதிகளைப் பெற்றுக் கொள்ள:**

**Editor,Arumbu**
**No.70 Main Street, Dharga Town**
**-12090**
**0342270151**

---



# தலையணை மந்திரம்

ஆரவாரங்களற்ற மௌனமொழிகளின்
இசைவில்
காதுகளைச் செவிடாக்கிக் கொண்டு
புதைக்கும் முகங்களுக்கு
புலனங்கங்களைப் புரட்டிவிட்டு
உதைக்கும் காற்றில் உவப்பினை
ஊட்டுகின்றது.

பஞ்சனையில் எழுச்சிபெறும்
எண்ணங்களுக்கு இன்பக் கதையளந்து
கனவுகளுக்குள்ளும் நிஜங்களுக்குள்ளும்
நிம்மதியாய் உலாவர நிழல் தருகின்றது.

இரவு வானின் கவிழ்ந்த இரவுகளுக்குள்
இதம் பாடும் தென்றலில்
ஓய்வு தேடும் மெய்கள்
ஆரோக்கிய பானமருந்த
மெல்லிதழாய் புன்னகை விரிக்கின்றது.

கரைந்து செல்லும் கண்ணீருக்கும்
நிறைந்துசெல்லும் நினைவலைகளுக்கும்
நிதர்சனப் பாதையினைத் தெரிந்து
கொள்வதற்கு
நிதானம் விதைக்கின்றது.

அன்பின் அரவணைப்பில்
ஊறும் உணர்வுகளின் ஊற்றுக்கண்களுக்கு
உலகத்தைக் காண்பித்து
உன்னதத்தினை உண்மையாய்
ஏற்றுக்கொள்கின்றது.

குளிர்மைக்குள் தென்றலைத் தூதனுப்பி
துவக்கங்களுக்கும் இயக்கங்களுக்கும்
துலாம்பரமான செய்தி சொல்கின்றது
வாலிப முறுக்குகளுக்கு வளைந்து கொடுத்து
வயோதிப அனுபவங்களுக்கு
இசைந்துவிடுகின்றது
அச்சங்களின் அட்டகாசத்தை உள்வாங்கி
வலிகளை வருடி நட்புடன் கனிவாகின்றது
தலையணை மந்திரங்களாய்

நாகூர் நஹீம் (ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துருக்கியில் மேலும் 10,000 அரச ஊழியர்கள் பதவி நீக்கம்



கடந்த ஜூலைப் புரட்சியுடன் தொடர் பானவர்கள் எனவும் அமெரிக் காவில் தங்கியுள்ள குலானின் ஆதர வாளர்கள் எனவும் சந்தேகிக்கப்பட்ட மேலும் 10,000 அரச ஊழியர்களை துருக்கி அரசாங்கம் பதவி நீக்கம் செய்துள்ளதோடு, 15 இற்கும் மேற் பட்ட ஊடக நிறுவனங்களைத் தடை செய்துள்ளது. ஏற்கனவே ஒரு இலட்சம் பேர் பதவி நீக்கப்பட்டதோடு, 37,000 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பத்ஹுல்லா குலானின் ஆதரவாளர் கள் அனைவரும் அரசாங்கத்திலிருந்து சுத்தப்படுத்தப்படும் வரை பதவி நீக் கம் தொடரும் என அரசாங்கம் அறி வித்துள்ளது. பதவி நீக்கப்பட்டவர் களுள் சுகாதார ஊழியர்கள், பல் கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆசிரி யர்கள், சிறைச்சாலைக் காவலர்கள், மருத்துவ நிபுணர்கள் உள்ளடங்கு கின்றனர். இவர்களின் பெயர்கள் அரச வர்த்தமானியில் அறிவிக்கப் பட்டுள்ளது. எதிர்க்கட்சியினர் அர்தூ கானின் இந்த நடவடிக்கையை ஒரு இராணுவப் புரட்சி என்று வர்ணித் துள்ளனர்.

## சவூதி அரேபியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் கைது



குறைந்தது 8 ஐ.எஸ். சந்தேக நபர்களைக் கைதுசெய்துள்ளதாக சவூதி அரேபியாவின் உள்நாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது. கார்க் குண்டுவெடிப்பு மற்றும் கொலை களைத் திட்டமிட்டார்கள் என இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஷக்ரா மாவட்டத்தில் இது தலைநகர் ரியாதுக்கு வடக்காக உள்ளது. இவர்களின் செயல்பாடுகள் புலனாய்வு செய்யப்பட்ட பின்னரே கைதுசெய் யப்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இவர்களில் இருவர் பாகிஸ் தானியர்கள். சிரியா, சூடான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஒவ்வொருவரும் பஹ்ரைனைச் சேர்ந்த ஒருவரும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# சர்வதேசப் பார்வை



## இஸ்ரேலுக்கான அமெரிக்க உதவி பலஸ்தீனர்களைக் கொல்வதற்கே

### ஓய்வுபெற்ற அமெரிக்க இராணுவத் தளபதி

இஸ்ரேலுக்கு அமெரிக்கா வழங் கும் எதிர்வரும் பத்தாண்டுகளுக்கான 38 பில்லியன் அமெரிக்க உதவித் தொகை பலஸ்தீனர்களைக் கொன்று குவிப்பதற்கேஎன்றுஅமெரிக்காவின் முன்னாள் ஒய்வு பெற்ற கேர்ணல் ஏன் ரைட் எனும் பெண்மணி தெரி வித்துள்ளார்.

காஸாவுக்கான ஸைதுனா நிவார ணப் படகில் பயணத்தை ஆரம்பிப்ப தற்கு முன்பாக ஏன் ரைட் இக்கருத்தை வெளியிட்டார். தற்போது மனித உரிமை செயற்பாட்டாளராகப் பணி யாற்றும் அவர், இஸ்ரேலிய இராணு வம் ஏற்கனவே நன்கு நிதியாதரவு அளிக்கப்படுகின்றது. அதனது பொரு ளாதாரமும் செழிப்பாக உள்ளது. இந்நிலையில் ஐக்கிய அமெரிக்கா நிதி யாதரவு வழங்குவது பலஸ்தீனர்களைக் கொல்வதற்கே என்பதில் சந்தேக மில்லை என அவர் தெரிவித்தார்.

காஸாவுக்கான மருந்துப் பொருட் கள், உணவு மற்றும் ஏனைய நிவாரண உதவிகளோடு பயணித்த படகு ஒக் டோபர் 05 இல் இஸ்ரேலிய கடற் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு, பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. படகில் சென்ற அனைவரும் பெண்கள் என்ப தைக் கூட இஸ்ரேலிய இராணுவம் கருத்திற் கொள்ளவில்லை என்பதை 'ஏன்' கடுமையாகக் கண்டித்துள்ளார்.

09 ஆண்டுகளாக காஸா மீது விதிக் கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை யை முறிப்பதற்கே நிவாரணப் படகு பயணித்ததாகவும் இஸ்ரேலிய இராணுவம் இப்படகை இடை மறித்தமை இஸ்ரேலிய அரசாங் கத்தின் கிரிமினல் மனோநிலையை வெளிப்படுத்துவதாகவும் ஏன் குற் றம் சாட்டியுள்ளார்.

## ஈராக்கில் துருக்கியர்கள் இலக்கு வைக்கப்படக் கூடாது

### - அர்தூகான்



தல் அபார் நகரில் துருக்கியர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் ஷீஆ இராணுவம் மேற்கொள்ளும் எந்தத் தாக்குதலுக்கும் துருக்கி அரசாங்கம் பதிலளிக்கும் என துருக்கிய ஜனாதிபதி அர்தூகான் எச்சரித்துள் ளார். ஏற்கனவே துருக்கிய இராணுவம் ஈராக்கில் நிலை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈராக்கில் மௌசூல் நகரை மீளக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கையில் இறங்கியுள்ள ஈராக்கிய அரச படையினர் அங்கு நிலைகொண்டுள்ள ஐசிஸ் பயங்கரவாதிகளை மட்டு மன்றி, சுன்னி முஸ்லிம்களையும் இலக்கு வைத்து வருவதாகக் குற்றம் சாட்டப் படுகின்றது.

இதேவேளை, ஈராக்கில் வாழும் துருக்கியர்களையும் ஈராக்கிய அரச படையினர் திட்டமிட்டு இலக்கு வைத்து வருவதாக துருக்கிய அரசாங்கம் தெரிவித்தது. ஈராக் விவகாரத்தில் துருக்கியின் தலையீட்டைத் தவிர்க்க வேண்டும் என ஈராக்கிய அர சாங்கம் இந்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## அலெப்போ நகரில் அரசாங்கம் நச்சுவாயுவை வீசியதாக சிரிய அரச ஊடகம் தெரிவிப்பு



சிரியாவின் முற்றுகையிடப்பட்ட நகரமான அலெப்போ மீது சிரிய அரச படையினர் நச்சு வாயுவை வீசியதை அந் நாட்டின் அரச ஊடகமொன்று வெளிப்படுத்தியுள்ளது. இவ் வூடக அறிக்கையை உடனடியாக அரசாங்கம் மறுத் துள்ள தோடு, குறித்த ஊடகவியலாளரைக் கைதுசெய்துள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, அரச படையினர் வீசிய நச்சுவாயுவின் மூலம் 35 பேர் கொல்லப்பட்டனர். அரச படைகள் ஏவிய ஏவுகணைகளில் நச்சுவாயுக்கள் உள்ளடக்கியிருந்ததாகவும் ஹம்தானியா மாவட்டத்திலுள்ள மக்கள் வசிக்கும் இடங்களில் இவ்வாறா ஏவுகணைகள் வீசப்பட்டுள்ளன. லண்டனைத் தளமாகக் கொண்ட சிரியாவுக்கான மனித உரிமை கண்காணிப்பகம் இச்செய்தியை உறுதிப்படுத்தியுள்ளது.

## லெபனானில் புதிய ஜனாதிபதி



இரு ஆண்டுகள் இழுபறிக் குப் பின்னர் புதிய ஜனாதி பதியாக மைக்கல் ஒன் தெரிவு செய்யப்படவுள்ளார் என லெப னான் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

81 வயதான ஒய்வு பெற்ற இராணுவத் தளபதி மைக்கல் ஒன் ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றுவதற்கு நீண்ட நாட்களாய் முயற்சித்து வந்தார். எனினும், கடந்த வாரமே அது கைகூடியுள்ளது.

லெபனானின் அரசியல் ஸ்திரப்பாட்டைப் பாது காப்பதற்கும் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்து வதற்கும் மைக்கல் ஒனினால் முடியுமா என்று கேள்வி எழுப்பப்படுகின்றது.

1921 இல் அறிமுகப்படுத்தப்பட்ட லெபனான் அரசி யல் மைப்புச் சட்டத்தின்படி அந்நாட்டில் சிறுபான் மையாக வாழும் மெரோனைட் கிறிஸ்தவர்களே ஜனா திபதியாக முடியும். சுன்னி முஸ்லிம்களைச் சேர்ந்த ஒருவர் பிரதமராகவும், ஷீஆ சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் சபாநாயகராகவும் தெரிவுசெய்யப்படலாம்.

## யெமனில் சவூதி தலைமையிலான கூட்டுப் படையின் தாக்குதலில் 60 பேர் உயிரிழப்பு



ஹூத்திகளை இலக்கு வைத்து மேற்கு யெமனில் ஹுதைதா நகரின் மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதலில் 60 பேர் உயி ரிழந்துள்ளனர். ஹூத்திகள் இங்கு சிறைச் சாலை ஒன்றை நடாத்தி வருவதாகத் தெரி விக்கப்படுகின்றது. நூற்றுக்கணக்கானோர் இத்தாக்குதலில் காயமடைந்துள்ளதாகவும் மருத்துவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கொல்லப்பட்டவர்களில் அநேகமானோர் சிறைக்கைதிகள் என ஸைதிய்யா மாவட்ட பாதுகாப்பு உயர் அதிகாரியான அப்துர் ரஹ்மான் மன்ஸப் தெரிவித்தார். தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது 115 கைதிகள் அங்கு இருந்ததாகவும், அவர்களில் 60 பெர் கொல்லப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். இப்பிராந்தியத்தில் இரண்டு சிறைச்சாலைகள் உள்ளன என்றும் அவை ஹூத்தி கிளிர்ச் சியாளர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

## சோமாலிய நகரங்களை அஷ்ஷபாப் இயக்கம் கைப்பற்றியுள்ளது



சோமாலிய தலைநகர் முகாதிஷுவுக்கு வடமேற் காக உள்ள நகரொன்றை கடந்த ஞாயிறன்று அஷ் ஷபாப் பயங்கரவாத இயக்கம் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேற்கு நாடுகளுக்கு ஆதா வான சோமாலிய அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக் கில் ஷபாப் ஆயுத வன்முறையில் ஈடுபட்டுள்ளது.

பல ஆண்டுகளாகப் போராடி வரும் இவ்வியக்கம் இஸ்லாம் குறித்து மாறுபாடான விளக்கங்களை அளித்து வருகின்றது.

ஆபிரிக்க ஒன்றியப் படையும், சோமாலிய அரச படை யும் இணைந்து ஷபாபுக்கு எதிராகப் போராடி வருகின்றன. எனினும், ஷபாப் கிளர்ச்சியாளர்கள் படிப்படியாக முன் னேறி வருவதாகக் கவலை வெளியிடப்படுகின்றது.

முகாதிஷுவுக்கு வடக்கே 250 கி.மீ. தொலைவிலுள்ள கூப் கதூத் நகரமே இவ்வாறு ஷபாபினால் கைப்பற்றப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீன் நிலமும் சமூகமும்



அறபு மூலம் : கலாநிதி முஹ்ஸின் முஹம்மது ஸாலிஹ்

தமிழில்: யூ.கே.றமீஸ் (விரிவுரையாளர், பாதிஹ்.)

கலாநிதி முஹ்ஸின் முஹம்மது ஸாலிஹ், பலஸ்தீன் வரலாறு மற்றும் அரசியல் துறையில் நிபுணத்துவம் பெற்றவர். பலஸ்தீனின் பண்டைய வரலாறு முதல் சமகால அரசியல் போக்கு வரை நீண்டு செல்லும் அவரது ஆய்வுகள் நான்கு பாகங்களைக் கொண்ட நூல்களாக வெளிவந்துள்ளன. 2002 இல் மலேசியாவின் கோலாலம்பூரில் மீள்பதிப்பைக் கண்ட அவரது நூலின் முதற் பாகம் இங்கு தமிழில் பெயர்க்கப்படுகின்றது.

**முஸ்லிம்கள் புனிதமாக கருதுபவைகளையும் வக்ப் செய்யப்பட்ட நிலங்களையும் சியோனிச யூதர்கள் எவ்வாறு கையாள்கின்றார்கள்**

சியோனிச யூதர்களின் அத்துமீறல்களிலிருந்து முஸ்லிம்கள் புனிதமாக கருதுபவைகளோ வக்பு சொத்துக்களோ தப்பிவிடவில்லை. அவற்றை கொள்ளையிட்டுள்ளார்கள். அவற்றின் அடையாளங்களை சிதைத்து உருத்தெரியாமல் மாற்றியிருக்கின்றார்கள்.

பலஸ்தீன் என்பது புனிதங்கள், புனிதத்தளங்கள், வக்பு செய்யப்பட்ட நிலங்களால் நிறைந்த ஒரு பூமியாகும். முஸ்லிம்களுக்கு பணி செய்தல், அவர்களது தேவைகளை பூர்த்தி செய்தல், ஏழைகள், மிஸ்கீன்கள், அறிவு தேடும் மாணவர்கள், வழிப்போக்கர்கள், மஸ்ஜித்கள் போன்றவற்றுக்காக அவை வக்பு செய்யப்பட்டுள்ளன. 1680000km² நிலம் வக்பு செய்யப்பட்ட நிலங்களாகும். அதாவது முழு பலஸ்தீனின் 6.25% நிலம் வக்ப் நிலங்களாகும். விவசாயத்துக்கு பொருத்தமான நிலங்களில் 10% இதில் உள்ளடங்குகிறது. சுமார் 340 பலஸ்தீன கிராமங்கள் மொத்தமாகவோ பகுதியாகவோ வக்பு செய்யப்பட்டவைகளாகும். பூரீன், பைத் பூரீக், ஷதா, ஸஃஸஃ போன்ற கிராமங்கள் இதற்கு உதாரணமாகும்.

1948ம் ஆண்டு யூதர்கள் பலஸ்தீனை ஆக்கிரமித்தபோது அதிகமான வக்பு சொத்துகளை கபளீகரம் செய்து கொண்டார்கள். உரிமையாளர்கள் இல்லாத சொத்து என்று அதற்கு காரணம் கூறிக் கொண்டார்கள். யூதர்களுக்கு அதனை வழங்கினார்கள். குடியிருப்புகளை அமைத்தார்கள். விவசாய, வியாபார, கைத்தொழில் குடியிருப்புகளை அமைத்தார்கள். விவசாய, வியாபார, கைத்தொழில் திட்டங்களை (Projects) அங்கு மேற்கொண்டார்கள்.

முஸ்லிம்களது மஸ்ஜித்கள், அடக்கஸ்தலங்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக்கூட விட்டுக் கொடுக்கவில்லை.கலீல் பிரதேசத்தில் இருக்கின்ற அல் மஸ்ஜிதுல் இப்றாஹீமியின் பெரும்பான்மையான பகுதிகளை ஆக்கிரமித்து சூறையாடியுள்ளார்கள்.அதனை ஒரு யூத வணக்கஸ்தலமாகவும் மக்கள் தரிசிக்கும் (tourist place) இடமாகவும் மாற்றியுள்ளார்கள்.

மஸ்ஜிதுல் அக்ஸாவின் மேற்குப்புற சுவர் பகுதியை ஆக்கிரமித்து தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்கள். ஹாஇதுல் புராக் என்று அழைக்கப்பட்ட இப்பகுதியை ஹாஇதுல் மப்கி என்று பெயர் மாற்றியுள்ளார்கள். இதனோடு இணைந்துள்ள மேற்குப்புற பகுதியை (ஹாரதுல் மகாரிபா) முற்றுகையிட்டுள்ளார்கள். இது வக்ப் செய்யப்பட்ட பூமியாகும். அங்கிருந்த அழகிய வேலைப்பாடுகள் கொண்ட கட்டிடங்களை தரைமட்டமாக்கி ஹாஇதுல் மப்கியுக்கு வரும் யூதர்களுக்கு வசதிசெய்து கொடுத்துள்ளார்கள்.

ழாஹிர் பைபரஸ் பள்ளிவாசல் 700 வருடங்கள் பழைமை வாய்ந்ததாகும். அது மஜ்தல் பிரதேசத்தில் அமைந்துள்ளது. அப்பள்ளிவாசலை உணவகமாக மாற்றியுள்ளார்கள். யாபாவில் அமைந்துள்ள பிரபல்யமான பள்ளிவாசலான மஸ்ஜிது ஸிக்ஸிக் பல்கேரியாவிலிருந்து குடியேற்றப்பட்ட யூதர்களின் களியாட்ட விடுதி (Club) ஆக மாற்றப்பட்டுள்ளது. கைஸாரியாவிலுள்ள மஸ்ஜித் கைஸாரிய்யா ஒரு மதுபான சாலையாக (Bar) மாற்றம் பெற்றுள்ளது. ஹீபாவிலுள்ள சிறிய பள்ளிவாசல் ஹசீஸ் போன்ற போதைப்பொருட்கள் பயன்படுத்தப்படும் இடமாகவும் விபச்சார விடுதியாகவும் மாற்றப்பட்டுள்ளது. மஸ்ஜிது ஸப்த் பழைய பொருட்களை காட்சிப்படுத்தும் நூதனசாலையாகவும் உல்லாச பிரயாண காரியாலயமாகவும் பயன்படுத்தப்படுகிறது. அஸ்கலானில் உள்ள மஸ்ஜிதுல் இமாம் ஹுஸைன், அதனோடு இணைந்து காணப்பட்ட மகாமும் தரைமட்டமாக்கப்பட்டது. அவ்விடத்தில் யூதர்களுக்கான ஒரு வைத்தியசாலை கட்டப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான மஸ்ஜித்களின் நிலை மிக மோசமான நிலையில் காணப்படுகிறது. மஸ்ஜித் அகா, தபரியா, ஸப்த், ஹுகீன், அக்ரத், அபூ கபீர், ஸல்மா, கப்யா, அம்வாஸ், லூபியா, ஸர்பன்த் போன்றவை இவற்றுக்கு சில உதாரணங்களாகும்.

முஸ்லிம்களின் அடக்கஸ்தளங்களைகூட விட்டு வைக்கவில்லை. குத்ஸ் நகரில் மஃமனுல்லா என்ற அடக்கஸ்தளத்தில் மாமீலா Plaza Hotel என்ற பெயரில் ஒரு ஹோட்டல் கட்டப்பட்டுள்ளது. அடக்கஸ்தளத்தில் பாதைகள் போடப்பட்டுள்ளன. முஸ்லிம்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள எஞ்சிய பகுதிகளில் பூங்காவனம் அமைக்கப்பட்டுள்ளது.

யாபா பிரதேசத்தில் உள்ள யாஸுர் என்ற மக்பரா பாதையை விசாலப்படுத்தல் என்ற பெயரில் பறிக்கப்பட்டுள்ளது. அதன் இன்னொருபகுதி குப்பைகள் கொட்டப்படும் பகுதியாக மாற்றப்பட்டுள்ளது. யாபாவுக்கு அண்மையில் உள்ள ஷெய்க் முஃனஸ் அடக்கஸ்தளம் கைத்தொழில் பேட்டையாக மாற்றப்பட்டுள்ளது. அதன் இன்னொரு பகுதியில் டெல் அவீவ் பல்கலைகழகத்தின் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

ஹீபாவில் இருக்கின்ற இஸ்திக்லால் அடக்கஸ்தளத்தின் ஒரு பகுதி நீக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 3000 கப்றுகளை அகழ்ந்தெடுத்துள்ளார்கள். அவ்விடத்தில் ஒரு உல்லாச ஹோட்டல் கட்டப்பட்டுள்ளது.

கலீல் பிரதேசத்துக்கு பக்கத்தில் பனூ நுஐம் கிராமத்தில் பாதிமா பின்த் ஹுஸைன் இப்னு அலி இப்னு அபீ தாலிப் இன் கப்று அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் இவை நடைபெறுகின்றன. இதே போன்று பலஸ்தீன் அடையாளமாக கருதப்படும் இஸ்ஸதீன் அல் கஸ்ஸாமின் கப்றை தோண்டியெடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவை சில உதாரணங்கள்தான். இதுபோன்று அதிக நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. **(ரஃயுல் ஆம் பத்திரிகை 22 டிசம்பர் 1985)**

---

# பலஸ்தீனத்துக்கான தலைமைத்துவம்

• எம்.எஸ்.எம்.ஸியாப்

தொடர்ந்துகொண்டிருக்கும் அரபு வசந்தம், இறுதியில் அரபு, இஸ்லாமிய உலகில் நம்பிக்கை மிகுந்த எதிர்காலத்தை நோக்கி நம்மைக் கொண்டு செல்லும் என்பது களத்திலே உழைக்கும் பலரும் அவாவுகின்ற, பூர்த்தி செய்யப்பட வேண்டிய எதிர்பார்ப்பாகும். உலக அரசியல் நகர்வுகளைத் தீர்மானிக்கும் காரணியாக மத்திய கிழக்கு நிலவரங்கள் இருந்து கொண்டிருக்க, எரிந்து கொண்டிருக்கும் மத்திய கிழக்கின் பிரச்சினைகளின் அச்சாணியாக பலஸ்தீனப் பிரச்சினை காணப்படுகின்றது. இங்கு மிக விரைவாக பலஸ்தீன் விடுவிக்கப்பட வேண்டும்; குத்ஸ் மீட்டெடுக்கப்பட வேண்டும் என இஸ்லாமிய உம்மத் விரும்புகிறது. அது முஹம்மத்(ஸல்) அவர்கள் இஸ்ரா மேற்கொண்ட மகோன்னத பூமி; ஈஸா(அலை) பிறந்த பூமி; முதல் கிப்லா, மூன்றாவது புனிதஸ்தலம். இன்று அரபுலகிலும் இஸ்லாமிய உலகிலும் தீர்க்கப்பட வேண்டிய மையப் பிரச்சினை அது; முதன்மைப் படுத்தப்பட வேண்டிய விவகாரம் அது. ஒவ்வொரு இஸ்லாமிய மற்றும் உலகளவிலான விவகாரங்களிலும் ''குத்ஸ் விவகாரம்' தாக்கம் செலுத்தி கொண்டிருக்கிறது. இதுவே இன்று உலக முஸ்லிம் சகோதரன் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் விதைக்கப்பட வேண்டிய விவகாரமாகும்.

சமகால பலஸ்தீனின் விடுதலைப் போராட்டத்தின் முக்கிய பிரதிநிதித்துவத்தை வழங்கிவரும் ஹமாஸ் அமைப்பின் ஆளுகைக்குள்ளால் இருக்கும் காஸா பிராந்தியம் தொடர்ந்தேர்ச்சியான பத்து வருடங்கள் மிகக் கடுமையான முற்றுகைக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றது. மறுபுறம் இன்னொரு முக்கிய பிரதிநிதியாகக் கொள்ளத்தக்க ஃபதாஹ் அமைப்பின் ஆளுகையில் இருக்கும் மேற்குக் கரைப் பிரதேசத்தினுள் இரட்டை எண் கணக்கான மடங்குகளில் இஸ்ரேலின் சட்டவிரோதக் குடியேற்றங்கள் அதிகரிக்கப்பட்டு ஆக்கிரமிப்பு தொடர்ந்தும் விஸ்தரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

1930களில் ஷெய்க் இஸ்ஸுத்தீன் அல் கஸ்ஸாம் போன்ற ஆன்மீகத் தலைமைகளின் முன்னிலையோடு, பலஸ்தீன் மீதான யூத ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்கள் ஆயுத வடிவெடுத்துத் துவங்கின.

இதன் பின் பலஸ்தீனம் முழுதாக ஆக்கிரமிக்கப்பட்டு இஸ்ரேல் என்ற சட்ட விரோத நாடு 1948 இல் உருவாக்கப்பட்ட பின் பலஸ்தீனமும் அரபு, இஸ்லாமிய உலகமும் முழுமையாக சுதாகரித்து எழுவதற்கு இடையில், இயக்க முறைப் படுத்தப்பட்ட ஒரு போராட்டக் குழுவாக யாஸிர் அரபாத் தலைமையில் முன்னோடியாகத் துவக்கப்பட்ட ஃபதாஹ் இயக்கம் குறிப்பிடப்படுகிறது. அன்று பலஸ்தீன விடுதலைக்கென வேறு எந்த தளமும் இல்லாத சூழ்நிலையில் இஸ்லாமிய சகோதரத்துவ சிந்தனைப் பின்புலம் கொண்ட பலரும் அதனோடு இணைந்து போராடினர். யாஸிர் அரபாத் உள்ளிட்ட அதன் ஸ்தாபக உறுப்பினர்களான ஃகலீல் வஸீர், ஸலாஹ் ஃகலப் போன்றோரும் சகோதரத்துவ அமைப்புடன் மாணவப் பருவத்திலிருந்தே தொடர்புகொண்ட அதன் சிந்தனையை உள்வாங்கியிருந்தவர்களாவர். 1950கள் மற்றும் 60களின் கடினமான நாட்களில் பலஸ்தீன எதிர்ப்புப் போராட்டமானது உத்வேகம்பெற்ற கட்டத்திலே ஃபதாஹ் உட்பட பல பலஸ்தீனிய இயக்கங்கள் எதிர்ப்புப் போராட்டத்தை முன்கொண்டு சென்றன.

பின்னாட்களில், அரபு-இஸ்ரேல் யுத்தம் என்ற ஆறு நாள் தோல்விப் படலத்திலே அரபு நாடுகள் எந்த 'அரபு தேசியவாதம்' என்ற செல்லாக் காசுக் கொள்கையை அடிப்படையாக வைத்துப் போராட்டத்தை முன்னெடுத்ததோ அந்தத் தோல்விச் சித்தாந்தத்துக்குள் 1967இன் பின்னர் ஃபதாஹ் அமைப்பும் அதன் தலைமையில் உருவான பலஸ்தீன விடுதலை அமைப்பும் (PLO)படிப்படியாக மூழ்கித் தம்மைக் கரைத்துக் கொண்டனர். இதற்குப் பரிசாக பலஸ்தீனத்தின் பிரதிநிதியாக யாஸிர் அரபாத் உலக அரங்கில்(!) அங்கீகரிக்கப்பட்டு PLO வின் தலைமைப் பீடத்திலும் அமர்த்தி வைக்கப்பட்டார். உச்சகட்டமாக 1974ம் ஆண்டின் நவம்பரில் ஐ.நா. பொதுச் சபையில் உரையாற்றும் வாய்ப்பும் அவருக்கு வழங்கப்பட்டது. பலஸ்தீன் என்ற இறையாண்மை மிக்க சுதந்திர தேசத்தின் பிரதிநிதியாகப் பங்கேற்க வேண்டிய இடத்தில் ஐ.நா. வில் முதன் முதலாக உரையாற்றிய அரசு சாராத ஒருவர் என்ற அவலமும் அங்கு நடந்தேறியது.

ஃபதாஹ் முன்னோடி அமைப்பொன்றாக இருந்த போதும் படிப்படியே அதன் செயல்பாடுகள் வீரியம் குன்றிக் கொண்டே வந்திருப்பதை பலஸ்தீன ஆக்கிரமிப்பு வரலாற்றை அவதானிக்கும் எவரும் கண்டுகொள்ள முடியும். 1967இன் பின் முற்றாக அரபு தேசியவாத[illegible] 1988 பலஸ்தீன தேச பிரகடனம், 1993 ஒஸ்லோ உடன்படிக்கைகள் என ஒவ்வொரு முக்கிய நகர்விலும் பலஸ்தீனத்தை நீர்த்துப் போகச் செய்கின்ற வங்குரோத்து அரசியலை ஃபதாஹ் மேற்கொண்டு வந்ததை நாம் காண முடியும்.

இன்றைய தேதியில், ஸ்தாபகத் தலைமைகள் மறைந்து அப்பாஸ், தஹ்லான் போன்றோரின் பிடியில் இருக்கும் ஃபதாஹ் அமைப்பின் கோஷங்களாக தோல்வியடைந்து போன தேசியவாதம், மதச்சார்பின்மை, இரு நாட்டுத் தீர்வுக் கொள்கை என்பன காணப்படுகின்றன. அதே வேளை தமது



ஆள் வளங்களை வைத்தே பலஸ்தீன மீட்புப் போரில் செயற்படும் ஏனைய குழுக்களை நசுக்கும் முதிர்ச்சியற்ற கைங்கர்யங்களையும் ஃபதாஹ் அமைப்பின் பிற்கால வரலாற்றில் கண்டுகொள்ள முடியும்.

அரபு தேசியவாதத்தின் பக்கம் ஒதுங்கி நீர்த்துப் போகத் துவங்கியிருந்த பலஸ்தீன விடுதலைப் போரில், புதிய இரத்தமாக உள்நுழைந்த ஹமாஸ் இயக்கம், அதன் சிந்தனை வீரியம் குறித்து அறிவது அப்போராட்டத்தை மீட்டெடுக்க மாற்றாகத் தோன்றிய புதிய தலைமை மற்றும் அதன் அணுகுமுறைகளை நாம் தெரிந்துகொள்வது அவசியமானது. மக்கள் மயப்பட்டதாக வெடித்த முதலாவது இன்திபாழா, 2000ம் ஆண்டில் இரண்டாம் இன்திபாழா என்பன கேம்டேவிட் உடன்படிக்கை, ஒஸ்லோ உடன்படிக்கையோடு பலஸ்தீன எதிர்ப்புப் போராட்டம் முடிந்துவிடும் என எதிர்பார்த்தோருக்கு ஏமாற்றமளித்தது. இப்பின்னணியில் 1980களின் இரண்டாம் பாதியில் ஹமாஸின் போராட்டம் வெறும் கற்கள், கவண்களுடன் துவங்கியது. அது இன்று நவீன ஆயுதக் கண்டுபிடிப்புக்கள், நவீனமான சுரங்க அமைப்புக்கள் என பிரமாண்ட பரிணாமத்தை எட்டியுள்ளது.

இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பின் பலஸ்தீனுக்கான பிரிவாகக் கருதப்படும் ஹமாஸ் அமைப்பு அரசியல் இஸ்லாத்தின் இக்காலத்தின் முக்கிய அடையாளமாகும். அதன் அரசியல் துறைத் தலைவர் காலித் மிஷ்அலின் நுணுக்கமான நகர்வுகள் அரசியல் இஸ்லாமின் முக்கிய பாடங்களாகப் பிற்காலத்தில் கொள்ளப்படுவது நிச்சயம். இன்றைய ஹமாஸ் அரசியல் போராட்ட இயக்கமாக மாத்திரமன்றி பாரிய மக்கள் திரளை ஆதரவாகப் பெற்றுள்ளதோடு பலஸ்தீனப் பிரச்சினையை இஸ்லாமிய உலகின் மையப் பிரச்சினையாக முன்வைத்து பலஸ்தீனருக்கான போராட்டமாக மட்டும் இதனைப் பார்க்காது முழு உம்மத்தினதும் போராட்டமாக இதனை முன் கொண்டு செல்வதில் பெரும் வெற்றி பெற்று வருகிறது. 1948 க்கு முந்தைய ஒற்றை தேசமான பலஸ்தீனத் தீர்வினையே அது தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறது.

ஃபதாஹ் போன்ற அமைப்புக்கள் தேசியவாதம், மதச்சார்பின்மையை வைத்து நிலத்துக்கான போராட்டமாக முன்னெடுத்து பெறாத வெற்றி ஹமாஸ் முன்னெடுக்கும் போராட்டத்துக்குக் கிடைத்து வருகிறது. அரசியல், ஆயுதம், சிந்தனை, மக்கள் திரள் என பல முனைகளிலும் பலஸ்தீன நிலத்துக்கான போராட்டமாக அல்லாமல் இஸ்லாமிய அகீதாவை முன்னிறுத்தி முஸ்லிம்களது முதலாவது கிப்லாவை; மூன்றாவது புனிதஸ்தலத்தை மீட்கும் போராட்டமாகவே ஹமாஸ் முன்கொண்டு செல்கிறது.

**ஹமாஸின் அனுபவம்:**

இப்பாதையில் ஹமாஸ் எதிர்கொண்டுவரும் சவால்கள் கொஞ்ச நஞ்சமல்ல. பலஸ்தீனை ஆள்வதற்கான சந்தர்ப்பமொன்று 2006ம் ஆண்டில் வழங்கப்பட்டதிலிருந்து காஸா பிரதேசத்தை நிர்வகித்துவரும் ஹமாஸ், தொடர்ந்த மூன்று போர்களை காஸா பள்ளத்தாக்கில் மீது சந்தித்துள்ளது. அவை ஒவ்வொன்றுமே வெவ்வேறான காலப் பகுதிகளில் சிறந்த சூழலோ அல்லது பாதகமான சூழலோ எதிலும் ஹமாஸ் மற்றும் காஸா மக்கள் போராடத் திறன்பெற்றவர்கள் என்ற செய்தியை உலகுக்கு சொன்னது. (பக் -12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்திய இராணுவத்தில் அதிகாரப் பிளவு

• முஷாஹிம் அஹ்மத்



## 2018 இல் ஸீஸிக்கு என்னவாகப் போகின்றது?

எகிப்தின் அரச நிறுவனங்களில் நிலவும் அதிகாரப் போட்டி ஒரு புதிய கட்டத்தை அடைந்துள்ளது. தற்போது எகிப்தின் தலைமைத்துவம் இரண்டு குழுக்களாகப் பிளவுபட்டுள்ளதை சமீபத்திய அறிக்கையொன்று உறுதிப்படுத்தியுள்ளது. ஒரு குழு இராணுவத்தையும் இராணுவப் புலனாய்வுப் பிரிவையும் உள்ளடக்கிச் செயற்படுகின்றது. அடுத்த தரப்பினர் ஸீஸிக்கு ஆதரவாக இருப்பதோடு, எகிப்தின் பொது புலனாய்வுப் பிரிவுக்கு விசுவாசமாக உள்ளது.

அல் அறபி அல் ஜதீத் பத்திரிகையில் வெளியான அறிக்கையின்படி, இவ்விரு சாராருக்கும் இடையிலான பிரிவு தொடர்ந்தும் வளர்ந்து வருகின்றது. இராணுவ அதிகாரிகள் ஊடகங்களுக்குத் தெரிவிக்கும் கருத்துக்களிலிருந்து ஆளும் வர்க்கத்தில் ஏற்பட்டுள்ள பிளவு தெளிவாகத் தெரிகின்றது.

2018 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இருந்து தற்போதைய ஜனாதிபதி அப்துல் பத்தாஹ் ஸீஸி விலகியிருக்க வேண்டும் என சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் கலந்துரையாடி வருகின்றனர்.

ஆனால், ஸீஸி இக்கோரிக்கையை ஏற்பதற்குத் தயாரில்லை. நாட்டின் பொதுப் புலனாய்வுப் பிரிவினரின் உதவியோடு வரும் முறையும் தேர்தலில் குதிப்பதற்கு அவர் உத்தேசித்துள்ளார். (ஏற்கனவே நடைபெற்ற தேர்தலும் முழுமையான தேர்தல் அல்ல. 20 வீதமான மக்களே வாக்களிப்பில் ஈடுபட்டிருந்தனர்.)

இராணுவம் 2018 இல் அதிகாரத்தை அமைதியான வழியில் ஒப்படைப்பது குறித்து சிந்தித்து வருகின்றது. 2018 இல் இது குறித்து இடம்பெறும் மக்கள் எழுச்சியை தடுக்கக் கூடாது என்பதில் இராணுவம் உறுதியாக உள்ளது.

இராணுவத்தின் இப்பிளவுக்கும் ஸீஸிக்கு எதிரான முடிவுக்கும் சில முக்கிய காரணங்கள் இருப்பதாக இந்த அறிக்கை கூறுகின்றது.

- ஸீஸி எகிப்தியர்களின் மக்கள் ஆதரவைப் பெறத் தவறிவிட்டார்.
- கடந்த மூன்று ஆண்டுகளில் அவருக்கெதிரான கிளர்ச்சிகளும் மக்கள் புரட்சியும் முற்றாக ஓயவில்லை.
- சீரியஸான பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில் ஸீஸி தோல்வி கண்டுள்ளார். எகிப்திய சமூகத்தைப் பீடித்துள்ள ஏனைய பிரச்சினைகளிலிருந்தும் நாட்டை அவர் மீட்கவில்லை.
- சீனி, அரிசி என்பன மக்கள் பார்வையிலிருந்து மறைந்து விட்டன.
- டொலருக்கு நிகராக எகிப்திய பவுண்டின் பெறுமதி பாரியளவு வீழ்ச்சியடைந்துள்ளது.
- அத்தியவசியப் பொருட்களின் விலை பெருமளவு அதிகரித்துள்ளது.
- எகிப்தியர்கள் அன்றாடம் வாழ்வை நடாத்துவதில் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றர்.

இது ஸீஸியின் நீடிப்புக்கான உத்தரவாதத்தை வழங்காது என்பதே இராணுவத்திலுள்ள பெரும்பாலானோரின் எண்ணமாகும். மேலும், முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டை ஸீஸியின் அரசாங்கத்தால் தொடர்ந்தும் கைக்கொள்ள முடியாது என்பதையும் இன்றைய எகிப்தின் நிலவரங்கள் உறுதி செய்துள்ளன.

இன்றைய எகிப்தின் இந்த அரசியல் காட்சியை ஸீஸி ஏற்றுக் கொண்டதாய்த் தெரியவில்லை. அவர் தனது அதிகாரத்



தில் இன்னொரு முறை நீடிக்கவே விரும்புகின்றார். இராணுவத்தில் ஸீஸியை எதிர்க்கின்றவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் பெருகி வருகின்றது. இராணுவப் புலனாய்வுப் பிரிவின் ஆதரவை அவர் இழந்து விட்டார். பொதுப் புலனாய்வுப் பிரிவை நம்பி பதவியை நீடித்துக் கொள்ளலாம் என்பது அவரது எண்ணம்.

இது பலிக்குமா இல்லையா என்பதை 2018 தேர்தல் உறுதி செய்துவிடும். தொடர்ந்தும் அவர் பொதுப் புலனாய்வுப் பிரிவை பலப்படுத்தி வருகிறார். இப்போது எகிப்தின் தொலைக் காட்சிகளில் நடைபெற்று வரும் விவாதங்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு ஆதரவாகவும் எதிராகவும் உள்ளன. நாட்டின் இராணுவத் துறையில் பாரதூரமான பிளவு ஏற்பட்டுள்ளதையே சமீபத்திய எகிப்தின் சமூக ஊடகங்களும் இலத்திரனியல் ஊடகங்களும் உறுதிப்படுத்தியுள்ளன.

நவம்பர் 11 இல் நாட்டின் அனைத்து எதிர்க்கட்சிகளும் தேசியளவிலான எதிர்ப்புப் பேரணியொன்றை நடத்துவதற்கு அறைகூவல் விடுத்துள்ளன. இது குறித்து சகோதரத்துவ இயக்கம் இது வரை எந்த முடிவையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஸீஸியின் ஆலோசகர்கள் ஸீஸியை அதிகாரத்தில் நீடிக்கச் செய்வதற்கு கடும் பிரயத்தனம் செய்கின்றனர். ஆயினும், தாராளமாகப் போதும். எங்கள் எல்லோரையும் ஒரே அடியில் மூழ்கடிக்க வேண்டாம் என்ற கோஷத்தையே அவர்கள் மக்களிடமிருந்து எதிர்கொள்கின்றனர்.

ஸீஸி மீதான அதிருப்தியும் வெறுப்பும் பல மாதங்களுக்கு முன்பாகவே ஆரம்பித்து விட்டது. இதற்கு மேலும் மக்கள் மீது துப்பாக்கிகளைப் பிரயோகிப்பதற்கு இராணுவத்தின் பெரும்பான்மையானோர் தயாராக இல்லை என்பதை அவர்கள் உணர்த்தி விட்டனர். அமைதியான வழியில் அதிகாரம் கைமாற்றப்பட வேண்டும் என்பதிலேயே நிதானமாகச் சிந்திக்கும் இராணுவம் அதிக அக்கறை கொண்டுள்ளது.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுதல் என்பதற்கு ஒரேயடியில் மக்களை அடக்குவதுதான் வழி என ஸீஸி வழங்கும் அர்த்தம் இதற்கு மேல் பலிக்கப் போவதில்லை. இராணுவ உயர் அதிகாரிகளிடையே பொது மக்கள் மீது வன்முறையை கட்டவிழ்க்கக் கூடாது என்ற சிந்தனை முழு வேகம் கொண்டுள்ளது.

இதற்கிடையில், அறபி அல் ஜதீத் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றொரு விடயம் பலரையும் திடுக்கிடச் செய்துள்ளது. இஸ்ரேலின் மிகப் பிரபலமான பத்திரிகையில் ஒன்றான Yedioth Ahranoth ஸீஸியின்

ணுவமும் அமெரிக்கா அதிகாரிகளும் தமக்கிடையில் ஓர் ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளதாக இந்த அறிக்கை இப்பத்திரிகையை மேற்கோள் காட்டியுள்ளது.

ஸீஸி அரசாங்கத்தின் சரிவுக்கு மிகப் பிரதான காரணமாக இருக்கப் போவது மக்களைத் திடுக்கிட வைக்கும் பொருளாதாரப் பின்னடைவே. இஸ்ரேலிய உளவுப் பிரிவு இதனைக் காரணமாக வைத்து ஸீஸியின் அரசாங்கம் வீழ்வதை அங்கீகரிக்க முடியாது என களத்தில் இறங்கியுள்ளது.

2017 இல் எகிப்திய பொருளாதாரத்தில் சில அலங்கார மாற்றங்களை ஏற்படுத்த இஸ்ரேலும் அமெரிக்காவும் திட்டமிட்டு வருகிறது. ஆனால், மீளவும் எகிப்தியர்கள் ஸீஸியின் ஆட்சிக்கு எதிராக வீதிக்கு இறங்குவதை இது எந்தளவு தூரம் தடுக்கும் என்பது கேள்விக்குறியே.

எகிப்தின் பொருளாதார நெருக்கடிக்குப் பல காரணங்கள் உள்ளன. சினாயில் இடம்பெறும் மோதல்கள், யெமன் மற்றும் லிபியாவில் இடம்பெறும் சிவில் யுத்தங்கள் மட்டுமன்றி, எகிப்துக்கான சவூதி அறேபியாவின் உதவி மற்றும் ஐக்கிய அறபு எமிரேட்ஸ், குவைத் என்பவற்றின் உதவி பாரியளவு குறைந்துள்ளன. 2017 இல் எகிப்திய அரசுக்கு மிகக் கடினமான ஆண்டாக இருக்கும் என உலகத்தின் பல நாட்டுத் தலைவர்கள் எதிர்வுகூறியுள்ளனர்.

ஸீஸியை எவ்விலை கொடுத்தேனும் காப்பாற்றுவதற்கு இஸ்ரேல் களமிறங்கியுள்ளது. மக்கள் மீது வலுக்கும் பொருளாதாரச் சுமை மற்றொரு புரட்சியாக வெடிப்பதற்குத் தருணம் பார்த்து நிற்கின்றது. சமூக வலைத் தளங்கள் மீது எந்தக் கட்டுப்பாட்டையும் அரசால் விதிக்க முடியாது. கடந்த இரு ஆண்டுகளாக, ஸீஸி அரசாங்கத்திற்கு எதிரான பிரச்சாரங்கள் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. உணவுப் பொருட்களுக்கு எகிப்தியர்கள் செலுத்தும் விலையே அவர்களைக் கோபமூட்டுவதற்குப் போதுமானது. பணவீக்கம் 14% ஐத் தாண்டியுள்ளது. மின்சாரக் கட்டணம் 25% இலிருந்து 40% ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலமைகளின் திரட்சியாக எகிப்தில் மீண்டும் மக்கள் வீதிக்கு இறங்கக் கூடிய நிலமை உருவாகி வருகின்றது. ஆனால், துப்பாக்கி வேட்டுகளால் அவர்களைக் கலைப்பதற்கு முன்பு போல் இராணுவம் தயாராக உள்ளதா என்பதே கேள்வி. இங்குதான் ஸீஸியும் அவரது சகாக்களும் அச்சத்தில் உறைந்து போயுள்ளனர்.

2018 எகிப்தியர்களுக்கு ஒரு முக்கியமான ஆண்டுதான் என் இறது இந்த அறிக்கை.

## பொஸ்பொரஸ் கரையினிலே...

### துருக்கியின் வீழ்ச்சியும் எழுச்சியும் - 08

முதல் உலகப் போரில் தோல்வியடைந்த துருக்கியை மேலும் சீர்குலைக்க எதிரிகள் திட்டமிட்டனர். அதன் மூலம் யூதர்களுக்கு அவர்களது இலக்கை அடைந்துகொள்ளும் வாய்ப்பு உருவாக்கப்பட்டது. 1918 இல் முஸ்தபா கமால், இதற்கென களத்தில் இறக்கப்பட்டான். மாசோனியா இயக்கம் தனது சதிவலைகளை பின்னத் தொடங்கியது.

தேசியவாத சிந்தனை தூண்டப்பட்டது. தொழுகை, நோன்பு, ஹஜ் போன்ற வணக்கங்கள் மூலமும் ஜிஹாதின் மூலமும் முஸ்லிம் உலகை காக்க வந்த ஒரு சீர்திருத்தவாதியென்று முஸ்தபா கமாலை மக்கள் நம்பினர். மக்களின் செல்வாக்கை பெற்ற பின்னர் யூத மாசோனிய திட்டங்களை, கமால் செயல்படுத்த தொடங்கினான். அதன் ஆரம்ப களம் துருக்கியாகும்.

தொடக்கத்தில் துருக்கியை தலைமையாகக் கொண்ட இஸ்லாமிய கிலாபத்தை வீழ்த்தும் நோக்கில் யூத பரம்பரையில் வந்த ஜாபித் ஹுஸைன், ஜாபித் போன்ற சிலரை தெரிவுசெய்தான். அவர்களுக்கும் குறிப்பிடத்தக்க மக்கள் செல்வாக்கு இருந்தது. சாதிக்கும் திறனும் இருந்தது. இவர்களை தம்பக்கம் ஈர்த்துக் கொண்ட முஸ்தபா, ஒவ்வொரு இரவும் ஒன்றுகூடி நாட்டு நடப்புக்களை கூர்ந்து கவனித்து வந்தான். காலப்போக்கில் துருக்கிய அரசில் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்த சிலரோடு தொடர்புகொண்டான். அவர்கள் துருக்கியின் அன்றைய அரசியல் நிலைமைகளை கமாலுக்கு அவ்வப்போது தெரியப்படுத்தி வந்தனர்.

முஸ்தபா கமாலின் சதிக் கும்பலில் இடம்பெற்ற இன்னொருவன் இஸ்மத். இவன் அப்போது சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்பாய் இருந்தான். தேசிய அரசியல் கட்சியின் செயலாளர் பௌஸியும், வெளிவிவகாரப் பொறுப்பாளர் றுஸ்லி ஆறாஸும் இக்குழுவில் இடம்பெற்றவர்கள். இவர்கள் ஸ்தன்பூல், இப்ரியா பல்கழகத்தில் பயின்றவர்கள்.




இவ்வாறு முஸ்தபா கமால் கிலாபத்தை ஒழிப்பதற்கான திட்டங்களை படிப்படியாக செய்து வந்தான். மக்களின் நம்பிக்கைக்கு மோசடி செய்தான். துருக்கியின் காவலர் என மக்கள் போற்றிய இவனே பிற்காலத்தில் துருக்கியின் இஸ்லாமிய அடையாளத்தை கருவறுத்தான். சூழ்நிலைக்கேற்ப தன்னை மாற்றிக் கொண்ட இவனுக்கு மக்கள் ஆதரவு கிடைத்தது. 1923 இல் அதிகாரம் இவன் வசமானது. கிலாபத் ஆட்சியானது மக்களின் ஜனநாயக உரிமைகளை பூரணமாக பிரதிபலிக்கவில்லை என கூறி புதியதொரு கிலாபத் முறையை அறிமுகப்படுத்தப் போவதாகக் கூறினான். மக்கள் அதற்கு ஆதரவளித்தனர். இவன் இம்மக்கள் ஆதரவைப் பயன்படுத்தி இறுதிக் கலீபாவான வஹீதுத் தீனை பத்து நாட்களுக்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்று பணித்தான்.

சியோனிச தொடர்புகளையும் யூத சார்பையும் நன்கு அறிந்து வைத்திருந்த சுல்தான் அப்துல் ஹமீத் பரம்பரையில் தோன்றிய கலீபா வஹீதுத் தீன் (ஆறாவது முஹம்மத்) என்பரை பதவி நீக்கம் செய்துவிட்டு. அதற்குப் பதிலாக, சுல்தான் அப்துல் மஜீத் என்பவரை நியமனம் செய்த .. 1923 ஓகஸ்டில் மக்கள் ஜனநாயக சோசலிச கட்சி எனும் அர... கட்சியைப் பிரகடனம் செய்தான். அதில் அங்கத்துவம் பெற்ற அனைவரும் மாசோனிய இயக்க உறுப்பினர்கள் என்பது ..றிப்பிடத்தக்கது. இக்கட்சி 1923 ஒக்டோபர் 20இல் துருக்கியை ஜனநாயக சுதந்திர குடியரசாக பிரகடனம் செய்தது. அதன் தலைவராக முஸ்தபா கமால் தெரிவுசெய்யப்பட்டான்.

1924 மார்ச் மாதம் இஸ்லாமிய கிலாபத்தை உத்தியோக பூர்வமாக ரத்துச் செய்து துருக்கியை மதச்சார்பற்ற நாடு என அறிவித்தான். தொடர்ந்து அமெரிக்க பிரிட்டன் நிதி ஆதரவு துருக்கியை நோக்கி வெள்ளம் போல் பாய்ந்தது. கம்யூனிஸ நாடுகளும் துருக்கியை தமது நேச நாடுகளாக அங்கீகரித்தன.

முஸ்தபா கமாலின் அரசாங்கத்துடன் பேரம் பேசுவதற்கு முண்டியடித்துக் கொண்டு நின்றன. 600 ஆண்டு காலம் இஸ்லாமிய உலகத்திற்கு தலைமை தாங்கிய துருக்கியை மதச்சார்பற்ற நாடாக மாற்றியதில் அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். மதச்சார்பற்ற நாடாகப் பிரகடனம் செய்யப்பட்ட துருக்கியில் சீர்திருத்தமென்ற பெயரில் முஸ்தபா கமால் பல்வேறு மாற்றங்களை அறிவித்தான்.

முஸ்தபா கமால் ஒரு யூத பரம்பரையில் வந்தவன் என்பதையும் சியோனிச நலன்களை காப்பதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டவன் என்பதையும் சுய ஒப்புதல் மூலம் ஏற்றுக்கொண்டவன். துருக்கிய இராணுவத்தில் பணியாற்றிய காலம் முதலே யூதர்களோடு நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தவன்.

1994இல் அமெரிக்காவிலிருந்து வெளிவந்த ஆங்கில பத்திரிகையொன்றில் 1911இல் ஜெரூசலம் நகரில் வைத்து அவன் ஒரு யூதன் என்பதற்கு வழங்கிய ஒப்புதல் வாக்குமூலம் பதிவாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• ஸலாஹுத்தீன்

# கண்ணுக்குத் தெரியாத பேய்:

## எதிர்கொள்வதற்கான பரிகாரம் என்ன?

இலங்கையின் அண்மைக் காலச் சூழலில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மஹிந்த ராஜபக்ஷவுடைய காலத்தில் இலங்கை முஸ்லிம்கள் மீதான வெறுப்புணர்வுப் போராட்டங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. உள்ளூரில் தோற்றுவிக்கப்பட்ட இனவாத அமைப்புக்கள் இந்தப் பிரச்சாரங்களை அரச அனுசரணையுடன் அரங்கேற்றின.

பொதுபல சேனா, ராவணா பலய, சிங்ஹல ராவய எனப் பல பெயர்களையும் தாங்கிய தீவிரவாத இயக்கங்கள் ஏக காலத்தில் களத்தில் குதித்துச் செயல்பட்டன. அரசாங்கமும் வெளிப்படையாகவே இவற்றுக்கு ஆதரவு வழங்கியது. இவற்றை இயக்கியவர்கள் ஊடகங்களை அழைத்துச் செய்தியாளர்




மாநாடுகள் தொடராக நடத்தும் அளவுக்கு பகிரங்கமாகத் தொழிற்பட்டார்கள். இந்த முஸ்லிம் விரோத அமைப்புக்களுக்கு வெளிநாட்டு அதிதிகளும் வருகை தந்து உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகளை நடத்துகின்ற வகையில் அலுவலகங்களும் முகவரிகளும் காணப்பட்டன.

பிரச்சினைகளும் இன்னதுதான் என்ற தெளிவு அப்போது இருந்தது. முஸ்லிம்களுடைய இனவிருத்தி, பள்ளிவாசல்கள், ஹலால் மற்றும் அபாயா போன்ற கலாச்சார அடையாளங்களின் வளர்ச்சி, முஸ்லிம்களின் பொருளாதாரம் என அடையாளப்படுத்த முடியுமான பிரச்சினைகள் வெளிப்படையாகப் பேசப்பட்டு விவாதிக்கப்பட்டன. சில விட்டுக்கொடுப்புக்களுக்கும் தணிக்கைகளுக்கும் இரு தரப்பும் உடன்படுகின்ற அளவுக்கு விடயங்கள் தெளிவாக இருந்தன.

முஸ்லிம் சமூகத்தின் தலைமைகளும் தமக்குப் பரிச்சயமான இந்த விவகாரங்களில் எதிர்வாதங்களும் புரிந்தார்கள். சமூகத்தை வழிநடத்தினார்கள். இந்த விடயங்களை வைத்து முஸ்லிம் சமூகத்தை ஒன்றுபடுத்தினார்கள். உலமாக்களால் கையாள முடியாத சிவில் விவகாரங்களைக் கையாள்வதற்காக தேசிய ஷூறா சபை உருவாகியது. தலைமைகள் ஒருமித்துச் செயற்பட்டன. இறுதியில் தமக்கெதிராகச் செயற்பட்ட மகா சக்திகளை விரட்டியடிப்பதற்கு மக்கள் பலத்தை ஒன்று திரட்டும் அளவுக்கு முஸ்லிம் சமூகம் இதன்போது ஊட்டம் பெற்றது.

தற்போது மையம் கொண்டு வருகின்ற சூழல் முஸ்லிம்கள் சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்து விட்டார்களா என்ற கேள்வியை நிலைகொள்ள வைத்திருக்கிறது. அல்லது சோபித்த தேரர் சொன்னது போல, சட்டி சூடாக இருக்கிறது என்று அந்தச் சூட்டில் ரொட்டி சுட்டுக் கொள்வதற்கான முயற்சிகள் நடக்கிறதா என்பது மெலிதாகப் பரவும் புதிராகவிருக்கிறது.

முஸ்லிம் வெறுப்புணர்வுப் போராட்டங்களின் போது வளர்த்து விடப்பட்ட சிங்களத் தீவிரவாத உணர்வுகள் பெரும்பான்மைச் சிங்களவர் மத்தியில் ஒரு அலையை ஏற்படுத்தியிருக்கின்றன. இதன் விளைவாக அவர்கள் முஸ்லிம்களை தமக்குப் போட்டியாக முளைக்கின்ற எதிரிகளாகப் பார்ப்பதற்கு தலைப்பட்டிருக்கிறார்கள். முஸ்லிம்கள் மீதான அபிமானம் பிடுங்கப்பட்டு, அவர்கள் மீது அனுதாபம் காட்டும் நிலையில் இருந்து சிங்கள மக்களின் உணர்வுகள் சலவை செய்யப்பட்டுள்ளன.

இனி முஸ்லிம்களுக்கு எதிராக எது நடந்தாலும் அவற்றைப் பற்றி யாரும் கண்டுகொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்ற எண்ணக்கருவின் வளர்ச்சிப் போக்கிலேயே புதிய முஸ்லிம் விரோதச் செயற்பாடுகள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.

முன்னைய அரசாங்கம் குழுக்களை வைத்துச் செய்த வேலைகள் எல்லாம் தற்போது அரச கரும விடயங்களாக நடக்கத் துவங்கியுள்ளன. முஸ்லிம்கள் மீதான ஒடுக்குமுறைகள் செயற்பாடுகளாகவன்றி நியதிகளாகவே வரையப்படுவதற்கான முஸ்தீபுகள் நடக்கின்றன.

வரையப்படவிருக்கின்ற அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள தேர்தல் சீர்திருத்தத்தினால், பாராளுமன்றத்தில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் குறைவடையப் போகிறது. வட்டாரப் பிரிப்புக்கென எல்லைகள் மீள்நிர்ணயம் செய்யப்படும் பொழுது பிரதேச மட்டத்தில் பல முஸ்லிம் பிரதிநிதித்துவங்கள் இழக்கப்படவிருக்கின்றன. இந்த இழப்புக்கள் யாப்பு ரீதியாகவே உறுதிப்படுத்தப்படவிருக்கின்றன.

முஸ்லிம்கள் நினைத்தும் பார்த்திராத ஐ.எஸ். தீவிரவாதம் நாட்டிலே இருப்பதாக இலங்கைக்கு இந்தியா இடித்துரைத்தது. பல்வேறு சல்லடைத் தேடுதல்களின் பின்னர் இலங்கைப் புலனாய்வுத் துறை இலங்கையிலே ஐ.எஸ். தீவிரவாதம் இல்லை என்பதை மீட்டி மீட்டி உறுதிப்படுத்தியது.

ஆனாலும் இலங்கையில் ஐ.எஸ். தீவிரவாதம் இருப்பதாக இலங்கை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகின்ற சக்திகளுக்கு முன்னால் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை சட்டமாக மாற்றுவதற்கு இயைந்ததன் மூலம் இலங்கை அரசு தலைசாய்த்துவிட்டது. இதன் மூலம் இல்லாத பேயைத் தேடி சல்லடை போடுவதற்கான அனுமதி, வெளிநாட்டுச் சக்திகளுக்கு சட்டமாகவே வகுத்துக் கொடுக்கப்படுகிறது. இதன் மூலம் ஒடுக்கப்படப் போவது இலங்கை முஸ்லிம்கள் தான் என்பதில் நாட்டில் எவருக்குமே மாற்றுக் கருத்துக்கள் இருக்கப் போவதில்லை.

சர்வதேச முஸ்லிம் விவகாரங்கள் தொடர்பிலான அரசின் கொள்கையிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அணி சேரா நாடுகளிலும், பொதுநலவாய நாடுகளிலும் எப்போதும் நீதி நியாயத்தின் பக்கம் தலைசாய்த்து பெருமை பெற்றிருந்த இலங்கை, தற்போது அநீதிக்கும் அநியாயத்துக்கும் துணை போவதாக தன்னைப் பிரகடனப்படுத்தி வருகிறது.

இந்த வகையில் ஜனநாயக நாடான ஈராக்கை ஆக்கிரமிப்பாளர்கள் துவம்சம் செய்தபோது இலங்கை அதற்கு எதிராக குரல் கொடுக்கவில்லை. இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பூமியை மீட்டெடுப்பதற்கான போராட்டத்தை இதுவரை காலமும் நீதியான கண்ணோட்டத்துடன் பார்த்து விட்டு, தற்பொழுது குப்பதுஸ் ஸஹ்ராவில் இஸ்ரேலுக்கும் பங்கிருக்கிறது என வெளிநாட்டமைச்சர் அறிக்கை விட்டிருக்கிறார். முஸ்லிம்களின் விவகாரங்களை நீதி நியாயத்துடன் பார்ப்பதில் இருந்து விலகிச் செல்கின்ற அரசின் போக்கையே இது காட்டுகிறது.

முஸ்லிம்கள் மீது அரசாங்கம் வைத்துள்ள அக்கறை காரணமாகவே முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தம் செய்யப்படப் போகிறது என்று முஸ்லிம்கள் வைத்த நப்பாசையையும் சட்டம், ஒழுங்குகளுக்கான அமைச்சர் சாகல ரத்நாயக்க தவிடு பொடியாக்கியுள்ளார். சர்வதேச விவகாரங்களுடன் மஹிந்த ஒத்துப் போவதில்லை என்பதால் தடைப்பட்டிருந்த ஜீ.எஸ்.பி. வரிச் சலுகை

மீளப்பெறுவதற்கு ஐரோப்பிய நாடுகள் விதிக்கின்ற நிபந்தனைகளில் முஸ்லிம் தனியார் சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டியதும் இணைக்கப்பட்டிருப்பதன் மூலம் யாருடைய தேவைக்காக இந்த மாற்றம் நடக்கிறது என்பது தெளிவாகிறது.

முஸ்லிம் தனியார் சட்டத்தில் வர வேண்டிய திருத்தங்கள் சம்பந்தமாக முஸ்லிம் சமூகமே பேசித் தீர்க்க வேண்டும் என்கின்ற நிலையில் வெளி அழுத்தங்களுக்காக முஸ்லிம் சமூகத்தை விற்று விடுவதற்கு அல்லது பலிக்கடாக்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் துணிந்திருக்கின்ற நிலையையே இது காட்டுகிறது.

முஸ்லிம் விரோதச் செயற்பாடுகள் நாட்டிலே நடந்தேறியபோது, முஸ்லிம்களின் சமய விவகாரங்கள் கேள்விக்குள்ளாக்கப்பட்டபோது அகில இலங்கை




**சர்வதேச முஸ்லிம் விவகாரங்கள் தொடர்பிலான அரசின் கொள்கையிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அணி சேரா நாடுகளிலும், பொதுநலவாய நாடுகளிலும் எப்போதும் நீதி நியாயத்தின் பக்கம் தலைசாய்த்து பெருமை பெற்றிருந்த இலங்கை, தற்போது அநீதிக்கும் அநியாயத்துக்கும் துணை போவதாக தன்னைப் பிரகடனப்படுத்தி வருகிறது.**

ஜம்மியதுல் உலமா சமூகத்துக்குத் தலைமை தாங்கி இந்த விவகாரங்களை கையாண்டது. ஆனால் 'தற்போதுள்ள பிரச்சினைகள் ஜம்மியதுல் உலமாவின் கையாள்கைக்கு அப்பாற்பட்டவை. பிரச்சினை இன்னதென்று கூறமுடியாத, பிரச்சினையின் ஆழம் என்னவென்று புரியாத, பிரச்சினையின் மூலம் எங்கென்று விளங்காத கண்ணுக்குத் தெரியாத பேய்களுடன்தான் இந்தப் பிரச்சினைகளைக் கையாள வேண்டியிருக்கிறது.

தொடராக நடந்து வரும் முஸ்லிம்களுக்கு எதிரான இந்த முனைப்புக்கள் தொடர்பில் சமூகத்தில் சிலரேனும் விழிப்புடன் இருக்கிறார்கள் என்பதனை நடக்கின்ற ஆர்ப்பாட்டங்கள் தெரிவிக்கின்றன. இந்த ஆர்ப்பாட்டங்களும் கூட திட்டமிட்ட வகையில் தீர்வு நோக்கிச் செல்பவைகளாகவன்றி உணர்ச்சிகளின் வெளிப்பாடாகவே நடந்து முடிகின்றன. இவை ஒருமித்த கருத்தொன்றை நோக்கி குவிமையப்படுத்தியதாக அமைவதில்லை என்பது கவலையான விடயம்

என்பதோடு, இந்த ஆர்ப்பாட்டங்கள் உரிய இடங்களில் தாக்கம் செலுத்தி, விளைவுகளைத் தருமா என்பதிலும் கேள்விகள் இருக்கின்றன.

இந்த வகையில் முஸ்லிம்களுடைய விவகாரங்களில் முன்னிலை வகிக்க முடியுமான தலைமையொன்றை உருவாக்கிக் கொள்வதற்கான போராட்டமே முஸ்லிம் சமூகத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும். உரிய தரப்புகளுடன் உரிய முறையில் விவகாரங்களை முன்வைத்து சமூகத்துக்கு தீர்வுகளைப் பெற்றுத் தரக் கூடிய தலைமையொன்றை வேண்டி சமூகத்தில் குரல்கள் ஆர்ப்பரிக்க வேண்டும். சோரம் போகாத, சமூகத்தின் மேல் அக்கறையுடன் செயற்படக் கூடிய அரசியல் தலைமைகளையும் இணைத்து பொதுவான ஒரு கூட்டணி உருவாக்கப்பட வேண்டும்.

நிலைமை சன்மார்க்க விடயங்களையும் தாண்டிச் செல்வதனால் முஸ்லிம் சமூகத்தின் சிவில் விடயங்களில் அக்கறை கொண்டு உழைக்கின்ற தேசிய சூறா சபை இந்த நேரத்தில் சமூகத்துக்கு கைகொடுக்க வேண்டும்.

---

### பலஸ்தீனத்துக்கான ... 10ம் பக்கத் தொடர்)

2008/09 முதல் போர் தொடுக்கப்பட்ட போது ஹமாஸ் எவ்வித உதவியும் இல்லாமலே எல்லாப் புறமும் எதிர்ப்புகளாக இருந்த காலப்பகுதியில் கடினத்துடன் எதிர்கொண்டது. பின்பு 2012 இல் இரண்டாவது யுத்தம் தொடுக்கப்பட்ட போது அரபு வசந்தம் அதன் ஆரம்பகட்ட சுபசோபனங்களுடன் இருந்தது. எகிப்து முழுமையான ஆதரவை வழங்கியது.

அடுத்ததாக 2014 யுத்தம் வந்தது. அரபு வசந்தத்தின் எதிர்ப் புரட்சிகள் நிகழ்ந்த சூழல் அது. அப்போது பலரும் 'ஹமாஸ் அதன் பழைய தோழமைகளை இழந்துவிட்டது; அது புதிய தோழமைகளை அடைந்துகொள்ளவில்லை' என்றெல்லாம் சொன்னார்கள். ஆனாலும் அது நமது போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்தது.

இவை, அரசியல்-ஆயுத ரீதியாக ஆதரித்துப் பலப்படுத்துவதற்கு தம்மை சூழ ஆதரவாளர்கள் இருந்தபோதிலும் இல்லாத சூழ்நிலைகளிலும் பலஸ்தீன மக்கள் சாத்திய மற்றவைகளையும் சாதிக்கக் கூடியவர்கள் என்பதைக் காட்டுகிறது.

அரபு வசந்தம் சாதகமான கட்டத்தில் இருந்த 2012 இல் இரண்டாவது யுத்தத்தின் போது, எகிப்து, துருக்கி, கத்தார் ஆகிய நாடுகள் மூலம் சிறந்த தலைமை வழங்கப்பட்டது. 2012 போரின் போது அரபு லீக் செயலாளர் காஸாவுக்கு சென்றார்; எகிப்து பிரதமர் காஸாவுக்கு சென்றார்; துருக்கியின் வெளிவிவகார அமைச்சர் காஸாவுக்கு சென்றார்.

அப்போது எல்லோரும் பலஸ்தீன எதிர்ப்பு போராளிகள் இந்த யுத்தத்தை நிறுத்துவதற்கு என்ன நிபந்தனைகளை இடுகின்றனர் என்றே கேட்டனர். இஸ்ரேல் மீதுதான் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுக் கொண்டிருந்தது; ஹமாஸ் மீது அல்ல; இதுவொரு பெரிய மாற்றம். அப்போது இலக்குகளை அடைந்துகொள்வதில் அந்த குறுகிய கால போர், பெரு வெற்றிபெற்றது. முழு அரபு-இஸ்லாமிய சமூகங்களும் ஒன்றிணைந்து நிற்கும் போது பலஸ்தீன எதிர்ப்புப் போராட்டம் எந்த வடிவம் பெற்று இருக்கும் என்பதற்கான சிறு உதாரணமாக அது காணப்பட்டது.

மேற்கூறப்பட்ட பந்திகள் அரசியல் போராட்டக் களத்தில் ஹமாஸின் முதிர்ச்சி மிக்க அணுகுமுறைகளாகவும் அனுபவங்களாகவும் உஸ்தாத் காலித் மிஷ்அல் பகிர்ந்துகொண்ட அம்சங்களாகும். ஹமாஸ் தன்னை எப்போதும் மீள்பரிசீலனை செய்துகொண்டே இருக்கிறது.

ஹமாஸ் தற்போதைய நிலையில் கவனமாகத் தன்னை வரையறுத்துப் போராடும் பாப்பை காலித் மிஷ்அலின் [illegible]

(1) நாம் பலஸ்தீன விடுதலைப் போராட்ட இயக்கம். பலஸ்தீனை அதனை ஆக்கிரமித் திருப்போரிடம் இருந்து மீட்கப் போராடுகிறோம்.

(2) பலஸ்தீன விவகாரத்தை, குத்ஸ் விடயத்தை இஸ்லாமிய உம்மத்தின் முதன்மைப் பிரச்சினையாக உம்மத்திடம் முன்வைத்து அதனைப் பேணுதல். இதனை அயலகப் பிரச்சினைகளுக்குள் உள் நுழைக்காதிருத்தல்.

(3) அடுத்து பிராந்தியத்தில் நடக்கும் பிரச்சினைகளுக்குள் உள்நுழையாமல் இருக்கும் அதே நேரம் அவ்விடயம் குறித்த பொறுப்பான, பண்பான நிலைப்பாடொன்றை அடிப்படையில் கொண்டிருப் போம். மக்களுடன் அவர்களது உரிமைக்காக இருப்போம்; அவர்களது வேதனைகளை அறிந் தவர்களாக இருப்போம். உம்மத்தின் ஒற்றுமையில், நலன்களில் கவனத்துடன் இருப்போம். இவை இயல்பானவை; இவை ஹமாஸினதும் பலஸ்தீன மக்களினதும் நிலைப்பபாடுகள்; ஹமாஸ் ஒரு மக்கள் இயக்கம்; அது மக்களது எண்ணங்களைப் பிரதிபலிக்க வேண்டும்; நாம் ஒரு நீதியான விவகாரத்துக்காகப் போராடுகின்றவர்கள். நாம் அநியாயத்துடன் கைகோர்க்கக் கூடாது. சிலர் இதன் போது மக்களுக்கு எதிராக இருக்கும்படி கோரிய போது நாம் மறுத்தோம்.

(4) அடுத்து பிராந்தியத்தின் நாடுகள் மற்றும் சக்திகளோடு அரசியல் ராஜதந்திர உறவுகளைப் பேணும் போது, நமது நலன்கள் மற்றும் அத்தியாவசியங்களுக்கிடையே சமநிலை பேண முயற்சிப்போம். அதன் போது நலன்களுடன் நமது அடிப்படைகள் முரண்படும் போது நமது அடிப்படை பண்பாட்டுப் பெறுமானங்கள் மீதே திரும்புவோம். சிலர் தமது மக்களுக்கெதிராக நம்மை நிற்குமாறு கோரிய பொழுதில் நாம் நமது நிலைப்பாட்டை எடுத்து, இவற்றுக்கான விலைகளை கடந்த காலங்களில் செலுத்தியுமிருக்கிறோம். அவை குறித்து கடந்த காலங்களில் ஆழமான வாதங்கள் பல எழுந்தும் உள்ளன.

இந்த சுருக்கமான வரையறைகள் ஹமாஸ் பலஸ்தீனத்துக்குக் கொடுக்கும் பெறுமானம் மிகுந்த தலைமைத்துவத்தை புரியக் கூடியதாக இருக்கும். மாற்றீடு என்பது தாம் மட்டுமல்ல தாம் பலஸ்தீனுக்கான தலைமையைக் கொடுக்கும் பல தரப்பினருடன் தாமும் ஒரு பங்கேற்புக் குழு; முக்கியமான பங்கேற்புக் குழு என்ற அடையா ளத்துடன் ஹமாஸ் பலஸ்தீனத்துக்கான தலை மையைக் கொடுத்து வெற்றியை நோக்கிப் பயணிக் கிறது. ஹமாஸ் அதன் இலக்கை அடைந்துகொள்ளும் நாள் தொலைவிலில்லை.

'அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக அல்லாஹ்வின் உதவி சமீபமாகவே இருக்கின்றது'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• அமீர் எம். பாயிஸ் (LL.M)
பணிப்பாளர், முஸ்லிம் செயலகம்

தமிழில்: மிப்றாஹ் முஸ்தபா



# முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தம்:

# காலத்தின் தேவையா?

முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தம் தொடர்பான் பரிந்துரைகள் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான உடன்படிக்கைகளோடு முரண்படாத வகையில் மேற்கொள்வதற்கு அமைச்சரவை உப குழுவொன்றை அமைப்பதற்குத் தீர்மானித்திருப்பதாக அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவையின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டிருந்தார்.

2009 ஆம் ஆண்டு முஸ்லிம் தனியார் சட்டத்தை திருத்தம் செய்வதற்காக நீதி அமைச்சரால் முன்னாள் நீதியரசர் சலீம் மர்சூப் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு 7 வருடங்களுக்கும் மேலாக எத்தகைய பரிந்துரைகளையும் முன்வைக்கவில்லை. இது இவ்வாறிருக்க சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான உடன்படிக்கைகளோடு முரண்படாத வகையில் முஸ்லிம் தனியார் சட்டத்தை திருத்தம் செய்ய வேண்டுமென்ற முடிவை அமைச்சரவை எடுத்திருப்பதானது முஸ்லிம் சமூகம் கரிசனையோடு கவனம் செலுத்த வேண்டிய முக்கியமானதொரு அழைப்பாகவே நோக்க வேண்டும்.

அந்த வகையில் இத்திருத்தம் வேண்டுகின்ற மிக முக்கியமான அம்சம் இலங்கையில் காணப்படுகின்ற பழைமை வாய்ந்த முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் அனைவருக்கும் சமத்துவத்தை வழங்கக் கூடிய வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்பதாகும்.

**நடைமுறையிலுள்ள சட்டமும், அதன் பலவீனங்களும்**

முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் இலங்கை முஸ்லிம்களின் விவகாரங்களை கையாள்வதற்காக 1951 இல் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டதொரு சட்டமாகும். நடைமுறை ரீதியாக காணப்பட்ட பல்வேறு பிரச்சினைகளை இல்லாமலாக்குவதற்காகவே இச்சட்ட மூலம் கொண்டுவரப்பட்டது.

இச்சட்டம் முழுமையாக இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படையில் காணப்படாவிட்டாலும், முஸ்லிம்களது திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பான விவகாரங்களை கையாளக்கூடிய எளிமையான ஷரீஆ சட்டம் எனக் கருத முடியுமாக இருந்தது.

உண்மையில் இச்சட்டம் ஆண்களைக் கொண்ட ஒரு குழுவினால் தொகுக்கப்பட்ட சில ஷரீஆ விடயங்களையும் சில வழக்காறுகளையும் கொண்ட கலவையாகவே காணப்படுகின்றது. என்றாலும் இன்று அது ஷரீஆ விடயங்களோடு முரண்படுகின்ற ஒன்றாக மாறியிருக்கின்றது.

அதேபோன்று இச்சட்டம் திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பான விடயங்களில் இலங்கைப் பிரஜைகளுக்குக் கிடைக்கின்ற உரிமைகளோடு இஸ்லாமிய திருமண சட்டங்களையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. என்றாலும் இந்த முஸ்லிம் திருமணம் மற்றும் விவா கரத்துச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதானது பல்வேறு முரண்பாடுகளை சமூகத்திற்குள் கொண்டு வந்திருக்கின்றது.

குறிப்பாக முஸ்லிம் பெண்கள் இச்சட்டத்தினால் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு காணப்படுகின்றது. இத்தகைய பெண்களுக்கான சமத்துவத்தை மறுக்கின்ற, பல்வேறு குறைபாடுகளைக் கொண்டுள்ள இச்சட்டத்தை சரிசெய்வதற்கான புதியதொரு சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்பதில் முஸ்லிம் பெண்களே முன்னணியில் நின்று செயற்படுகின்றனர்.

அந்தவகையில் முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் நடைமுறை ரீதியாக பெண்கள், சிறுவர்களை பாரபட்சமாக நடத்துகின்ற ஒரு சட்டமென்ற விடயம் முஸ்லிம் தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தை திருத்தம் செய்வதற்காக அரசாங்கத்தினால் 1956, 1984 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்தக் குழுக்கள் சொல்லும்படியாக எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

இதன் பின்னர் முஸ்லிம் சமூகத்திற்குள்ளால் எழுந்த நிர்ப்பந்தம் காரணமாகவும், இச்சட்டத்தை திருத்தம் செய்வதற்கான தேவையை சமூகம் உணர்ந்ததன் காரணமாகவும் 2009 ஆம் ஆண்டு நீதியமைச்சராக இருந்த மிலிந்த மொரகொடவினால் நீதியரசர் சலீம் மர்சூப் தலைமையில் மூன்று முஸ்லிம் பெண்கள் உள்ளடங்கலாக 16 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

இவ்வாறு மிலிந்த மொரகொடவினால் அமைக்கப்பட்ட இக்குழு ஆறு மாதங்களுக்குள் குறித்த சட்டத்தை திருத்தம் செய்வதற்கான பரிந்துரைகளை சமர்ப்பித்திருக்க வேண்டும். ஆனால், பல வருடங்கள் கடந்தும் நீதிபதிகள், சட்டத்தரணிகள், கல்விமான்கள் மற்றும் சமூக செயற் பாட்டாளர்களை உள்ளடக்கிய இக்குழு இன்னும் சட்டத் திருத்தத்திற்கான பரிந்துரைகளை முன்வைக்கவில்லை. துரதிஷ்டவசமாக இத்தகைய தாமதமானது முஸ்லிம் சமூகம் தமக்கு அவசியமான திருத்தத்தை செய்வதற்கு தயாரில்லாத, கையாலாகாத ஒரு சமூகமாகவே காணப்படுகின்றது என்ற வாதத்தை வலுப்படுத்தி இருக்கின்றது.

**நம்பிக்கை தரும் சீர்திருத்தமாக அமையுமா?**

இந்தப் பின்னணியில் நவம்பர் மாதமளவில் முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தம் தொடர்பான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளதாக முன்னாள் நீதியரசர் சலீம் மர்சூப் தெரிவித்திருப்பது மகிழ்சியானதொரு விடயம். சில உறுப்பினர்கள் தாராளவாத சிந்தனைகளுக்கு (Liberal Views) எதிர்ப்புத் தெரிவித்தமையே அறிக்கை தாமதமாவதற்குப் பிரதான காரணம் என்பதையும் அவர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.


இச்சட்டத்தின் மூலமாக பாதிக்கப்பட்ட பலரது கருத்துக்களையும் முன்னாள் நீதியரசர் சலீம் மர்சூப் தலைமையிலான குழு உள்வாங்கியிருப்பதானது வரவேற்கத்தக்க விடயமாகும். அதேபோன்று நீதியரசர் சலீம் மர்சூப் மற்றும் குழுவிலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் அவர்களது ஆழமிக்க அறிவுத் திறமையின் அடிப்படையில்தான் இக்குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

அவர்கள் சமூகத்திலுள்ள ஒரு சிலரின் விருப்பு வெறுப்புக்கேற்ப செயற்படாமல் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் பொறுப்புக் கூற வேண்டும் என்ற உணர்வோடு செயற்பட வேண்டும். என்றாலும் அரசாங்கம் ஐ.நா சபையின் மனித உரிமைகளோடு தொடர்பான உடன்படிக்கைகளை மதிக்கக்கூடிய வகையில்தான் சட்டத் திருத்தம் அமைய வேண்டும் என நிர்ப்பந்தித்திருப்பதும் இங்கு கவனிக்க வேண்டிய விடயமாகும்.

**பாகுபாடுகள் நிறைந்த சட்டம்**

இச்சட்டத்தின் கீழ் முஸ்லிம் பெண்களும் சிறுவர்களும் பாகுபாடு காட்டப்படுகிறார்கள், அவர்களுக்கான சமத்துவம் மறுக்கப்படுகின்றது என்ற குற்றச்சாட்டே பிரதானமாக முன்வைக்கப்படுகின்றது. குறிப்பாக இச்சட்டத்தில் காணப்படும் பெண்கள் திருமணம் செய்வதற்கான வயதெல்லை, பெண்கள் காழி நீதிபதிகளாக நியமிக்கப்படாமை, திருமண ஒப்பந்தத்தின் போது பெண்களின் அனுமதி / விருப்பம் கருத்திற் கொள்ளப்படாமை மற்றும் பலதார மணம் மூலம் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் என்பன பெண்களுக்கான நீதியையும் சமத்துவத்தையும் குழிதோண்டிப் புதைப்பதாகவே அமைந்துள்ளன.

வளைகுடா நாடுகள் உட்பட பெரும்பாலான முஸ்லிம் நாடுகளில் பெண்கள் திருமணம் செய்வதற்கான ஆகக் குறைந்த வயதெல்லை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று இந்தோனேஷியா, மலேசியா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பாக்கிஸ்தான், தூனிசியா, எகிப்து, சூடான், மொரோக்கோ அகிய நாடுகளில் பெண்கள் நீதிபதிகளாவும் காழி நீதிபதிகளாவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இஸ்லாமிய ஷரீஆ்வின் அடிப்படையில் செயற்படும் நாடான மலேசியா பலதாரமணம் செய்வதற்கு கண்டிப்பான பல நிபந்தனைகளை விதித்திருக்கின்றது. துருக்கி 1926 ஆம் ஆண்டு பலதார மணத்தை தடை செய்ததோடு தூனிசியாவும் 1956 இல் தடைசெய்தது.



**நீதிக்காகவே இஸ்லாம் போராடுகிறது**

முன்னாள் நீதிபதி வீரமந்திரி ''இஸ்லாமிய சட்டவியல்- ஓர் சர்வதேசக் கண்ணோட்டம்'' என்ற தனது ஆய்வில் இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான உடன்படிக்கைகளுக்கு அடிப்படையாக அமைந்திருக்கின்றது எனக் குறிப்பிட்டிருக்கிறார். மேலும், பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எந்தவிதமான உரிமைகளும் வழங்கப்படாத நேரத்தில் இஸ்லாம்தான் அவர்களுக்கான அத்தனை உரிமைகளையும் வழங்கியது என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

ஆண்களும் பெண்களும் சமமானவர்கள் என்பதை குர்ஆன் வசனங்களின் மூலமாக தனது ஆய்வில் உறுதிப்படுத்தியுள்ளார்.

**16வது அத்தியாயம் - பெண்களை அடிமைப்படுத்தும் பட்டயமா?**

அரசியலமைப்பின் 16வது அத்தியாயம் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கெதிரான பாகுபாடுகளைக் கொண்ட ஒரு சட்ட ஏற்பாடாகும். அரசியலமைப்பின் 16 ஆவது அத்தியாயத்தை நீக்க வேண்டுமென்ற கோரிக்கையானது பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு மறுக்கப்படுகின்ற சமத்துவத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தின் உச்ச நிலையாகும். அரசாங்கம் குறித்த சட்டத்தை நீக்குவதன் மூலம் முஸ்லிம்களுக்கெதிரான மத ரீதியான உணர்வுகளைத் தூண்டுவதற்கு விளைகிறது என்ற வாதம் எழுந்திருக்கின்றது.

அரசியலமைப்பின் 16 ஆவது அத்தியாயத்தை நீக்க வேண்டும் என்பதன் மூலம் நாட வருவது

> **வெறுமனே பால் சமத்துவம், சமூக நீதி, மதப் பன்மைத்துவம் என்பவற்றை மாத்திரம் உறுதிப்படுத்துவதாக அமையாமல் இஸ்லாத்தில் வலியுறுத்தப்பட்ட அடிப்படைக் கோட்பாடுகளை பிரதிபலிப்பதாகவும் அவற்றின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டதாகவும் புதிய திருத்தம் அமைய வேண்டும்.**

முஸ்லிம் தனியார் சட்டம் முழுவதையும் நீக்குவதல்ல. மாற்றமாக அச்சட்டத்திலுள்ள பாகுபாடான பகுதிகளை நீக்குவது மட்டுமே என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கும் சமத்துவமான உரிமைகளை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தினுடைய பொறுப்பாகும்.

**அரசியல்வாதிகளின் பொறுப்பு என்ன?**

இச்சட்டத் திருத்தம் தொடர்பில் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் முழுமையாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவையே சார்ந்திருந்தார் என்பதை பல்வேறு அறிக்கைகள் மறைமுகமாகக் குறிப்பிட்டிருந்தன. அமைச்சர் ஹக்கீம் உட்பட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களே பாராளுமன்றத்தில் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகள். மக்கள் ACJUவை தமது பிரதிநிதியாக சட்டம் இயற்றும் சபையான பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யவில்லை என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

சமூகம் தொடர்பான விவகாரங்களில் அரசியல்வாதிகள், சமூகத் தலைமைகள், சமூக செயற்பாட்டாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் அனைவரும் பங்கெடுக்க வேண்டியவர்கள். அந்தவகையில், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா இவ்விவகாரத்தில் வழிகாட்டல்களை வழங்க வேண்டுமே தவிர ஒட்டுமொத்தமாக முஸ்லிம் சமூக விவகாரங்களின் தீர்மானிக்கும் சக்தியாக மாறக்கூடாது. ஏனெனில் அதிலுள்ளவர்களில் பெரும்பாலானோர் சட்ட ரீதியான அதிகாரமிக்கவர்களும் அல்லர். சமூக அங்கீகாரத்தைப் பெற்றவர்களும் அல்லர்.

சமூகம் சம்பந்தப்பட்ட விடயங்களில் ACJUவின் அண்மைக்கால முடிவுகள் சமூக மட்டத்தில் பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தமை அனைவரும் அறிந்ததே. அதேபோன்று அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா ஆண்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்ட ஓர் அமைப்பு. எனவே அவர்களது அணுகுமுறை சரியானதா அல்லது தவறானதா? என மக்கள் மத்தியில் பரீட்சித்துப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது.

எனவே முஸ்லிம் சமூகத்திலுள்ள அனைத்துத் தரப்பும் இத்தகைய சமூகம் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் மக்களின் உணர்வுகளை மதித்து நடப்பதோடு மட்டுமல்லாமல், தேசிய ரீதியாகவும் சிந்தித்து செயலாற்ற வேண்டிய தேவை உள்ளது.

**ஆக்கபூர்வமான அணுகுமுறையே காலத்தின் தேவை**

முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தம் முஸ்லிம் நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் அடிப்படையிலும் அனுபவங்களின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. வெறுமனே பால் சமத்துவம், சமூக நீதி, மதப் பன்மைத்துவம் என்பவற்றை மாத்திரம் உறுதிப்படுத்துவதாக அமையாமல் இஸ்லாத்தில் வலியுறுத்தப்பட்ட அடிப்படைக் கோட்பாடுகளை பிரதிபலிப்பதாகவும் அவற்றின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டதாகவும் புதிய திருத்தம் அமைய வேண்டும். அதேபோன்று, புதிய திருத்தம் சிறுவர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அமைவதோடு இளவயதுத் திருமணம் போன்ற சிறுவர்களது உரிமைகளைப் பறிக்கும் செயற்பாடுகளை தடைசெய்வதாகவும் அமைய வேண்டும்.

இஸ்லாம் எல்லாக் காலத்திற்கும் பொருத்தமான அனைத்து மக்களும் பின்பற்றக்கூடிய ஓர் அழகிய வாழ்க்கை நெறி. அது ஒருபோதும் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் வேறுபாடுகளை விதைக்கவில்லை. அல்குர்ஆன் நீதியும் சமத்துவமும் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற விடயத்தில் உறுதியாக நிற்கின்றது.

அந்தவகையில் முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தம் தொடர்பான வாதங்கள் வலுப் பெற்றிருக்கும் இந்த நேரத்தில் நீண்ட காலமாக காத்திருந்த இந்த சந்தர்ப்பத்தை சமூகம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நன்றி: Colombo Telegraph

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம் தனியார்.... (01ம் பக்கத் தொடர்)

பாராளுமன்றத்தில் உள்ள 21 முஸ்லிம் உறுப்பினர்களையும் கொண்டதாக அமைந்துள்ள புதிய குழுவினர் நீதியரசர் ஸலீம் மர்சூப் தலைமையிலான குழுவினரின் பரிந்துரைகளையும் வைத்தே தமது பணிகளை ஆரம்பிக்கவிருப்பதாகவும், இம்மாதம் 20 ஆம் திகதிக்குள் நீதியரசர் ஸலீம் மர்சூப் தமது அறிக்கையை வெளியிடுவார் எனவும் தெரிய வருகிறது.

முஸ்லிம் தனியார் சட்டத்தின் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்திலேயே திருத்தங்கள் செய்யப்படவிருக்கின்றன. தற்போதைய சட்டத்தில் உள்ள சில விவகாரங்கள் இஸ்லாமிய ஷரீஅத்துடன் ஒத்துச் செல்வனவாக இல்லை என்ற காரணத்தினாலேயே இந்த மாற்றங்கள் தொடர்பில் சமூக மட்டங்களில் பேசப்பட்டது. முஸ்லிம் பெண்களின் திருமண வயது இலங்கையின் ஏனைய சமூகங்களில் உள்ளது போல 18 ஆக இருக்க வேண்டும், திருமணத்தின்போது வலி அன்றி மணப்பெண்ணே தமது சம்மதத்தைத் தெரிவிப்பதற்கு அவகாசம் வழங்கப்பட வேண்டும், பலதார மணத்தின் போது முதல் மனைவியின் அனுமதி பெறப்பட வேண்டும், பெண்களும் காதிகளாக நியமிக்கப்பட வாய்ப்பளிக்கப்பட வேண்டும், விவாகரத்துப் பெற்ற பெண்ணுக்கான தாபரிப்புப் பணம் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் போன்ற பல்வேறு விடயங்கள் திருத்தத்துக்கு உள்ளாக்கப்படவிருக்கின்றன.

இது தொடர்பான கோரிக்கைகள் சமூகத்தில் பெண்களிடம் இருந்தே எழுந்ததாகவும், ஆண்களில் சிலர் இதற்கு ஆதரவு வழங்கியதாகவும் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் பிபிஸிக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்திருந்தார்.

இதேவேளை ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகைக்கு தகைமை பெறுவதற்காக முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக வெளியாகியுள்ள செய்தி இலங்கை முஸ்லிம் சமூகத்தில் பெரும் பதற்றத்தை தோற்றுவித்துள்ளதாக தேசிய சூறா சபை அறிக்கை வெளியிட்டிருக்கிறது. ஒரு தலைப்பட்சமாக அரசு திட்டமிட்டு வரும் மேற்படி முஸ்லிம் தனியார் சட்டத் திருத்த முன்னெடுப்பை ஸலீம் மர்சூப் தலைமையிலான குழுவின் அறிக்கை வெளிவரும் வரை பிற்படுத்துமாறு தேசிய சூறா சபை அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டங் மார்க் கருத்து வெளியிடுகையில், இலங்கை ஜீ.எஸ்.பி. வரிச் சலுகையை பெற்றுக்கொள்ள வேண்டுமானால் சர்வதேச சாசனங்களை மதிக்க வேண்டும். 16 வயதிலேயே ஒரு பெண் திருமணம் முடிக்கத் தகுதியாகின்றாள் என சர்வதேச சாசனம் கூறுகிறது. இதை ஏற்றுக் கொண்டால்தான் இலங்கைக்கு ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை கிடைக்கும் எனத் தெரிவித்தார்.

## மத நம்பிக்கை... (01ம் பக்கத் தொடர்)



நிபந்தனைகளாக முன்வைக்கவேண்டுமென ஹாபிஸ் நசீர் அஹமட் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் மூவின மக்களும் நல்லாட்சியில் அமைதியாகவும் சமாதானமாகவும் வாழ்ந்து வரும் நிலையில் இவ்வாறான நிபந்தனை அவசியமற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

கிழக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆகியன இணைந்து முன்னெடுக்கும் நல்லாட்சி தொடர்பில் முதலமைச்சர் இதன்போது எடுத்துரைத்தார்.

## சிங்கள முஸ்லிம்... (01ம் பக்கத் தொடர்)



சிவனொளி பாதமலை புனிததல வளாகத் தில் எவ்விதமான கட்டடங்களும் நிர்மாணிக்கப்படவில்லை. அங்கு எந்த ஹோட்டலும் நிர்மாணிக்கப்படவில்லை என்பதனை பொறுப்புடன் தெரிவிக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார்.

பகுதிக்கு செல்லும் வழியில் அப்பால் 88 ஏக்கர்களில் அமைந்துள்ள ஒரு தனியார் நிலத்தில் ஏற்கனவே இருந்த ஒரு கட்டடத்தை தற்போது விடுமுறை விடுதியாக மாற்றப்பட்டு வருகின்றது. இதனை வைத்து பௌத்தர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்துவதற்கு பொய் பிரசாரம் செய்யப்படுகின்றது என்றும் பிரதியமைச்சர் குறிப்பிட்டார்.

அதே நேரம் இறக்காமம், மாணிக்கமடு பகுதியில் புதிதாக புத்தர் சிலையொன்று பலவந்தமாக நிறுவப்பட்டமையினால் அப்பிரதேச முஸ்லிம்கள், தமிழர்கள் மத்தியில் அச்சம் நிலவி வருகின்றது. இது தொடர்பில் பிரதேச மக்களின் அழைப்பை ஏற்று ஸ்தலத்துக்கு விரைந்த அமைச்சர் ரவூப் ஹக்கீம், சிறுபான்மை மக்களை வலிய வம்புக்கு இழுக்கின்ற சம்பவமாக இது பார்க்கப்படுகின்றது.

இந்த விடயம் சட்டத்தையும் ஒழுங்கையும் தோற்றுவிப்பதில் குந்தகம் விளைவிக்கின்றது. நீதிமன்ற தடையையும் மீறி எந்த மதத்தைச் சேர்ந்தவர்களும் தங்களது மதத்தை பிரதிபலிக்கும் சின்னத்தையோ அடையாளத்தையோ அனுமதியின்றி பலவந்தமாக வைப்பதென்பது வணக்க வழிபாட்டுக்கோ ஆராதனைக்கோ அல்ல என்று தெரிவித்தார்.

## அரசியல் யாப்பு... (01ம் பக்கத் தொடர்)



அரசியல் யாப்பு தொடர்பாக ஒரு வசனம் கூட இதுவரைக்கும் வகுக்கப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவித்தார்.

முஸ்லிம் இயக்கங்களின் கட்டமைப்பான முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்கா ஏற்பாடு செய்திருந்த அரசியலமைப்புச் சீர்திருத்த செயற்பாடுகள் பற்றிய கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

முஸ்லிம் கவுன்சில் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் மேலும் கூறியதாவது, தென் ஆபிரிக்கா, கென்யா, நேபாளம், கிழக்கு டிமோர் ஆகிய நாடுகளில் பன்மைத்தன்மை பேணுதல், சமூகநீதி, சமத்துவம் போன்ற அம்சங்களை உள்ளடக்கி இந்த அரசியலமைப்புத் திட்டம் தயாரிக்கப்படும். உபகுழுக்களது அறிக்கையே நகலாக வெளியிடப்படும். அதன் பின் வழிகாட்டல் குழு யாப்பினைத் தயாரிக்கும். இதன் பின் பாராளுமன்றத்திலும் வெளியிலும் இது தொடர்பாக விவாதிக்க இடமளிக்கப்படும்.

தொகுதி மற்றும் விகிதாசார முறையிலான தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவது பற்றி ஆலோசிக்கப்படுகின்றது. இந்த முறையின் கீழ் கட்சிக்கும் அபேட்சகருக்கும் வாக்களிப்பதற்கு ஒருவருக்கு இரு வாக்குகள் வழங்கப்படும். சிறுபான்மை மற்றும் சிறு கட்சிகளது நலன்களை உள்வாங்குவதற்காக பல அங்கத்தவர் தொகுதிமுறை இழப்பீட்டு பிரதிநிதித்துவம் என்பனவும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. ஜேர்மன் மற்றும் நியூசிலாந்தில் பின்பற்றும் தேர்தல் முறையை ஒத்ததாகவே இத்தேர்தல் முறை அமையும்.

பெரிய கட்சிகள் ஸ்திரமான அரசினை அமைப்பதற்கு போனஸ் முறை இருக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். வெட்டுப்புள்ளி இருக்கக் கூடாது என்பது எனது அபிப்பிராயமாகும்.

தேர்தல் தொகுதி அகில இலங்கை ரீதியாக அமைய வேண்டுமா? மாகாண ரீதியாக அமைய வேண்டுமா? என்பது பற்றி கருத்து முரண்பாடுகள் உள்ளன. தமிழர் கூட்டமைப்பு மாகாண மட்டத்தையே விரும்புகிறது. கூடுதலானவர்கள் தேசிய விகிதாசாரத்தை விரும்புகிறார்கள். உத்தேச அரசியலமைப்புத் திருத்தங்கள் தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி சாதகமான முறையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது.

அதிகாரப் பரவலாக்கம் மாகாண மட்டத்தில் அமைய வேண்டும் என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டுள்ளது. மாகாணங்கள் இணைய வேண்டுமா? என்பது பற்றி குறிப்பிட்ட மாகாணங்களே தீர்மானம் எடுப்பதற்கு யாப்பில் வசதி செய்யப்படுதல் வேண்டும். அந்த இரு மாகாண மக்கள் இணங்கினால் மாகாணங்கள் இணைந்து செயற்படலாம்.

முஸ்லிம் தனியார் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக நான் கருத்துக்கள் எதனையும் கூற விரும்பவில்லை. தேசவழமை மற்றும் கண்டிய சட்டங்களிலும் மாற்றங்கள் கொண்டு வருவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலத்திற்கேற்ற நவீன யாப்பு ஒன்று உருவாக்கப்படுவது அவசியமாகும்.

தற்போதைய அரசியல் யாப்பில் சில ஷரத்துக்களை மாற்றுவதற்கு பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்படல் வேண்டும். ஒரு கமாவை மாற்றுவதாக இருந்தாலும் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். மக்களது அங்கீகாரம் பெற்றே யாப்பு திருத்தப்படும் எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

அரசியலமைப்பு விவகார ஆலோசகர் வை.எல்.எஸ். ஹமீத், முஸ்லிம் கவுன்சில் உப தலைவர் ஹில்மி அஹமட் ஆகியோரும் உரையாற்றினர். எம்.ஐ.எம். முகைதீன், அசாத் சாலி உட்பட பலர் இதில் பங்குபற்றினர்.

## முஸ்லிம்... (01ம் பக்கத் தொடர்)



இதன்போது விளக்கமளித்தார். வடமாகாண சிவில் சமூகம் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வாக, சமஷ்டி முறைத் தீர்வொன்றினை எல்லோருமாகச் சேர்ந்து பெற்றுக் கொள்வது பொருத்தமானதல்ல எனச் சுட்டிக் காட்டிய தவிசாளர் அப்துர் ரஹ்மான், அரசியல் தீர்வு விடயத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலரின் கருத்தை முஸ்லிம் சமூகத்தின் கருத் தாகக் கொள்ளக் கூடாது. நேரடியாக முஸ்லிம் சமூகத்தின் கருத்தை தெரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். அதன் அடிப்படையிலேயே உங்களது நிலைப்பாட்டை நீங்கள் வகுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு இணைப்பில் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றுபடாவிட்டால் கிழக்கு மாகாணம் பறிபோய்விடும் எனவும், சமஷ்டியைப் பெற்றுக் கொள்ளும் விடயத்தில் முஸ்லிம் தலைமைகளின் பங்களிப்பு குறைவாகவே உள்ளது என்றும் திரு. சம்பந்தன் முன்னர் குறிப்பிட்டிருந்தார். சிவில் நிறுவனங்களும் முஸ்லிம் அமைப்புக்களும் இணைந்த வடக்கு கிழக்கு தொடர்பில் பல கலந்துரையாடல்களை தொடர்ந்தும் நடத்தி வருகின்றன.

## தீர்வுகளைத் ... (07ம் பக்கத் தொடர்)

சொந்தம் என்ற சட்டம் முஸ்லிம் மக்களுக்குப் பொருந்தாது. இவை மாற்றியமைக்கப் பட வேண்டும்.

14. முஸ்லிம் மக்களுடைய பூர்வீகமான சொந்தக் காணிகளிலுள்ள இராணுவங்கள் வெளியேற்றப்பட வேண்டும். புதிய குடும்பங்களுக்கான காணி வழங்கும் திட்டங்களையும் நடைமுறைக்கு கொண்டு வருதல் வேண்டும். பூர்வீகக் காணிகளுக்கு உறுதிகள் இல்லாத காரணத்தினால் அயலிலுள்ள மக்களது உறுதிப்படுத்தல்களுடன் காணிக்கான உறுதிகள் வழங்க வேண்டும். மக்களுடைய காணிகளை அரசாங்கம் எடுத்திருந்தால் காணிக்குப் பதிலாக இன் னொரு காணி அல்லது அதற்கான இழப்பீகள் வழங்க வேண்டும்.
15. அரச அதிகாரிகள் ஊழல்கள் செய்யும்போது அது தொடர்பாக விசாரணை செய்வதற்கான நடவடிக்கை கள் எடுக்க வேண்டும்.
16. பெண்கள் தொடர்பான பாலியல் ரீதியான தொந்தரவுகளுக்கு துரித கதியில் விசாரணை செய்யப்பட்டு உடனடியாகத் தீர்வினை ஏற்படுத்த வேண்டும்.
17. நீதிப்பொறி முறைக்கான விசாரணை அலுவலகத்தில் முஸ்லிம் மக்களது காணாமல் போனவர்கள் பற்றிய விசாரணைகள் உள்வாங்கப்படல் வேண்டும். காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மை தெரியப்பட வேண்டும்.
18. எல்லா அமைப்புக்களுக்கும் சேர்த்து தாய் அமைப்பு ஒன்று ஏற்படுத்தல் வேண்டும். அமைப்புக்களிடையே பரஸ்பர உறவினை ஏற்படுத்தல் வேண்டும்.


## இச்சிறுவனுக்கு உதவிக் கரம் நீட்டுவோம்



பூகொடை, குமாரிமுல்லை இல 100/2 என்ற முகவரியில் வசித்து வரும் ஜனாப் எம்.எஸ். எம் நஸ்லி என்பவரது புதல்வரான எம்.என். ஹம்ஸா என்ற 7 வயதுடைய சிறுவன் 'ஒஸ்டியோஸர்கோமா' என்ற கொடிய நோயினால் பாதிப்படைந்து தற்பொழுது மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். வைத்தியர்களின் வேண்டுகோளுக்கிணங்க இவரது மேலதிக சிகிச்சைகளுக்காக இந்தியாவுக்கு அழைத்துச் செல்ல பெற்றோர் தீர்மானித்துள்ளனர். இதற்காக ஏறக்குறைய 50 லட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பாரிய தொகையை திரட்டிக் கொள்ள பணம் படைத்தோரின் உதவியை நாடுகின்றனர்.

உதவிகளை தர விரும்புவோர் தொடர்புகளுக்கு: எம்.எச். நஸ்லி 0777192029
வங்கிக் கணக்கு- இலங்கை வங்கி, பூகொடை கிளை
கணக்கு இலக்கம் 77730497

தகவல்: இர்பான், பூகொடை


## வாய்ச் சொல்... (06ம் பக்கத் தொடர்)

என்று ரவூப் ஹக்கீம் கூறியிருக்கக் கூடுமென, மறுபுறமாக யோசிக்கவும் தோன்றுகிறது.

சமூக அக்கறையென்பது கணக்குப் போட்டுப் பார்த்து வருவதில்லை. சமூகத்தை நேசிப்பவர்களிடமே சமூக சிந்தனையினை எதிர்பார்க்க முடியும்.

'ஆட்சியாளன் சிந்தினையாளனாக இருக்க வேண்டும். அல்லது, சிந்தனையாளன் ஆட்சி நடத்த வேண்டும்' என்றார் பிளேட்டோ.

முஸ்லிம் சமூகத்துக்கு இரண்டுமே வாய்க்கவில்லை.

## வடக்கின் ஆவா... (01ம் பக்கத் தொடர்)



நாம் ஆவா குழுவை முழுமையாக இல்லாதொழிப்போம் என இராணுவம் கருத்துத் தெரிவித்துள்ளது. அப்படியாயின், இந்த குழுவைப் பற்றி இராணுவம் ஆரம்பத்திலிருந்து தெரிந்து வைத்திருக்கின்றது என்ற சந்தேகம் எங்களுக்குள்ளது. இவ்வாறு ஆவா குழுவை இல்லாதொழிக்க இராணுவம் விருப்பமாக இருந்தால் ஏன் அவர்களுக்கு பொலிஸாருடன் இணைந்து அவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த ஒத்துழைக்காதுள்ளனர்?

ஆவா குழுவும், சன்னா குழுவும் இராணுவத்தினால் அடையாளம் காணப்பட்ட இரு குழுக்கள். அவர்களை இல்லாதொழிக்க இராணுவத்துக்கு முடியுமாக இருந்தால், அவர்களைப் பற்றிய சகல தகவல்களும் இராணுவத்திடம் உள்ளது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமையவே வடக்கில் இயங்கும் ''ஆவா'' குழு உருவாக்கப்பட்டதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். தற்பொழுது அந்த ஆவா குழு அதனை உருவாக்கியவர்களின் தேவைக்காகவே வடக்கில் குழப்பத்தை ஏற்படுத்த செயற்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

## திருட்டுக்... (07ம் பக்கத் தொடர்)



கோபம் வரும். மைத்திரிபாலவும் கட்சியின் அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்குப் பல பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகிறார். இவ்வெல்லோரும் மக்களை ஏமாற்றுகிறார்கள். அதனால் நாம் மக்களுடன் ஓர் அணியை தயார் செய்து வருகிறோம். ஒப்பந்தப்படி செயற்படுபவர்களுடன் இணைந்து இந்நாட்டை கட்டியெழுப்ப முடியாது.

68 வருடங்களாக இவர்கள் நாட்டை அபிவிருத்தியடையச் செய்வதாகக் கூறி கடன் வாங்கினார்கள். எமது நாடு அபிவிருத்தியடைந்திருந்தால் விவசாயிகள் லம்போகினி வாகனங்களில் மலை நாட்டுக்குச் செல்வார்கள். அதற்குப் பதிலாக இன்று தேசிய வருவாய்க்குப் பதிலாக கடன் வட்டிகளை செலுத்திக் கொண்டுள்ளளோம்.

இதனால் இவர்களுடன் எந்தவொரு அரசாங்கத்தையும் உருவாக்க முடியாது. எல்லோருக்கும் நீதி நியாயம் கிடைக்கக்கூடிய சமூகமொன்றை உருவாக்குவதற்கு இந்நாட்டிலுள்ள புத்திஜீவிகள், தொழிலாளர்கள், கலைஞர்கள், விவசாய அமைப்புக்கள், மாணவர் அமைப்புக்கள், எல்லாம் ஒன்றிணைந்து பரந்தவொரு மக்கள் கூட்டணியாக முன் செல்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவோமே ஒழிய, அரசியல் இலாபங்களுக்கு இரகசிய உடன்படிக்கை செய்பவர்களுடன் ஒருபோதும் கைகோர்க்கப் போவதில்லை.


மீள்பார்வை உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 13 இதழ்கள் | - ரூபா 650.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 26 இதழ்கள் | - ரூபா 1300.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0112 691258 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவர்களின் தேசம் சார்ந்த பணி




மருத்துவர்களுக்கு தனது தொழின்மை சார்ந்த பணிகளும் சமூகம் சார்ந்த பணிகளும் தஃவா சார்ந்த பணிகளும் இருப்பது போன்றே தேசம் சார்ந்த பணிகளும் உள்ளன. மருந்துவ உலகைப் புரிந்துகொண்டு, அத்துறையில் நிலவும் தீமைகளைக் களைவதும், தேசத்தின் எல்லா மக்களும் ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்று முயற்சிப்பதுமே இந்தப் பணியாகும்.

இலங்கையில் பாதாள உலகில் செயல்படும் பல்வேறு மாபியாக்கள் உள்ளன. அதில் மருந்தகத் துறையின் மாபியாக்கள் மிகவும் ஆபத்தானவர்கள். ஏனெனில், சர்வதேச மருத்துவத் துறை மாபியாக்களின் வலைப் பின்னலில் அவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். இதனால், அதிக பக்க விளைவு கொண்ட மருந்துகளை இறக்குமதி செய்து உயர்ந்த விலைகளுக்குச் சந்தைப் படுத்தும் நிறுவனங்கள் நமது நாட்டில் பெருகிவிட்டன.

தெற்காசியாவிலேயே சில நோய்களுக்கான மருந்துகளுக்கு ஒப்பீட்டு ரீதியில் அதிக விலை கொடுக்கும் மக்கள் நமது நாட்டிலேயே வாழ்கின்றனர். இலங்கைக்கு இப்போது 2500 பிரேன்ட் மருந்துகளே தேவையாக உள்ள நிலையில், 10000 பிரேன்ட்கள் இறக்குமதியாகின்றன. இது ஏன் நிகழ்கின்றது என்பது தெரிந்த விடைக்கான கேள்விதான்.

இறக்குமதி செய்யப்படும் எல்லா மருந்துகளும் இலங்கை நோயாளர்களுக்குப் பொருத்தமானதா என்பதைப் பரிசீலிப்பது இன்னொரு பாரிய பிரச்சினையாகும். தேசிய மருந்து தர உறுதிப்பாட்டு ஆய்வகம் முற்றாகச் செயலிழந்து போயுள்ளது.

அமெரிக்க மருந்துக் கம்பனிகளால் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படும் புதிய மருந்துப் பொருட்களின் ஒரு தொகுதி இந்தியாவிலுள்ள ராஜஸ்தான் போன்ற வறிய மாநிலங்களுக்கோ ஆபிரிக்காவிலுள்ள மொசாம்பிக் அல்லது கென்யாவிற்கோ இலவசமாக வழங்கப்படுகின்றது. இந்நாடுகளின் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்கு மேற்கு நாடுகள் நீட்டும் மனிதாபிமான உதவிகள் என்று இதற்குப் பெயர்.

ஆனால், நடப்பது என்ன? தமது மருந்துகளின் பக்க விளைவைக் கண்டுபிடிப்பதற்கான ஆடுகளமாக இவ்வறிய நாட்டு மக்களையோ சர்வதேச மருந்துக் கம்பனிகள் பயன்படுத்துகின்றன. இதுவே கள உண்மை. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் எல்லாமே ஒப்பீட்டு ரீதியில் பக்க விளைவு குறைவானவையா என்பதைப் பரிசீலிப்பதற்கு நம்மிடம் உள்ள ஏற்பாடு என்ன?

Generic Names, Brand Names, Company Names என ஒவ்வொரு மருந்திற்கும் மூன்று பெயர் உள்ளன. இதில் நோயாளிக்குப் பரிந்துரை செய்யப்படும் மருந்துத் துண்டில் வைத்தியர் எதைக் குறிப்பிட வேண்டும் என்பது பற்றி ஒரு விவாதம் இங்கு நிகழ்கிறது.

வினைத் திறன், தரம், பாதுகாப்பு சுகாதாரத் துறையினரால் உத்தரவாதம் செய்யப்பட வேண்டும். இன்னொரு புறம் ஏழை நோயாளிகள் விலை கொடுத்து வாங்கும் நிலையில் மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்பட வேண்டும். மருந்து விற்பனை நிலையங்களின் தகுதியை உறுதி செய்வதற்கான பொறிமுறை மிக அவசியம்.

இலங்கையில் 3000 இற்கும் அதிகமான போலி வைத்தியர்கள் இயங்குவதாக ஓர் ஆய்வு கூறுகின்றது. சமீபத்திய டெய்லி மிரர் ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் தலைப்பு இது குறித்து எழுதியிருந்தது. இலங்கையில் பெருகி வரும் தனியார் மருத்துவமனைகள் நோயாளிகளிடமிருந்து அறவீடு செய்யும் கட்டணம் எல்லை மீறிச் செல்வது குறித்த கடும் விமர்சனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. சில மருத்துவர்கள் மருத்துவ ஒழுக்கங்களைப் பின்பற்றத் தவறுவதாகவும் குற்றம் சாட்டப்படுகின்றது.

இத்தகைய ஒரு சூழலில் முஸ்லிம் மருத்துவர் பணியாற்றும் மருத்துவசாலை, அவரது தனிப்பட்ட மருந்தகம் என தனது உலகத்தை சுருக்கிக் கொள்ளாமல், இவ்வாறான தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். இது அவரது துறை சார்ந்த தேசிய பணியாகும்.

## நினைவுத் திறனை மேம்படுத்த எந்தக் குறுக்கு வழியும் இல்லை. இதை மாணவர்களும் பெற்றோரும் புரிந்துகொள்ள வேண்டும்.

சித்திரமும் கைப் பழக்கம், செந்தமிழும் நாப் பழக்கம். வைத்ததொரு கல்வி மனப் பழக்கம். நித்தம் நடையும் நடைப் பழக்கம். நட்பும் கொடையும் தயவும் பிறவிக் குணம் என்பது போல் படித்தல் ஒரு மனப் பழக்கம் ஆகும். மனதையும் மூளையையும் மீண்டும் மீண்டும் படிப்பில் சம்பந்தப்படுத்தும்போதே நினைவாற்றல் மேம்படுகின்றது. இதற்கு தொடர்ச்சியான முயற்சியும் பயிற்சியுமே தேவையானது.


நல்ல நினைவாற்றல் என்பது கற்றவற்றை நீண்ட காலம் மனதில் இருத்தி வைக்கும் திறனையும் தெளிவுடன் கற்றதை தேவையான போது மீட்டறியும் திறனையுமே உள்ளடக்கியது. கற்றலை மேம்படுத்துவதற்கு கல்வியியலாளர்களும் உளவியலாளர்களும் பல்வேறு உத்திகளை முன்வைத்துள்ளனர். அத்தகைய உத்திகளைப் பயன்படுத்துவதற்கு முன்னர் நினைவாற்றலை மேம்படுத்துவதற்கு ஏற்ற சாதகமான கற்றல் சூழ்நிலைகளையும் காரணிகளையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

நினைவாற்றலுக்குச் சாதகமான இக்காரணிகளை பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

### 1. கற்றலுக்கான விருப்பம் (Will to learn)

கற்றல் ஓர் உளச் செயற்பாடாகும். பாடசாலையை மாணவர்கள் விரும்ப வேண்டும். வகுப்பறைகளையும் அங்கு நிகழும் கற்பித்தலையும் விரும்ப வேண்டும். ஒவ்வொரு பாடத்தின் மீதும் மாணவர்களுக்கு விருப்பம் வேண்டும். விருப்பத்துடன் கற்கும்போதே மனம் ஒருமுகப் படுகின்றது. எந்தப் பாடத்தில் வெறுப்பு ஏற்படுமோ அங்கு மனஒருமைப்பாடு, கிரகித்தல், ஞாபகம் எதுவும் இருக்காது.

அதிக மதிப்பெண்களைப் பெறும் மாணவர்களையும் குறைவான மதிப்பெண் பெறும் மாணவர்களையும் ஒப்பீடு செய்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், குறிப்பிட்ட பாடத்தில் மாணவர்களுக்கு ஏற்படும் விருப்பம் நினைவாற்றலில் தாக்கம் செலுத்துவதை உறுதி செய்துள்ளன.



### 2. வகுப்பறைக் கற்றலில் கூர்ந்த கவனம் (close lisetning at class room)

வகுப்பறைக் கற்றலில் மாணவர்கள் செலுத்தும் கூர்ந்த கவனம் அவர்களது நினைவாற்றலில் தாக்கம் செலுத்துகின்றது. வகுப்பறைக் கற்றல் வேளையில் ஆசிரியர் கற்பிக்கும் விடயங்களைக் கூர்ந்து கவனித்து விளங்கிக் கொள்வது, சந்தேகம் ஏற்படின் உடனடியாகத் தெளிவு பெறுவது ஞாபகத்தில் வேகமாகப் பதிகின்றது.

40 நிமிட வகுப்பறைக் கற்பித்தலை மாணவர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும். வகுப்பறையிலேயே அது முறையாகக் கிரகிக்கப்பட வேண்டும். தவறினால், வீட்டில் அதை படித்துப் புரிந்துகொள்ள 120 நிமிடங்கள் -அதாவது மூன்று மடங்கு நேரம் செலவாகும். எனவே வகுப்பறைக் கற்றல் ஈடுபாடு, மாணவர்களைப் பொறுத்தவரை இன்றியமையாதது.

### 3. மனதையும் மூளையையும் படிப்பில் பயன்படுத்தல் (Involvement)

ஒரு மாணவன் தனது மூளையை எந்தளவுக்கு படிப்பில் பயன்படுத்துகின்றானோ அந்தளவு அவனுக்கு ஞாபகம் மிகுதியாக இருக்கும். ஒரு துறையில் அல்லது ஒரு பாடத்தில் ஆழ்ந்து செல்லும் போது ஈடுபாட்டுடன் கூடிய ஆர்வம் நினைவாற்றலை செழுமைப் படுத்துகின்றது. மருத்துவத் துறையில் படிக்கும் மாணவன், வகைதொகையற்ற மருந்துப் பொருட்களின் பெயர்களை நினைவில் வைக்கின்றான். தாவரவியல் படிக்கும் மாணவன், பல நூறு தாவரங்களின் பெயர்களை ஞாபகத்தில் வைக்கின்றான். மூளை திரும்பத் திரும்ப பயன்படுத்தப்படும்போது நினைவாற்றல் அதிகரிக்கின்றது.

### 4. சாதகமான மனவெழுச்சி (Possitive Emotions)

சாதகமான மனவெழுச்சி நல்ல கற்றலுக்கும் நல்ல நினைவாற்றலுக்கும் அவசியமாகும். ஒரு மாணவன் மகிழ்ச்சியான சூழலில் கற்றலை எளிதில் மறப்பதில்லை. நீண்டகாலத்திற்கு அவை அவனது நினைவில் பதிகின்றது. மறுதலையாக அச்சம், கவலை, பயம், பதகளிப்பு, வெறுப்பு போன்ற எதிர்மறையான மனவெழுச்சிக்கு உட்படும் மாணவர்களின் நினைவாற்றல் ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவே உள்ளன.

எனவே காலையில் பாடசாலை செல்லும் மாணவர்கள் மகிழ்ச்சியாகச் செல்ல வேண்டும். மாலையில் வீட்டுக் கற்றலில் ஈடுபடும் மாணவர்கள் மகிழ்ச்சிக் கற்றலில் ஈடுபட வேண்டும்.

### 5. தொடர்ச்சி (Contuniuenty)

கற்றலில் தொடர்ச்சியான முயற்சியும் உழைப்பும் அவசியம். ஒரு முறை படித்து விளங்கவில்லை என்றால் அல்லது ஞாபகத்தில் இருத்த கடினமாக இருந்தால் இரண்டு முறை கற்கலாம். அத்துப்படியான நினைவுக்கு வரும்வரை மூன்று முறை அல்லது நான்கு முறை படிக்கலாம். முன்னேற்றத்திற்கான திறவுகோல் தொடர்ச்சியான முயற்சியே.

முயற்சியில்லாதவர்கள் முன்னேறிய வரலாறு இல்லை. உலகக் கோடீஸ்வரர்களில் ஒருவரான பில் கேட்ஸ் முயற்சியும் பயிற்சியுமே முன்னேற்றத்தின் திறவுகோல் என்கிறார்.

பௌதிகவியலில் அதிசயிக்கத்தக்க அறிவியல் புரட்சியைத் தோற்றுவித்த அல்பேர்ட் ஐன்ஸ்டீன், திறமை கால்வாசியே. முக்கால்வாசி எனது முயற்சியே என்கிறார். மாணவர்கள் திறமையை நம்பி முயற்சியைக் கைவிட்டு விடக் கூடாது.

## மீள்பார்வை 20 ஆவது ஆண்டு நிறைவில்...

# அளுபெத்த ஊருக்கான கள விஜயம்

கள ஆய்வின் ஐந்தாம் நாள் ஒரு வெள்ளிக்கிழமை படல்கும்புர ஜும்ஆ பள்ளிவாயலிலிருந்து அளுபெத்த கிராமத்திற்கு செல்ல ஆயத்தமானேன். ஜும்ஆ தொழுகையின் பின்னர் அப்பள்ளிவாயலில் தஃவா வேலைகளுக்காக வருகை தந்திருந்த ஜமாஅத் சகோதரர்களுடன் உட்கார்ந்து மதியம் உண்ட பின்னர் வெளிக் கிளம்பினேன்.

அந்த ஊர் இருக்கும் இடத்தையும் செல்வதற்கான மார்க்கத்தையும் இறங்க வேண்டிய இடத்தையும் அங்கிருந்தவர்களிடம் கேட்டு அறிந்துகொண்டேன். அளுபெத்த முஸ்லிம் கிராமம் மொனராகலை மாவட்டத்தில் இருந்தபோதும், எங்களூரில் அது பிரபலம் பெற்றிருந்தது.

தீராத நோய்களுக்காக, எதிர்பார்ப்புகளுக்காக அளுபெத்தையில் அடக்கம் செய்யப்பட்டுள்ள அவ்லியாவுக்கு நேர்ச்சை செய்யும் ஒரு பழக்கம் எங்கள் ஊர் மக்கள் சிலரிடம் இருந்தது. சிறு வயதிலேயே கந்தளாய், ஹம்பாந்தோட்டை, அளுபெத்த ஆகிய மூன்று ஊர்களும் என் நினைவில் பசுமரத்தாணி போல் பதிந்திருந்தன.

தமிழ்ப் பாடப் புத்தகத்தில் கரும்புச் செய்கைக்குப் பிரபலமான கந்தளாயும், மீன்பிடிக்குப் பெயர் போன ஹம்பாந்தோட்டையும் இடம்பெற்றிருந்தமை இதற்கான காரணமாகும். அளுபெத்த நேர்ச்சைக்குப் பெயர் போயிருந்தது. மொனராகல-பதுளை பிரதான வீதியில் இக்கிராமம் அமைந்துள்ளது.

மொனராகலையிலிருந்து பதுளை நோக்கி வந்த பேரூந்தில் ஏறி ஜன்னலோரமாக உட்கார்ந்தேன். பயணம் தொடர்ந்தது. இரு பக்கங்களிலும் அணிவகுத்து நிற்கும் மரங்கள். அடர்த்தியான காடு. இடைக்கிடையே அமைதியாக தவழ்ந்து செல்லும் அருவிகள். ஜன்னல் வழியே இக்கண்கொள்ளாக் காட்சியைப் பார்த்துக் கொண்டே பயணமானேன்.

பாதையின் இரு மருங்குகளிலும் வண்ணத்துப் பூச்சிகள் இழந்த ஏதோவொன்றைத் தேடுவது போன்று பறந்துகொண்டிருந்தன. அப்பேரூந்தில் நான் மாத்திரமே முஸ்லிமாக இருந்திருக்க வேண்டும். இடத்தைக் கேட்டு அறிந்துகொண்ட நான், சுமார் எவ்வளவு நேரத்தில் அந்த இடத்தை அடையலாம் என்று கேட்டறிந்துகொள்ளத் தவறிவிட்டேன்.

பயணம் தொடங்கி சுமார் ஒன்றரை மணித்தியாலத்திற்குப் பின்னர் பதுளை நகரம் நெருங்கி வருவது போன்று ஓர் உணர்வு ஏற்பட்டது. ஜன்னல் வழியே வெளியே பார்த்தேன். கடைகளின் விளம்பரப் பலகையில் ஏதோ ஒரு சிறிய ஊரின் பெயர் பொறிக்கப்பட்டு, அதற்கடுத்ததாக பதுளை என இருந்தது. இன்னும் சில நிமிடங்களில் பதுளை நகரம் வந்து விடும் என்பதை ஊகித்துக் கொண்டேன்.

கையில் பெருந்தொகைப் பணமில்லை. தெரிந்தவர்கள் எவருமில்லை. முன்னைய பயண அனுபவங்களும் இல்லை. வடக்கில் போர் உக்கிரமாக நடந்து கொண்டிருக்கிறது. மொழி வேறு தெரியவில்லை. இவற்றையெல்லாம் நினைத்துப் பார்த்தபோது, அச்சம் விரவியது. இருள் கவ்வத் தொடங்கியிருந்த மாலைப் பொழுதொன்றில் என்ன செய்வதென்று தெரியாத நான், பேரூந்தின் கண்ணாடி வழியே வெளியில் உற்றுநோக்கினேன்.

அங்கே சில இளைஞர்கள் தமிழில் பேசிக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தனர். அது தற்காலிக ஆறுதலைத் தந்தது. முன்னே இருந்த தரிப்பிடத்தில் இறங்கிக் கொண்டேன். அப்போது பதட்டமும் பயமும் எனக்குள் சம விகிதத்தில் கூடாரமடித்து குடியிருந்தது.

மீளவும் நான் அளுபெத்தைக்கு எப்படிப் போவதென்று அவர்களிடம் கேட்டேன். பதுளையிலிருந்து மொனராகலை நோக்கி வரும் பேரூந்தில் ஏறி, குறிப்பிட்ட தொலைவில் இறங்கி, வலப் பக்கமாகச் செல்ல வேண்டும் என்று வழிகாட்டினர்.

சிறிது நேரத்தில் மொனராகலை பேரூந்து அந்தத் தரிப்பிடத்தில் வந்து நின்றது. மாலை வேளை என்பதனால் ஓட்டுநர் சுறுசுறுப்பாக இயங்கினார். அது காற்றைக் கிழித்துக் கொண்டு பறந்தது. மீண்டும் இடையில் இறங்காமல் மொனராகலைக்கே சென்று விடக் கூடாது என்பதில் நான் உறுதியாக இருந்தபோதும், அதைக் குலைக்கும் வகையில் இன்னொரு எண்ணமும் தோன்றி மறைந்தது. பேசாமல் படல்கும்புரவுக்கே போய்விடலாம் என்று.

இந்த சங்கடத்தோடு பேரூந்தின் முன்பக்கமாகப் பார்வையைச் செலுத்தினேன். அந்தக் கணம் எனக்கு நம்பிக்கை பிறந்தது. இருண்ட மேகங்களிடையே ஓர் ஒளிக்கீற்று போல் இருந்தது. முன்பக்கமாக இருந்த ஆசனமொன்றில் வட்டமான தொப்பி போட்ட, ஆறடி அங்குல தாடியுள்ள, ஜுப்பா அணிந்த ஒரு வயதாளி அமர்ந்திருந்தார். மெல்ல நகர்ந்து அவரிடம் சென்றேன். நடந்ததைக் கூறி அளுபெத்தைக்குச் செல்ல வேண்டும் எனக் கூறினேன். தான் அந்த ஊரைத் தாண்டிப் பயணிப்பதாகவும், இறங்க வேண்டிய இடத்தைக் காண்பிப்பதாகவும் கூறினார். நான் அவருக்குப் பக்கத்திலேயே நின்றுகொண்டிருந்தேன். இறங்கும் இடம் வந்தது. அப்போது பாதையை இருள் கவ்வியிருந்தது. பேரூந்து வெளிச்சம் மறைந்ததற்குப் பின்னர் நடுக் காட்டில் விடப்பட்டது போன்ற ஓர் உணர்வோடு, மொனராகலை பதுளை பிரதான வீதியிலிருந்து உள்நோக்கிச் செல்லும் காட்டுப் பாதையை நோக்கி எட்டுக்களை எடுத்து வைத்தேன்.



அபூ ஆகிப் ஸெய்ன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தேசிய கராத்தே போட்டியில் வெண்கலம் வென்ற அம்ஹர்




சென்ற 24 ஆந் திகதி சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற 7வது தேசிய ரீதியிலான Full Contact கராத்தே சாம்பியன் போட்டியில் மொஹமட் அம்ஹர் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியா லயத்தின் மாணவரான இவர், ஆசிரியர் களான மொஹமட் ரிஸ்வான் மற்றும் பாதிமா ரயீஸா ஆகியோரின் அன்புப் புதல்வருமாவார்.

இதேபோட்டியில் 14 வயதிக்குட்பட்டவர்களுக்கான பிரிவில் கஹட்டோவிட்டயைச் சேர்ந்த ஆக்கிப் பிஸ்தாமி வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

- கஹட்டோவிட்ட ரில்மி

# எழுச்சி கண்டுவரும் பங்களாதேஷ்



அண்மைக் காலமாக இடம்பெற்று வருகின்ற கிரிக்கெட் தொடர்களில் பங்களாதேஷ் அணி சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தி வருகின்றது. குறிப்பாக தமது சொந்த மண்ணில் இடம்பெறும் தொடர்களில் அசைக்க முடியாத ஓர் அணியாக வலம் வந்து கொண்டிருக்கிறது பங்களாதேஷ். 2015ம் ஆண்டு தொடக்கம் பங்களாதேஷ் வீரர்களின் ஆக்ரோஷமான துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்பன எதிரணிகளை மிரளச் செய்துள்ளன.

அந்தவகையில், கடந்த வருடம் இடம்பெற்ற ஒரு நாள் தொடர்களில் பலம் பொருந்திய பாக்கிஸ்தான் (3-0), இந்தியா (2-1), தென்னாபிரிக்கா (2-1) அணிகளை தமது சொந்த மண்ணில் மண் கவ்வச் செய்ததோடு சிம்பாப்வே அணியையும் (3-0), ஆப்கானிஸ்தான் அணியையும் (2-1) வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த மாதம் இங்கிலாந்துடனான ஒரு நாள் தொடரை கடுமையாகப் போராடி (2-1) இழந்தது. பங்களாதேஷ் அணியின் அபாரமான இந்தப் பெறுபேறுகள் காரணமாக கிரிக்கெட் ஜாம்பவான்களான பாக்கிஸ்தான் மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளை பின் தள்ளி ஒரு நாள் அணிகளுக்கான தரவரிசையில் 95 புள்ளிகளோடு 7ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இந்த நிலையில் இங்கிலாந்து அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியில் வெற்றியின் விளிம்பு வரை சென்ற பங்களாதேஷ் அணி வெறும் 22 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. கடந்த வாரம் முடிவுற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 108 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற பங்களாதேஷ் டெஸ்ட் கிரிக்கட் வரலாற்றில் முதற் தடவையாக இங்கிலாந்து அணியை வீழ்த்தி சாதனை படைத்தது.

இந்தப் போட்டியில் 273 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு சிறப்பான முறையில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த இங்கிலாந்து அணியின் பத்து விக்கட்டுக்களும் இறுதி 64 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். புதுமுக சுழற்பந்து வீச்சாளரான மெஹ்தி ஹஸன் 6 விக்கட்டுக்களையும் சகிப் அல் ஹஸன் 4 விக்கட்டுக்களையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது டெஸ்ட் போட்டியில் களம் இறங்கிய மெஹ்தி ஹஸன் இந்தப் போட்டியில் 159 ஓட்டங்களைக் கொடுத்து 12 விக்கட்டுக்களை வீழ்த்தியதன் மூலம் போட்டியின் சிறப்பாட்டக்காரராக தெரிவு செய்யப்பட்டார். பங்களாதேஷ் அணி வீரர் ஒருவரின் அதிசிறந்த பந்து வீச்சுப் பிரதியாகவும் இது பதிவானது.







2016ஆம் ஆண்டுக்கான தேசியமட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகள் அண்மையில் கண்டி போகம்பர மைதானத்தில் இடம்பெற்றது. இதில் முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரி மாணவர்களான ஏ.ஆபித் நீளம் பாய்தலில் (19 வயது பிரிவு) வெண்கலப் பதக்கத்தையும் எச்.எம்.ரிஹான் ஈட்டியெறிதல் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் வென்றெடுத்தனர்.

இவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 17ஆம் திகதி பாடசாலை அதிபர் மஹ்றூப் தலைமையில் இடம்பெற்றது. பிரதம அதிதியாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஆர்.எம். சுபைர் கலந்து சிறப்பித்தார். (எம்.எஸ்.அப்துல் ஹலீம்)

Towards a Drug-Free Nation

போதைப் பொருளற்ற தேசத்தை நோக்கி...

மீள்பார்வை கலண்டர் 2017



ஊடகங்கள் வாயிலான தஃவாப் பணியே இன்றைய காலத்தின் முதன்மைத் தேவை



மீள்பார்வை
මීල්පාර්වෛ

- சமூக மாற்றத்திற்காக 20 வருடங்களுக்கு மேலாக குரல் கொடுத்து வரும் மீள்பார்வையை நிதி ரீதியாக பலப்படுத்தும் நோக்கில் நவம்பர் 18–25 வரையான காலப் பகுதி மீள்பார்வை வாரமாக அனுஷ்டிக்கப்படுகிறது.
- இதன் ஒரு அங்கமாக மீள்பார்வை கலண்டர் விற்பனைக்கு வருக்கிறது.
- உங்களுடைய ஸதகாக்களை வாரி வழங்கி சமூக மாற்றத்தில் நீங்களும் பங்காளிகளாக மாறுங்கள்.

Meelparvai Media Fund
A/C Name : Meelparvai Media Centre (Pvt) Ltd.
A/C No : 1170011713
Commercial Bank
Old Moor Street Branch
Call : 077 2435146

Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dhamma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org